www.padippakam.com

# புரட்சிப் புயல்

தமிழ் மாநில அமைப்புக் கமிட்டியின் இதழ்
இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)
தமிழ்நாடு

ஆண்டு 19 | ஏப்ரல் 1993 | விலை ரூ.5.00

## வர்க்க எதிரிகளை அழித்தொழிப்பதிலிருந்து வர்க்க அரசியலை அழித்தொழிக்க முயல்வது வரை: வி.எம்.குழுவின் கட்சிக் கலைப்புவாத பயணம் - ஒரு சுருக்கம்

பற்றி எரியும் ஒவ்வொரு அரசியல் பிரச்சினையும் சமரசவாதிகளை அம்பலப்படுத்துகின்றன. ஒவ்வொரு அம்பலப்படுத்தலுக்குப் பிறகும் அவர்கள் ஆளும் வர்க்க அரசியல் நிலைப்பாட்டை நோக்கி நகர்கிறார்கள். இதோ, அதன் நிரூபணமாக, இ.க.க.வினர் காங்கிரசை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள், இ.க.க.(மா)-வினர், இ.க.க.-வை நோக்கி போய்க் கொண்டிருக்கிறார்கள்; வினோத் மிஸ்ராக்கள் இ.க.க.(மா)-வை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

நாம் சொல்வது இருக்கட்டும்; நேரடியாக குதிரையின் வாயிலிருந்தே இதைக் கேளுங்கள்:

''சாராம்சத்தில், பழைய இ.க.க.-வின் நிலைப்பாடான 'தேசிய ஜனநாயகப் புரட்சி'யை நோக்கி இ.க.க.(மா) நகர்ந்து கொண்டிருக்கிறது. இதற்கேற்ற வகையில் கட்சித் திட்டம் மாற்றப்படுவது மட்டுமே பாக்கி உள்ளது. இ.க.க.-வைப் பொருத்த வரையில் மார்க்சிய பதாகையையும், கம்யூனிஸ்ட் கட்சியையும் அதிகாரபூர்வமாக விட்டு விட்டு அதனிடத்தில் ஒரு ஜனநாயக சோசலிசக் கட்சியைக் கட்டும் நிலைக்குச் செல்வது கீழிருந்து வந்த நிர்ப்பந்தத்தால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. நாங்கள் எங்களுடைய பங்கிற்கு, எங்களது மொத்த புரட்சிகர கண்ணோட்டத்தில், இ.க.க. (மா)-வால் கைவிடப்பட்ட சில நிலைப்பாடுகளை இணைத்துக் கொண்டுள்ளோம். புதிய சூழ்நிலைமைகளில் மூன்று முக்கிய அமைப்புகளும் இவ்வாறுதான் தங்களது நிலைப்பாடுகளை மீண்டும் சரிப்படுத்திக் கொண்டுள்ளன.'' (வி.எம்.தலைமையிலான, இ.பொ.க.(மா.லெ), லிபரேஷன் குழுவின் ஐந்தாவது அகில இந்திய கட்சிக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்பு அறிக்கை, பக்.42.)

1988 ஜனவரியில் நடந்த அவர்களது அகில இந்திய நான்காவது கட்சிக் காங்கிரசிற்கு முன்பே தேர்தல் பாதைக்கு திரும்பினர். நான்காவது கட்சிக் காங்கிரசில் மேலும் வலது சந்தர்ப்பவாத நிலைக்கு சரியத் தொடங்கினர். சோவியத் யூனியனை சமூக ஏகாதிபத்தியம் என்று சித்தரித்தது தவறு; மாறாக அது ஒரு சோசலிச நாடே என்றும், இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்ற நாடு என்றும், இந்தியப் பெருமுதலாளிகளை தரகு முதலாளிகள், சார்பு முதலாளிகள், ஏகபோக முதலாளிகள் என எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம் என்றும் முடிவெடுத்தனர்.

1992 டிசம்பர் இறுதியில் நடந்த அவர்களது ஐந்தாவது கட்சிக் காங்கிரஸ், வலது சந்தர்ப்பவாத பாதையில் இ.க.க.(மா) நிலைப்பாட்டிற்கு சென்றுவிட்ட ஒரு பாய்ச்சலைக் குறிக்கின்றது. கட்சியை முற்றிலும் வெளிப்படையாக கொண்டு வந்துவிட்டனர்; மாநில அரசுகளில் பதவிக்கு வருவதையே குறிக்கோளாக பேச ஆரம்பித்து விட்டனர்; 'தேர்தலுக்கு தயாராக இருங்கள்' என்பதே அணிகளுக்கான அவர்களது அறைகூவலாக இருக்கின்றது. இ.க.க.(மா) போலவே, கோர்பசேவின் சீர்திருத்தங்களை ஆரம்பத்தில் ஆதரித்தனர்; அப்பட்டமான முதலாளித்துவ பாணி ஆட்சிக்கான படிக்கட்டுகளே இந்த சீர்த்திருத்தங்கள் என்று வெளிப்படையாக அம்பலமான பின்னர், இ.க.க.(மா) போலவே கோர்பசேவை நம்ப வைத்து ஏமாற்றியவர் என்று கண்டித்தனர்; சீனாவில் இன்றும் சோசலிசம் தழைத்தோங்குவதாக தம்பட்டம் அடிக்கின்றனர். ஃபிடல் காஸ்ட்ரோவை புகழ்கிறார்கள்; இப்படி இவர்கள் ஏறத்தாழ இ.க.க.(மா)-வாக மாறி விட்டனர். பங்கு பிரித்துக் கொண்டு போய், வீண் விரயம் செய்து விட்டு, மீண்டும்

படிப்பகம்

www.padippakam.com

வீட்டை நாடி வந்த 'துஷ்ட' மகனைப் போல லிபரேஷன் குழுவை இ.க.க. வும் இ.க.க.(மா)-வும் கருதுகின்றன; தாய் போல இ.க.க. அந்த 'துஷ்ட' மகனை பார்த்தோடு அரவணைத்துக் கொண்டு விட்டது; இ.க.க.(மா)-வோ, தந்தையைப் போல முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு, 'முழுசா திருந்திவிட்டான் என்று சொல்ல முடியாது; அவன் நடந்துக்கிறத வச்சுதான் தீர்மானிக்கனும்' என்று சொல்கிறது.

ஆனால், தேர்தல் ருசி கண்டவர்கள் வலது சந்தர்ப்பவாத பாதையில் இருந்து சரியான பாதைக்கு திரும்பியதாக சரித்திரம் இல்லை; லிபரேஷன் குழுவினர் இன்னும் வலது நோக்கி, இ.க.க. நோக்கி செல்லவே வாய்ப்புள்ளது. இனி, அக்குழு எப்படி இ.க.க. (மா) நிலைப்பாட்டிற்கும், கலைப்புவாத கும்பலாகவும் மாறியுள்ளது என்பதைப் பார்ப்போம்.

மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையையே தனது நடவடிக்கைக்கான வழிகாட்டியாக ஏற்றுக் கொள்வதாக லிபரேஷன் குழு தெரிவிக்கிறது. ஆனால் ஒவ்வொரு நடைமுறைப் பிரச்சினையிலும் அவர்கள் மா-லெ-மா சிந்தனையை நிராகரிக்கிறார்கள்; மறுத்து ஒதுக்குகிறார்கள்.

''இருப்பினும் செக்கோஸ்லோவாகிய நிகழ்ச்சியின் பின்னர், சீனத் தலைமை கூறியதை வைத்துக் கொண்டு நாமும் சோவியத் யூனியனை 'சமூக ஏகாதிபத்தியம்' என்று அழைத்தோம். இந்த விவரிப்பானது சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் ஒரு சந்தர்ப்பவாதப் போக்கு என இனியும் குறிப்பிட முடியாது. எழுபதுகளின் நடுவில் ''சமூக ஏகாதிபத்தியம்'' என்ற இந்த வரையறையை வலுப்படுத்த ரசியாவில் நிதி மூலதனம் மற்றும் ஏகபோகங்களின் வளர்ச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் அது உலகை மறுபங்கீடு செய்து கொள்வதில் ஈடுபட்டுள்ளது என்றும், புதிதாக வந்துள்ளதால் ஆக்கிரமிப்பு சக்தி என்றும் வர்ணிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்கு முன்பிருந்த சூழ்நிலையிலிருந்து இணையாகக் கருதப்பட்டு ஹிட்லரின் ஜெர்மனியுடன் சமன்படுத்தப்பட்டும் அது ஒரு மூன்றாம் உலகயுத்த அபாயத்தின் பிரதான தோற்றுவாய் எனவும் சித்தரிக்கப்பட்டது. இத்தகைய தத்துவப் பயிற்சிகள் அனைத்துமே முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட தத்துவ வடிவமைப்பினுள் தேர்ந்தெடுக்கப்பட்ட சான்றுகளைப் பொருத்துகின்ற விஷயமேயன்றி வேறில்லை என்பது தெளிவு'' (வி.எம். குழுவின் நான்காவது அகில இந்திய கட்சிக் காங்கிரசின் ஆவணங்கள், 1-5 ஜன 1988, பக் 1-1-10)

''சில அதிகார வர்க்கத் தாறுமாறான தன்மைகள் இருந்த போதிலும் சோவியத் யூனியனில் உற்பத்தி உறவுகள் பரந்த அளவில் சோசலிசமாக நிலவுகின்றன. கிழக்கு ஐரோப்பிய நாடுகள், வியட்நாம், வடகொரியா, கியூபா, நிகாரகுவா இன்னபிற நாடுகளுடனான சோவியத் யூனியன் உறவுகள் சுரண்டும் தன்மை கொண்டதாகக் கூற முடியாது'' (அ.பக். 1-1-12)

இவ்வாறு, சோவியத் யூனியன் பற்றிய மா-லெ-மா. சிந்தனையை அப்பட்டமாக மறுக்கிறார்கள். மாவோவும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் வைத்த வரையறுப்பு இட்டுக்கட்டப்பட்டது என்கிறார்கள்.

சீனா, வியட்நாம், கொரியா, கியூபா போன்ற நாடுகள் இன்னமும் சோசலிச நாடுகளாகவே நீடிக்கின்றன என்பதும் இவர்களின் நிலைப்பாடாகும். டெங் தலைமையில் சீனத்தில் நிலவும் முதலாளித்துவ சமுதாய அமைப்பை, சீனத் தன்மைக்கேற்ற வகையில் கட்டப்பட்டு வரும் சோசலிச அமைப்பு என்றும் சித்தரிக்கின்றனர். சரியான திசைவழியில் இது எடுத்துச் செல்லப்படுவதாகவும் இவர்கள் சான்றிதழ் கொடுக்கிறார்கள்.

''சீனத் தன்மைகளோடு சோசலிச சீனத்தைக் கட்டும் சீனத்து மக்களின் மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சிகளை நாங்கள் ஆதரிக்கிறோம். சீ.க.க. அண்மையில் தனது 14 வது கட்சிக் காங்கிரசை வெற்றிகரமாக நடத்தியது. இதில் சோசலிசக் கட்டுமானம் பற்றிய எட்டாவது கட்சிக் காங்கிரசின் வழி முற்றிலும் திருப்பி நிலைநாட்டப்பட்டது. சோவியத்தின் தகர்விற்குப்பின் சோசலிசத்தின் நெருக்கடி பற்றி கோட்பாட்டளவில் தீர்க்கும் அவர்களது முயற்சியின் முகத்தான் சோசலிச சந்தைப் பொருளாதாரம் என்று அவர்களால் அழைக்கப்படும் ஒரு கருத்தோட்டத்துடன் சீனத் தோழர்கள் முன்வந்தனர். நாங்கள் அவர்களது கோட்பாடுகளையும், நடைமுறைகளையும் ஆவலுடன் கற்று வருகிறோம். அதே சமயத்தில் அடிமட்ட அளவில் தலைவர் மாவோவின் செல்வாக்கு மீண்டும் அதிகரித்து வருவதையும் நாங்கள் கவனிக்காமல் இல்லை. 1950-களிலும் 1960-களிலும் இருந்த அந்த நல்ல நாட்களுக்கு மீண்டும் திரும்பிப்போக மாட்டோமா என்ற ஏக்கத்தின் அடையாளச் சின்னமே தலைவர் மாவோவின் செல்வாக்கு உயர்ந்து வருவதாகும்'' (5-வது கட்சி காங்கிரஸ் நிறைவேற்றிய அ.அ.அ., பக் 13-14)

மாவோ உயிருடன் இருக்கும்போது, சோசலிச கட்டுமானம் பற்றி டெங் முன்வைத்த கருத்துக்கள் சீனாவை மீண்டும் ஓர் அரைக்காலனியாக்கும் கொள்கையே என்று சீ.க.க வால் நிராகரிக்கப்பட்டவையாகும். அந்த டெங்கின் தலைமையில் இன்று சீனாவில் முதலாளித்துவம் மீண்டும் நிலைநாட்டப்பட்டு பல்வேறு ஏகாதிபத்தியங்களின் தடையற்ற சுரண்டலுக்கு திறந்து விடப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக வேலையில்லாத் திண்டாட்டம் தோன்றி, பெருகியும் வருகிறது; விலைவாசிகள் உயர்ந்து வருகின்றன. வாழ்க்கைத் தரம் குறைந்து கொண்டே போகின்றது பட்டினி - பிச்சை எடுத்தல் அதிகரிக்கின்றன; ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. 1950-களிலும் 1960-களிலும் இருந்த நல்ல நாட்களுக்குத் திரும்பி போக மாட்டோமா என்ற ஏக்கம் மக்களிடையே இருப்பதாக வி.எம்.குழுவே சொல்வது இவற்றையே நிரூபிக்கின்றன. இன்றுள்ள இந்த சீன சமுதாய அமைப்பை சீன குணாம்சங்களுக்கேற்ப சோசலிச அமைப்பு என்று வர்ணிப்பதன் மூலம் வி.எம்.குழு, மாசேதுங் சிந்தனையை மறுக்கிறது; நவீன திரிபுவாதிகளின் (இடதுகளின்) நிலைப்பாட்டிற்கே இறங்கிச் சென்றும் விடுகிறது.

சோசலிச சமுதாயத்தில் (எந்த வர்க்க சமுதாயத்திலும்) நிலவும் வர்க்கப் போராட்டம், உற்பத்திக்கான போராட்டம், விஞ்ஞான பரிசோதனை ஆகிய மூன்று போராட்டங்களில் வர்க்கப் போராட்டமே கேந்திரமானது. அதை இறுகப் பற்றி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றும், பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடு என்றும் மாவோ வரையறுத்திருந்தார். முதலாளித்துவ பாதையாளர்களை களையெடுக்க கலாச்சார புரட்சியும் நடத்தினார். ஆனால் இன்றைய சீ.க.க-வோ உற்பத்திச் சக்திகளின் போதிய வளர்ச்சியின்மைக்கும் வளர்ந்துவரும் மக்களின் தேவைக்கும் இடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடு என்றும் எனவே உற்பத்திக்கான போராட்டமே கேந்திரமான கண்ணி என்றும் தீர்மானித்து அமுல்படுத்தி வருகின்றது. டெங்கின் குருவான லியு ஷாவோ ஷி யின் கோட்பாடுதான் இது. எட்டாவது கட்சிக் காங்கிரசில் இந்தக் கோட்பாடுதான் மாவோவின் எதிர்ப்பிற்கும் இடையே நிறைவேற்றப்பட்டு, அப்போதே (1958 - 60 லேயே) முதலாளித்துவத்தை மீட்டெடுக்க முயற்சி நடந்தது. இந்த சதித்



படிப்பகம்

www.padippakam.com

திட்டத்தை அம்பலப்படுத்தி கட்சி அணிகளிடம் சென்று அணி திரட்டி, கலாச்சாரப் புரட்சி மூலம் முறியடித்தார் மாவோ. மாவோ முறியடித்த எட்டாவது காங்கிரசின் அப்கீர்த்திப் பெற்ற அந்தக் கோட்பாட்டை இன்றைய சீனத் தலைமை உயர்த்திப் பிடிக்கிறது. அதை வி.எம்.குழு ஆதரிப்பதன் மூலம் மாசே துங் சிந்தனையை மறுக்கிறது.

ஒருபக்கம் மறைமுகமாக மாசேதுங் சிந்தனையை மறுக்கும் லிபரேசன் குழு, தனது 'அடிப்படை ஆவணங்கள்' (5-வது காங்கிரசில் நிறைவேற்றப்பட்டவை) என்பதில் மாவோவின் கோட்பாட்டையும் உயர்த்திப் பிடிப்பதாக சொல்கிறது.

''சோசலிச சமுதாயத்தில் வர்க்கங்கள் இருப்பது; கம்யூனிஸ்ட் கட்சியில் அதன் பிரதிபலிப்பு; முதலாளித்துவ மீட்சி அபாயம்; சோசலிசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையிலான போராட்டத்தின் முடிவு இன்னும் தீர்க்கப்படாமல் இருப்பது ஆகிய மாவோவின் கோட்பாடுகள் வரலாற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன'' (அடிப்படை ஆவணங்கள் பக்-1)

மார்க்சிய - லெனினியத்தை வாழ்க என்று முழக்கமிட்டுக் கொண்டே அதற்கு குழிபறிக்கவும் செய்வதுதான் குருச்சேவ் முதல் டெங் வரையிலான திரிபுவாதிகள் வழக்கமாகும். அவர்களின் வழியில்தான் லிபரேஷன் குழுவும் செல்கிறது. ஆனால் சப்பாத்தியையும் சாக்கடையையும் கலந்துண்ணும் இந்தக் கலையில் லிபரேஷன் குழுவினர் கைதேர்ந்தவர்கள் என்பது ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மையாகும்.

மூன்றுலகக் கோட்பாட்டை டெங் உயர்த்திப்பிடித்து, அதைக் கேடாக பயன்படுத்தி சோவியத்திற்கு எதிராக அமெரிக்காவுடன் ஐக்கிய முன்னணி என்ற அளவிற்கு சென்றார். அதைப் பின்பற்றி லிபரேஷன் குழுவும் மூன்றுலக கோட்பாட்டை மிகவும் உயர்த்திப் பிடித்தது; அதன் ஒளியில் இந்தியாவில் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் மற்றும் அதன் ஆதரவு சக்திகளுக்கு எதிராக அமெரிக்க ஆதரவு சக்திகளுடன் சேர்ந்து பாசிச எதிர்ப்பு முன்னணி கட்டப்போவதாக கூறியது. அதன் பின் டெங் ஷியோவோ பிங் மெல்ல மெல்ல மூன்றுலகக் கோட்பாட்டை பேசாமல் விட்டு, இறுதியில் அதைக் கைகழுவி விட்டார்; அதேபோல லிபரேஷன் குழுவும் செய்துவிட்டது.

1988 ல் நடந்த நான்காவது கட்சிக் காங்கிரசிலும் சரி, 1992 ல் நடந்த ஐந்தாவது கட்சி காங்கிரசிலும் சரி மூன்றுலகக் கோட்பாடு பற்றிய எவ்வித குறிப்பும் இல்லை; ஏற்கிறார்களா, மறுக்கிறார்களா என்ற கணிப்பே இல்லை. இன்றைய உலக நிலைமையில் அரசியல் (வர்க்க) சக்திகள் எப்படி அணிவகுத்து நிற்கின்றன என்ற வரையறுப்பு எதுவும் இவர்களின் காங்கிரசு ஆவணங்களில் இல்லை. யார் எதிரி, யார் நண்பர்கள், என்ன கடமைகள் என்ற முடிவுகள் இல்லை. இருக்கலாம்; நடக்கலாம்; போகலாம்; ஒரேயடியாக புறக்கணித்துவிட முடியாது என்று தினமணி தலையங்க பாணியில் அமெரிக்கா, ஐரோப்பா, ருசிய, சீனா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், தெற்கு ஆசியா, மூன்றாம் உலகம் ஆகியவை பற்றிய சில விபரங்கள், நிலைமைகள் பற்றிய தொகுப்புதான் இருக்கின்றன.

1988 ஜனவரியில் நடந்த நான்காவது அகில இந்திய கட்சிக் காங்கிரசில் இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்று விட்டதாக அறிவித்தனர். ''இந்தியா அரசியல் சுதந்திரம் அடைந்திருந்தாலும் அது பொருளாதாரரீதியில் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்தே உள்ளது.'' (4-வது கட்சிக் காங்கிரசு ஆவணங்கள், பக் 4-1-2)

இந்தியப் பெருமுதலாளி வர்க்கத்தின் தன்மை மற்றும் இந்திய சமூகம் பற்றி லிபரேஷன் குழு இந்தக் காங்கிரசில் எடுத்த முடிவானது அவர்களது அரசியல் - சித்தாந்த ஒட்டாண்டித்தனத்தையும், கோட்பாடுகளையும் - வரையறுப்புகளையும் கேலிச் சித்திரமாக்கும் அவர்களது பச்சை சந்தர்ப்பவாதத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக இருக்கிறது. அவர்கள் சொல்கிறார்கள்:

''இந்த சமூகத்தை **ஏகபோக முதலாளித்துவம்** என்று விவரிக்கலாம். ஒரு சில ஏகபோக முதலாளிகளின் கைகளில் கணிசமான அளவு மூலதனம் குவிந்தும், மையப்படுத்தப்பட்டும் இருக்கின்றது. இதன்னியில் இந்திய மூலதனம் **பன்னாட்டுமயமாக்கப்படுவது** என்பதும் ஒரு உறுதியான போக்காக இருக்கிறது.'' (ஷ, பக். 3-1-1)

''அடுத்து வணிக வங்கிகள், இதர நிதி நிறுவனங்கள் மற்றும் பொருளாதரத்தின் அடிப்படை உள்கட்டுமானங்கள் ஆகிய அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் அரசு ஏகபோக முதலாளித்துவ சமூகம் என்று அது (இந்திய சமூகம்) விவரிக்கப்படலாம்.'' (ஷ, பக். 3-1-2).

''மறுபடியும் அது (இந்திய சமூகமானது) சார்பு முதலாளித்துவம் என்றும் விவரிக்கப்படலாம்.'' (ஷ, பக். 3-1-2)

1992 டிசம்பர் இறுதியில் நடந்த ஐந்தாவது கட்சிக் காங்கிரசிலும் இந்த நிலைபாடுகளையே உறுதி செய்துள்ளார்கள். இவ்வாறு அவர்கள் இ.பொ.க. (மாலெ)-யின் அடிப்படை நிலைப்பாடுகளை துறந்து விட்டு கலைப்புவாதத்தை மேற்கொண்டு இ.க.க. (மா)-வின் நிலைப்பாட்டிற்குச் சென்றுள்ளனர்.

தேசிய நிலைமை பற்றிக் கணிப்பதற்கும், கடமைகளை வகுப்பதற்கும் லிபரேஷன் குழு, யு.த., போ.த.அடிப்படையைப் பின்பற்றவில்லை. அந்த அடிப்படையில், இன்றைய நிலையில் நாடு எந்த அரசியல் போக்கில் செல்கிறது; மொத்த நாட்டையும், மக்களையும் எதிர்நோக்கியுள்ள பிரதான அரசியல் பிரச்சினை என்ன? அதற்கு நாம் என்ன மாற்று அரசியல் வழி வைக்கிறோம்? அதையொட்டி எதிரிகள் யார், சமரசசக்திகள் யார், ஐக்கிய முன்னணி திட்டம் ஆகியவை இல்லை; மாறாக மசூதி இடிக்கப்பட்டது, அந்தப்பிரச்சினையில் கட்சிகளை பற்றிய விமர்சனம், புதிய பொருளாதாரக் கொள்கை, மதவெறிக்கு எதிராக மக்கள் திரளின் முன்முயற்சியைக் கட்டவும், தற்போதைய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பொது அறிவுரை; இடதுசாரி ஜனநாயக மாற்றை மக்களின் முன் வைக்க வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம்; 1989 ல் ஜனதா தளம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து தொடங்கி இன்றுவரை நடந்த முக்கிய நிலைமை என அவர்களது அறிக்கை நீள்கிறது. இறுதியாக தேர்தலுக்காக ஏங்கி அவர்கள் விடுத்துள்ள அறைகூவல் அவர்கள் எப்படி சீரழிந்துவிட்டார்கள் என்பதற்கும், இ.க.க. (மா)-வாக ஆகிவிட்டார்கள் என்பதற்கும் அத்தாட்சியாக உள்ளது; அவர்கள் சொல்கிறார்கள்: ''அயோத்திப் பிரச்சினைக்குப் பிறகு காங்கிரசு கட்சியின் நம்பகத்தன்மை மிகவும் வீழ்ந்துவிட்ட நிலையில், நாடாளுமன்றத்தில் காங்கிரசு கட்சியின் நூலிழை பெரும்பான்மை மீது உட்கட்சி சண்டைகள் கடுமையான நெருக்கடிகள் தந்து கொண்டிருக்கிற நிலையில், அரசியல் சூழ்நிலை கொந்தளித்து கொண்டிருக்கும் நிலையில் மீண்டுமொரு இடைத்தேர்தல் வருவதற்கான சாத்தியம் நிச்சயமாக உள்ளது. எனவே 'மக்களிடையே செல்க' என்று காலத்தால் நிரூபிக்கப்பட்ட நமது முழக்கத்துடன் சவாலைச் சந்திக்க தயாராக இருக்க வேண்டும்.'' (ஐந்தாவது காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட அ.அ.அ., பக்-25)



படிப்பகம்

www.padippakam.com

அடுத்து, அறிக்கையானது 'பற்றி எரியும் பிரச்சினைகள்' மீது கருத்து சொல்வதாக நீளுகிறது. ஆனால் அரசியல் கடமைகள், ஐ.மு. திட்டம் என்று எங்கேயும் இல்லை; இவ்வாறு இவர்கள் இ.க.க.(மா) போலவே தேசிய நிலையைக் கணிக்கிறார்கள்; ஏற்கனவே இ.க.க.(மா) பாணியில் பொருளாதாரவாதத்தில் சிக்கியுள்ள லிபரேஷன் குழு, அதேபாணியில் அரசியல் நிலைமையைக் கணித்து செயல்படுவது வியப்புக்குரிய ஒன்றல்லதான்!

பாசிச - பார்ப்பன இந்துமதவெறிக் கும்பல் இன்று பிரதான அபாயமாக, முறியடிக்கப்பட வேண்டிய உடனடி எதிரியாக இருக்கின்றது. ஆனால், இக்குழு இவ்வாறு வரையறுக்கவில்லை; பொதுவாக மதவெறியை முறியடிப்பது, இந்து - முஸ்லிம் ஒற்றுமையைக் கட்டுவது, சரியான கோணத்தில் மதச்சார்பின்மையை மக்களிடையே கொண்டு செல்தல் என்று மட்டுமே கூறுகிறது. இந்து - இந்தி - இந்துஸ்தான் என்ற நோக்கத்தை நிறைவேற்ற பாசிச - பார்ப்பன சக்திகள் செயல்படும் முறை, அதற்கு எதிரான போராட்ட முறைகள் என்று முன்வைக்கவில்லை. கொடிய இந்து மதவெறியையும், அதன் எதிர்விளைவானதும், சிறியதுமான முஸ்லீம் மதவெறியையும் சமமாக வைத்து பொதுவாக மதவெறி எதிர்ப்பு, மக்கள் ஒற்றுமை, மதச்சார்பின்மை என்பதெல்லாம் பிரதான எதிரியான ஆர்.எஸ்.எஸ். இந்துமதவெறி பாசிஸ்டுகளை பாதுகாப்பதாகும்; அவர்களுக்குத் துணைபோவதாகும். இந்தப் பிரச்சினையிலும் லிபரேஷன் குழு இவ்வாறு இடதுகளின் பாதையிலேயே செல்ல ஆரம்பித்துள்ளது.

தனது கட்சித் திட்டத்தில் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையைப் பெற்றுள்ள தேசிய இனங்களின் ஜனநாயகப்பூர்வமான கூட்டரசு அமைப்போம் என லிபரேஷன் குழு அறிவித்துள்ளது. இவ்வாறு அறிவித்திருப்பது தனது அணிகளை ஏமாற்றவும், பிற குழுக்களின் அம்பலப்படுத்தல்களிலிருந்து தப்பவும்தான். உண்மையில் தேசிய இனப் பிரச்சினையில் அக்குழுவின் நிலைப்பாடு நவீன திரிபுவாதிகளின் நிலைப்பாடுதான் என்பதற்கான ஆதாரங்கள் அவர்களது அ.அ.அ.யில் உள்ளன.

முதலாவதாக, காஷ்மீர் பிரச்சினையில் இன்றைய கட்டத்தில் தனிநாடு கோரிக்கையையோ, காஷ்மீரின் எதிர்காலம் (தனி நாடாகப் போவதா அல்லது பாகிஸ்தானோடு சேருவதா அல்லது இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருப்பதா என்பது) குறித்து அம்மக்களிடம் ஓட்டெடுப்பு நடத்துவதையோ தாம் ஆதரிக்கவில்லை என்று கூறுகின்றனர். காஷ்மீரில் இந்திய அரசானது அடக்குமுறையை விலக்கிக் கொண்டு, போராளிகளுக்கு பொதுமன்னிப்பு அளித்து, சிவில் - ஜனநாயக உரிமைகளை நிலைநாட்ட வேண்டும்; பின்னர் இந்தியாவின் கட்டுக்கோப்புக்குள்ளேயே சுய அரசாங்கம் என்ற எல்லையை ஒட்டிய சுயாட்சி வழங்கப்படுவது குறித்து பேச்சு வார்த்தை தொடங்க வேண்டும் எனக் கூறுகின்றனர். மொத்தத்தில் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை காஷ்மீருக்கு பிரயோகிக்கக்கூடாது என்கின்றனர். அதன் மூலம் கட்சித் திட்டத்தில் தாங்கள் அறிவித்திருப்பது அணிகளை ஏமாற்றவே என்பதை நிரூபிக்கின்றனர்.

இரண்டாவதாக, தேசிய ஐக்கியம் பற்றி அ.அ.அ. - யில் அவர்கள் கூறியிருக்கும் விஷயமாகும். அவர்கள் சொல்கிறார்கள்: ''காலனிய ஆட்சிக்கு எதிரான நீண்டகால போராட்டத்தின் ஊடாக தனது தேசியத்தன்மையை ஈன்ற ஒரு நாட்டின், ஏகாதிபத்தியத்திடமிருந்து நவீன காலனிய மிரட்டலை எதிர்நோக்கியுள்ள ஒரு நாட்டின் கம்யூனிஸ்டுகளாகிய நாங்களும் தேசிய ஐக்கியத்தை பெருமையோடு ஏற்கிறோம். இந்தியாவை ஐக்கியப்படுத்துவது தனது கோட்பாடு ரீதியிலான் குறிக்கோள் என்று இ.பொ.க. (மா-லெ) தனது தோற்றத்தின் போதே பிரகடனப்படுத்தியுள்ளது. நமது மாபெரும் நாடு பிரிக்கப்பட்டதை இல்லாது செய்யும் வகையில் இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம் ஆகியவைகளை உள்ளடக்கிய ஒரு கூட்டிணைவைக்கூட நாங்கள் எண்ணிப் பார்க்கிறோம். காலிஸ்தான் கோரிக்கையையோ, சுதந்திரமான ஓர் அசாமையோ நாங்கள் என்றுமே ஆதரித்ததில்லை.''

''தேசிய ஐக்கியம் என்பது எல்லா பெரிய அரசியல் கட்சிகளுடையவும் கவலைக்குரிய பிரச்சினையாக இருக்கிறது. அது ஆளும் காங்கிரசு கட்சியாக இருந்தாலும் சரி, பி.ஜே.பி. யாக இருந்தாலும் சரி, சந்தர்ப்பவாத இடது அல்லது புரட்சிகர கம்யூனிஸ்டுகளானாலும் சரி.'' (5-வது காங்கிரசு அ.அ.அ.)

இந்த வாக்கியங்களின் பொருளும், தொனியும் அப்படியே ஆர்.எஸ்.எஸ்.-ன் இந்துத்துவக் கண்ணோட்டத்திலிருந்து எழுதப்பட்டிருப்பதை ஒருவர் நன்றாக உணரமுடியும். பஞ்சாப், காஷ்மீர் போன்ற மாநிலங்களில் அரசு நடத்தும் போலி மோதல்கள், திரளான படுகொலைகள் ஆகியவற்றை மட்டுமே கண்டிக்கிறார்கள். அதே சமயத்தில் வானொலி, வானொளி, மத்திய அரசு அலுவலகங்கள், பள்ளிகளில் இந்தி - இந்து - இந்துஸ்தான் என்ற கோட்பாடு அடிப்படையில் இந்தியும், இந்துமத பார்ப்பன கலாச்சாரமும் திணிக்கப்படுவதைப் பற்றி ஒரு வார்த்தை கூட கண்டித்து எழுதவில்லை. பொருளாதாரரீதியிலும், கல்வி, வர்த்தகம், தொழில் போன்ற துறைகளிலும் எதிர்க்கின்ற அமைப்புகள், இயக்கங்களை பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி தடா, என்.எஸ்.ஏ. சட்டங்களையும், இன்னபிற அரசு பயங்கரவாத முறைகளையும் ஏவி ஒடுக்குவதை பின்பற்றுவதைக் கண்டித்து ஒரு வார்த்தை கூட இல்லை. கண்டிக்காவிட்டால் சுயரூபம் தெரிந்துவிடும் என்ற தன்மையுடைய ஒடுக்குமுறைகளை மட்டும் (அதாவது போலி மோதல்கள், திரளான படுகொலைகள் முதலியன) ஒப்புக்காக கண்டித்துள்ளார்கள். மற்றபடி இவர்களின் உண்மையான நிலைப்பாடு ஆளும் வர்க்கங்களின் நிலைப்பாடே! இவர்களது அறிக்கையில் ஆங்காங்கே இந்தி வார்த்தைகளை அப்படியே பயன்படுத்தி இருப்பது இதற்கு ஒரு அத்தாட்சியாகும். இலங்கையில் தமிழர் பிரச்சினையில் 'பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை முன்வைக்காதது இன்னொரு அத்தாட்சியாகும். அங்கு தமிழர்களுக்கு அதிக சுயாட்சி' கிடைக்க ஆதரவளிப்பதாக மட்டுமே சொல்கிறார்கள். இவ்வாறு லிபரேஷன் குழு மேலும் பிற்போக்கு, வலது திசையில் சென்றுள்ளது.

இடதுசாரி கூட்டிணைவு ஒன்றை அமைக்க வேண்டும் என்று லிபரேஷன் குழு பேசுகிறது. அதேபோல இடதுசாரி ஜனநாயக முன்னணி அமைக்க வேண்டுமென்றும் கூறுகிறது. ஆனால் இடதுசாரி கட்சிகள் என்றோ, இடதுசாரி ஜனநாயக சக்திகள் என்றோ தீர்மானிப்பதற்கு எவ்வித வரையறையையும் இக்குழு முன்வைக்கவில்லை. அக்கூட்டிணைவிற்கான திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பவாத முன்னணி ஒன்றைக் கட்டப்போவதாக பல வருடங்களாக இ.க.க.-வும், இ.க.க.(மா)-வும் சொல்லி வந்தபோதிலும் இடதுசாரி என்பதற்கு எவ்வித வரையறையையும் அவை முன்வைக்கவில்லை. தேர்தல் ஆதாயத்தை எய்துவதற்கான உந்துபலகையாகவே இடது முன்னணிகள் செயல்பட்டன; காரணம் இடது என்பதற்கான வரையறையும், எவ்வித அரசியல் குறிக்



படிப்பகம்

www.padippakam.com

கோளும், திட்டமும் இல்லாமல் சந்தர்ப்பவாதமாக கட்டப்பட்டதுதான் இந்த 'இடது முன்னணிகள்.' மாநிலங்களில் ஆட்சிக்கு வருவது அந்த அரசுகளை வர்க்கப் போராட்டத்தின் ஆயுதமாக பயன்படுத்தவே என்றும் வலது, இடதுகள் வாய் வலிக்காமல் சொல்லி வருகின்றன. ஆனால் நடைமுறையிலோ அவை காங்கிரசு அமைச்சரவையின் மறுபதிப்பாகவே இருக்கின்றன. கம்யூனிசத்தின் மீதும், புரட்சியின் மீதும் மக்களுக்கு ஏற்கனவே இருக்கின்ற பிடிப்பையும், அடிமானத்தையும் அரித்தெடுக்கும் அமிலங்களாகவே செயல்படுகின்றன. நல்ல கட்சி ஆட்சிக்கு வரும் என்ற நம்பிக்கையை அற்றுப்போகச் செய்து அதிரடியாக நடந்து கொள்ளும் பிற்போக்கு பி.ஜே.பி. போன்ற அமைப்புகள் மற்றும் இந்துமதவெறி அமைப்புகளே எதிர்கால விமோசனம் என்ற நிலைக்கு மக்களை குறிப்பாக அணிகளைத் தள்ளிவிடும் கருவிகளாகவே இடதுசாரி - ஜனநாயக முன்னணி அரசுகள் செயல்பட்டு வருகின்றன. தேர்தல் பாதையே தேவாமிர்தம் என இறங்கியுள்ள லிபரேஷன் குழு தவிர்க்க முடியாமலும் தனது குருவின் பாதையிலேயே செல்வதில் விந்தையில்லைதான்!

ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லலாம். ம.யு. (போ). ஓடுகாலிகள், நவீன திரிபுவாதிகள் போல லிபரேஷன் குழுவினர் தங்களது சந்தர்ப்பவாதத்தை சந்தர்ப்பவாதமாக வைப்பதில்லை; நேரடியாகவே வைத்து விடுகிறார்கள். நாணயமாக நடைமுறைப்படுத்த உடனடியாக இறங்கியும் விடுவார்கள். 70களில் தளப்பிரதேசம் கட்டுவது என்ற நிலைப்பாட்டில் நின்றார்கள். கிராமப்புற தளப்பிரதேசம் என்றுதான் மாவோ சொல்லியுள்ளார். எனவே எல்லோரும் கிராமப்புறம் சென்று தளப்பிரதேசம் கட்டுவது என இறங்கினார்கள்; மார்க்ஸ் விவரித்த இந்திய விவசாயி போல அரசியல் வானில் என்ன நடந்தாலும் எனக்கென்ன என்ற பாராமுகத்துடன் கிராமங்களில் ஒட்டிக்கொண்டார்கள். கிராமம் கிராமமாக இரகசிய கொரில்லா குழுக்களையும், 'தளப்பிரதேசங்களையும்' கட்ட ஆரம்பித்தார்கள். அடக்குமுறை வந்தது; பின்னடைவு, அமைப்பு சிதறல் ஏற்பட்டது. சித்தாந்தங்களின் இறுக்கமான கட்டுகளிலிருந்து சிந்தனையை விடுதலை செய்தார்கள். (இது அவர்களே சொன்னது) இடது தீவிரவாதத்திலிருந்து வலது சந்தர்ப்பவாதத்திற்கு ஒரே தாவாக தாவினார்கள்.

80-ம் ஆண்டுகளில் தன்னார்வ குழுக்களின் மகா சம்மேளமான இந்திய மக்கள் முன்னணி மூலம் அரசியல் வானில் சஞ்சரித்தார்கள்; ஜனநாயக மாற்று என்ற பதாகையை தூக்கிப் பிடித்துக் கொண்டு தேர்தலில் நின்றார்கள். கிராமப்புற கொரில்லா குழுக்களைக் கலைத்தனர்; 'தளப்பிரதேசம்' கட்டுவதை விட்டனர். முழுவதும் சட்டபூர்வமாக இயங்க நடவடிக்கை மேற்கொண்டார்கள். அதன் தர்க்க ரீதியான வளர்ச்சியாக 90-களில் இ.க.க. (மா) - வின் நிலைக்குச் சரிந்துள்ளனர்.

இந்த சரிதலைப்பற்றி இ.பொ.க. (மாலெ) - கட்சி ஐக்கியக் குழுவினர் தங்களின் இதழான 'கட்சி ஐக்கியத்'தில் ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தனர். அதன் தமிழாக்கத்தை 'கழுதை தேய்ந்து கட்டெறும்பாய் ...'' என்ற தலைப்பில் கீழே கொடுத்துள்ளோம்.

லிபரேஷன் குழுவினர் 1970-ல் இடது தீவிரவாத பாதையில் இருந்தனர். 1980-களில் வலது சந்தர்ப்பவாதத்திற்கு தாவினர். கட்சிக் கலைப்புவாத பாதையில் இறங்கினர். 90-ம் ஆண்டுகளில் கலைப்புவாதத்தை வளர்த்து இ.பொ.க. (மாலெ)-யைக் கலைத்துவிட்டனர். நவீன திரிபுவாதிகளோடு, இன்னொரு அதிநவீன திரிபுவாத அமைப்பாக மாறிப்போய் சேர்ந்துவிட்டார்கள். சித்தாந்த தெளிவு, ஏற்ற இறக்கங்களுக்கு சலனப்படாமல் விடாப்பிடியான கடினமான போராட்டம், மக்கள் மீது நம்பிக்கை ஆகியவை இன்றி பரபரப்பு, விரைந்த புகழ், அதற்காக யாருடன் வேண்டுமானாலும் கூடிக்குலாவுதல் என சென்றவர்களின் இறுதிப்புகலிடம் திரிபுவாத புதைசேறு என்பதை வி.எம்.குழுவும் மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளது.

ஆசிரியர் குழு
புரட்சிப்புயல்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

# கழுதை தேய்ந்து கட்டெறும்பாய்...

''தவறே செய்யாதவன் ஞானியல்ல; அப்படிப்பட்ட மனிதர்கள் இருந்ததும் இல்லை; இனி இருக்கப் போவதுமில்லை. எவனொருவன் பாரதூரமான தவறுகளிழைக்காமல் இருக்கிறானோ, எவனொருவன் தான் செய்த தவறுகளை விரைவாகவும், எளிமையாகவும் களைந்துகொள்ள தெரிந்திருக்கிறானோ அவனே ஞானியாவன்.'' மென்ஷ்விக்குகள், ருஷ்ய சோஷலிஸ்ட் புரட்சியாளர்கள், இரண்டாம் அகிலத்தின் தலைவர்களின் துரோகத்தைக் கண்டித்த அதே சமயம், 'இடது' கம்யூனிஸ்டுகளின் பிரெஸ்ட் - லிடோவ்ஸ்கி ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுவதற்கெதிரான, மூர்க்கமான எதிர்ப்பை விமர்சித்த அதே சமயம், போல்ஷெவிக்குகள் சிறிய, எளிதில் திருத்திக் கொள்ள முடியும் தவறுகளிழைத்த போது அவற்றையும் இணங்கண்டு கொண்ட தெளிவு லெனினுக்கு இருந்தது. பாரிய தவறிழைத்தல் பாவம் இல்லைதான். ஆனால் ஒரு கம்யூனிஸ்டுக்கு அவற்றை ஒப்புக் கொள்ளும் துணிவும், திருத்திக் கொள்ள அதிகபட்ச முயற்சியும் கட்டாயம் இருக்க வேண்டும். லெனின் காலத்திய திருத்தல்வாதிகளுக்கும் இந்தக் குணாம்சம் இருக்க முடியாதுதான். ஆனால், லெனினுக்கு வினோத் மிஸ்ரா குழு அல்லது விடுதலை குழு (Liberation group) என்றழைக்கப்படும் இந்திய மென்ஷெவிக்குகளை எதிர்கொள்ள வேண்டிய துரதிருஷ்டம் வாய்க்கவில்லை. இ.பொ.க. (மா-லெ) என்ற பெயரை கொச்சைப்படுத்திக் கொள்ளும் இக்குழு எப்பொழுதும் தங்களது 'சமரசமற்ற' கொள்கைகளைப் பற்றியும், பருண்மையான நிலைமைகளை 'பிழையற்ற' முறையில் கணிக்கும் திறன் பற்றியும் பீற்றிக் கொள்வதை வழக்கமாய்க் கொண்டிருக்கிறது. தங்களை மூன்றாம் முகாமின் 'பிரதான நீரோட்டம்' - (Main Stream) என்று கருதிக் கொள்கிறார்கள். காரணம் கட்சிக் கலைப்புவாதத்திற்கு எதிராக விட்டுக் கொடுக்காத, உறுதியான



படிப்பகம்

போராட்டம் நடத்தியிருப்பதாகவும், கட்சியை உயிரோட்டமுடையதாக நீடிக்க வைத்திருப்பதாகவும், மேலும் கனுசன்யால் - எஸ்.என்.சிங் கூட்டணியின் கலைப்புவாத திட்டங்களுக்கு பெரும் தடைக்கல்லாக எப்பொழுதுமே தாங்கள் இருந்துவந்திருப்பதாகவும் கூறுகின்றனர். இவர்களே இன்னும் ''அராஜகவாதம், இடதுசாரி கலைப்புவாதம் ஆகியவற்றுக்கெதிரான விடாப்பிடியான போராட்டத்திலும் இரண்டாவது மத்தியக் கமிட்டி போன்ற அமைப்புகளின் முன் மாபெரும் தடைக்கல்லாக இருந்து வந்திருப்பதாகவும்'', ''நிலைமைகளில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்களை மிகவும் துடிப்பாக எதிர்கொண்டதாகவும்'' கூறுகின்றனர். (கட்சி வழி பற்றிய விவாதங்கள் - பக். 61) முதலில் இக்குழு போஜ்பூரில் இடது சந்தர்ப்பவாதப் போக்காக அறிமுகமானது. ஆனால் மெதுவாக எதிர்கோடிக்கு விலகிச் சென்று வலது கலைப்புவாதிகள் என்ற நிலைக்கு ஒரேடியாக தாழ்ந்துவிட்டது. கடந்த காலத் தவறுகளுக்கு, அவை எவ்வளவு சிறியவையாக இருந்தாலும் சரி, பாரதூரமானதாக இருந்தாலும் சரி சுயவிமர்சனம் என்ற பழக்கமே இவர்களுக்கு முற்றிலும் அன்னியமாக இருக்கிறது. அவர்களது பழைய பாதையும், கோட்பாடுகளும் சரியாம்! அப்புறம் 180 டிகிரி திரும்பியபின், இப்பொழுது அவர்கள் வைத்திருக்கும் அரசியல் வழியும், கொள்கைகளும் நடைமுறையில் பிழையே ஆகாதவையாம்! உண்மையில் இம்மாற்றங்கள் எல்லாம் சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்களினால் தேவைப்படுகின்றனவையாம். 1990 சிறப்பு அனைத்திந்திய கட்சி மாநாட்டில் இக்குழு நிறைவேற்றிய ''ஆவணங்கள்'' இவர்களின் முற்றிலும் கேவலமான ஓட்டாண்டித்தனத்திற்கு பளிச்சென்ற உதாரணமாக இருக்கிறது. போஜ்பூரின் கதாநாயகர்கள் ஒப்புயர்வற்றக் கலைப்புவாதிகளாய் தங்களை வெளிகாட்டிக் கொண்டு, ஆளும்வர்க்கங்களின் கூட்டாளிகளாக மாற்றிக் கொண்டுவிட்டனர். சந்தேகத்திற்கிடமான கூடாரங்களிலிருந்து இவர்களுக்கு கிடைக்கிற புகழுரைகள் வெறுமனே வருவதில்லை. இவர்களால்தான் 'வறட்டுவாத நக்சலிசத்திற்'கெதிராய் போராடி ஆளும்வர்க்கத்துக்கு சிறப்பு சேவை செய்ய முடியும். இ.க.க., இ.க.க.(மா) இரண்டும் இதில் பயனற்ற சக்திகளாகிவிட்டன. நக்சலிசத்தை ஆளும்வர்க்கத்தின் விருப்பங்கள், தேவைகளுக்கேற்ப மாற்றித்தரும் பொறுப்பு (மா-லெ) கட்சி எனும் பெயர்ப்பலகையுடையவர்களால்தான் இனி நிறைவேற்றப்பட முடியும். வி.எம்.குழு இவ்விசயத்தில் தனது திறமையை மிகப் பிரமாதமாக நிரூபித்துக் காட்டியுள்ளது.

திருத்தல்வாதம் என்பது தேசிய விஷயமல்ல; அது சர்வதேசதன்மையுடையது. ஸ்டாலினிய ''அதிகாரவர்க்க கட்டளை அமைப்புக்கெதிரான'' புனிதப் போர் நடத்தும் கோர்பியும், மாவோவின் கலாச்சார புரட்சியை நிராகரித்த டெங்கும் நவீன திருத்தல்வாதக் குடும்பத்தின் தலைவர்கள். இக்குடும்பத்தின் இந்திய கொழுந்துதான் வி.எம்.குழு. அவர்களது அண்மைய மாநாட்டில் கோர்பியும், டெங்கும் புகழ்ந்து தள்ளப்பட்டிருக்கின்றனர். ''நாங்கள் கிளாஸ்நாஸ்த்தை சோசலிச ஜனநாயகத்தின் சரியான நவீன வடிவம் என்று வரவேற்கிறோம்'', ''நீண்ட காலம் கழித்து, 28-வது காங்கிரசில் சோசலிச வரலாற்றை மறுக்கிற, வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் முதலாளித்துவ மீட்சியைக் கோரும் ருஷ்ய கலைப்புவாதிகளை (யெல்ட்சின் வகையறா) எதிர்த்து கோர்ப்பசேவ் தாக்குதல் தொடுத்திருப்பது மனநிறைவளிக்கிறது'', ''அரசியல் உறுதிப்பாட்டை மீண்டும் பெற்றுள்ள சீனமும், சமீபகாலமாய் சீனக் கட்சியின் சில செல்வாக்குமிக்க பகுதியினர் மட்டுப்படுத்தி வைத்திருந்த சித்தாந்த கல்விக்கு மீண்டும் அழுத்தம் கொடுப்பதும் அவ்வளவாக நம்பிக்கையூட்டாத சூழலில் 'பெருத்த நம்பிக்கை' அளிக்கின்றன.'' (மூன்று மேற்கோள்களும் 1990 ஆவணத்திலிருந்து எடுக்கப்பட்டவை) வி.எம்.குழு சர்வதேச திரிபுவாத தன்மையைப் புகழ்ந்து தள்ளுகிறது. அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டு 'வறட்டு' மார்க்சியத்தை எதிர்த்துக் கைஉயர்த்துகிறது. (அதாவது இந்தியச் சூழலில் நக்சலிசத்தை எதிர்த்து.)

காலஞ் செல்லச்செல்ல இவர்களது வெளிப்பார்வைக்கு முதலில் புலப்படாதிருந்த விலகல் போக்கு மெதுவாக அம்பலமானது. இவர்கள் புரட்சிகர அரசியலின் உயிராற்றல்மிக்க ஆன்மாவைத் தூக்கி எறிந்துவிட்டனர். மாபெரும் நக்சல்பாரி எழுச்சியின் புரட்சிகர சாராம்சத்தை காயடித்து விட்டனர். திரிபுவாதத் திட்டங்களுக்கும், மா-லெ திட்டத்துக்கும் இடையே உள்ள வேறுபாட்டை மறுக்கின்றனர். உண்மையில் இன்று இவர்கள் நக்சலிசத்தின் புரட்சிகர உள்ளடக்கத்தைத் தவிர பிற அனைத்தையும் ஏற்கின்றனர். இந்த ஏட்டின் வாசகர்களும், பொதுவாக இந்தியப் புரட்சியாளர்களும் ஏற்கனவே இக்குழுவினரின் மயிர்பிளக்கும் வாதங்களை அறிந்திருப்பர். இக்கட்டுரையில் 1976 காங்கிரசு தொடங்கி 1990 மாநாடு வரை உள்ள இவர்களது ஆவணங்களிலிருந்து மேற்கோள்கள் எடுக்கப்பட்டு காலவரிசைப்படி காட்டப்படுகின்றன. எல்லா முக்கிய ஆவணங்களையும் எங்களால் தொகுக்க முடியாததற்கு வருந்துகிறோம். ஆனால் விட்டுப் போனவை படிப்பதின் சுவையைப் பாதிக்காது. புரட்சிகர அரசியலின் சில முக்கியமான பகுதிகள் மட்டுமே காட்டப்படுகின்றன. ஏனெனில், இக்குப்பைக்குள் முழுவதும் செல்வதும் பெரிதும் சலிப்பூட்டும். நமது வாசகர்களை இந்தத் திரிபுவாதச் சரக்குகளைக் கொண்டுவர 'லிபரேஷன்' குழுவினர் பட்டுள்ள பாடுகளுக்கு இரக்கப்படக் கோருகி

www.padippakam.com

றோம். எனவே அவர்களே தங்களது முகத்திரைகளைக் கிழித்துக் கொள்ளட்டும்.

## படை, படைப் பிரிவுகள், தற்காப்புக் குழுவினர்.

வி.மி.குழு 1976 பிப்ரவரியில் நடத்திய தனது 2-வது கட்சிக் காங்கிரசில் அமைப்பை ஒழுங்கமைத்துக் கொண்டதை யாவருமறிவர். அப்பொழுது படை மற்றும் தளப்பிரதேசம் பற்றி அவர்களின் புரிதல் என்ன?

''நாங்கள் இடம் பெயரும் எதிரிகள் (Mobile enemies) மீது தாக்குதல் தொடுத்தோம். முறையான படையின் முதற்கட்டத்தைத் தொடங்கியிருக்கிறோம்.''

''இந்த புதிய நபர்களிலிருந்து படிப்படியாக ஆயுதந்தாங்கிய கொரில்லாப் படையை மக்கள் விடுதலைப் படையின் கொரில்லா யூனிட்டுகளிலிருந்து கட்டவும், அதன்பின் முறையான படையைக் கட்டவும் எங்களால் முடிந்திருக்கிறது. விவசாயிகளது புரட்சிகர அரசியல் அதிகாரத்தை மக்கள் விடுதலைப் படையின் துப்பாக்கி உதவியோடு நிறுவியும், பரந்துபட்ட விவசாயிகளின் வெகுஜனப் போராட்டப் பாதையைத் திறந்துவிட்டும், ''தளப்பிரதேசங்களின் அடித்தளத்தை'' கொரில்லாத் தளங்களிலிருந்து படிப்படியாகக் கட்ட முடிந்துள்ளது. இப்பொழுது நாங்கள் முறையான கட்டுப்பாடுமிக்க பெரும்படையைக் கட்டுவதின் மூலமும், விவசாயிகளின் புரட்சிகர அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதன் மூலமும், பெருந்திரளான விவசாயிகளை ஆயுதந்தாங்க வைப்பதன் மூலமும் நிரந்தர தளப் பிரதேசங்களைக் கட்டுவதை உறுதிப்படுத்துவதை நோக்கி முன்னேறுகிறோம்.''

''எங்கள் தளப்பிரதேசங்கள் மிகச் சிறியவை; இராணுவரீதியில் பலவீனமானவை. ஆனால் அரசியல்ரீதியில் இவை பலமானவை. இதன் காரணம் இத்தளப் பிர்தேசங்கள் மக்கள் ஜனநாயக இந்தியாவின், விடுதலை பெற்ற இந்தியாவின் குறியீடுகளாய் இருப்பதாகும். அதனால்தான் அவை 60 கோடி இந்திய மக்கள் மனதில் நம்பிக்கையையும், எதிரியின் இடையில் பெரும்பிளவுகளையும் ஏற்படுத்தி உள்ளன. நம்மால் படையை மத்தியப்படுத்துதலைத் திட்டமிட்டு சாதிக்க இயலும்; பெரும் எதிரி யூனிட்டுகளை அழித்து, போராட்ட அலையைப் பரப்பி மக்களின் அரசியலதிகாரத்தை பெரும் பகுதிகளில் நிறுவ முடியும். நமது போராட்டத்தின் வெற்றி மாபெரும் மக்கள் எழுச்சியை இந்தியா முழுதும் பேரெழுச்சியாய் உருவாக்கி இடிமுழக்கமாக எழச் செய்யும்.'' *(1976 காங்கிரஸ் அறிக்கையிலிருந்து. அழுத்தம் எமது; மூலம்: வங்காளி.)*

1982 வந்ததுதான் தாமதம். இந்த இளம் பிள்ளைத்தனமான தளப்பிரதேசம், நிலையான படை பற்றிய வெற்றுப் பெருமை பின்னுக்குச் சென்றது. அவர்களது விருப்பத்துக்குரிய இந்திய மக்கள் முன்னணி அளித்த செழுமையான வாய்ப்புகள் அவர்களை ஈர்த்தது. 1982 டிசம்பரில் நடந்த 3-வது காங்கிரஸ் மக்கள் விடுதலை படைக்கும், தளப்பிரதேசங்களுக்கும் உதட்டளவில் மட்டும் சேவை செய்தது.

''நமது வர்க்க சக்திகளின் பகுப்பு மற்றும் நமது அரசியல், இராணுவ சக்திகளின் நிலை பற்றிய நமது இன்றைய கணிப்பு ''வெகுஜன அரசியல் வேலைக்கு முதல் முக்கியத்துவம்'' தர முடிவெடுக்க வைக்கின்றன. எதிர்ப்புப் போராட்டங்களை வளர்ப்பதும், அய்க்கிய முன்னணி வேலைகளை வளர்ப்பதும் அவசியமாகிறது. ஆகவே, இப்பொழுது நாம் நமது ஆயுதந்தாங்கிய படையை 'பாதுகாத்துக்' கொண்டு, படிப்படியான முன்னேற்ற கொள்கையை கையிலெடுக்க வேண்டியுள்ளது வெளிப்படை.

''ஆயுதந்தாங்கிய யூனிட்டுகள் அதிகாரத்தை இப்பொழுதே கைப்பற்றுவது கூடாது. அவர்கள் வெகுஜன மக்களை எதிர்ப்புப் போராட்டங்களுக்குத் திரட்ட வேண்டும்; நிலப்பிரபுக்கள், போலீசுக்கெதிராக அவர்கள் போராட உதவியளிக்க வேண்டும். மக்கள்திரளின் உதவியோடு, நிலப்பிரபுக்களின் குண்டர்படை மற்றும் போலீசுக்கு எதிராக கொரில்லா முறையில் நேரடிப் போராட்டத்தைத் தொடுக்க வேண்டும்.''

''இப்பொழுது ஆயுதந்தாங்கிய யூனிட்டுகள் கைக்கொள்ள வேண்டிய இராணுவ போர்த்தந்திரம்: இடம் பெயர்ந்து கொண்டிருங்கள் - குறைவாகத் தாக்குங்கள். ஒட்டு மொத்தத்தில் தற்காப்பு போர் - தேர்ந்தெடுத்த தாக்குதல் நடவடிக்கைகள்.''

''தளப்பிரதேசம் கட்ட குறிப்பான பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஒரே திட்டத்தில் சமவெளியையும், மலையையும் இணைக்க கவனங் கொள்ள வேண்டும். இருந்தாலும் நாம் இந்திய நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் தளப்பிரதேசங்களை பெரும் சமவெளிப் பிரதேசங்களில் கட்டி வளர்த்து, இந்தியச் சூழலுக்கேற்ற இராணுவப் பாதையை வளர்க்க வேண்டும்.''

*(1982 காங்கிரஸ் ஆவணம்)*

1982 காங்கிரசிற்குப் பின் பீகார் மாநிலக் கமிட்டியின் ''லோக்யுத்'' ஏட்டில் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறத்தைச் சுற்றி வளைத்துத் தாக்குவது இந்தியாவுக்குப் பொருந்தாது என்று ஒரு கட்டுரை வந்தது. இதற்கு மறுப்பளித்து வி.எம்.குழுவின் லிபரேஷன் ஏட்டில் ''சந்தேகத்திற்கிடமின்றி தவறான அறிவிப்பு'' என்று வந்தது. மேலும், ''இது பீகார் மாநிலக் கமிட்டியின் அதிகாரப்பூர்வ நிலைப்பாடல்ல; மேலும் இது பெரும்பாலான கட்சி அணிகளிடையில் பெரும் கண்டனத்தைத் தோற்றுவித்துள்ளது... .... இந்தியப் புரட்சிக்கான புதிய வழித்திட்டங்க



தொடர்ச்சி... 11-ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# புரட்சிப் புயல்

ஏப்ரல் 1993

ஆண்டு: 17 இதழ்: 1-5

இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகும். புரட்சியில் இந்திய மக்களை வழி நடத்திச் செல்லும் அரசியல் கருக்குழுவாகும். அதே சமயத்தில் கட்சியானது உலகப் பாட்டாளி வர்க்கப் போர்ப் படையின் ஒரு அணியாகும். இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) அதன் சிந்தனைக்கும், நடைமுறைக்குமான வழிகாட்டியாக மார்க்சீய - லெனினிய - மாவோ சிந்தனையை உயர்த்திப் பிடிக்கிறது.

## இந்த இதழில்

★

வர்க்க எதிரிகளை அழித்தொழிப்பதில் இருந்து.... வர்க்க சித்தாந்தத்தை அழிப்பதுவரை வினோத்மிஸ்ரா கும்பலின் சீரழிவு — ஒரு சுருக்கம்.

★

ஸ்டாலின் பற்றிய லெனின் உயிலும் எதிர்ப்புரட்சியாளர்கள், துரோகிகளின் அவதூறுகளும் — ஸ்டாலின் பதில்கள்.

★★★

## பார்ப்பன, பனியா பாசிச சதிகளை முறியடிப்போம்!

மாற்றங்கள் மளமளவென்று நடந்து வருகின்றன. ஒரு புதிய ஒழுங்கை நோக்கி உலகமும் மறுகாலனியாவதை நோக்கி இந்தியாவும் விரைந்து கொண்டிருக்கின்றன. 1985-லேயே ராஜீவ் கும்பல், உலக வங்கி ஐ எம்.எஃப்-ஆல் வகுத்தளிக்கப்பட்ட 'இந்தியப் பொருளாதாரத்திற்கான யுத்த தந்திரம்' என்ற பத்தாண்டு திட்டத்தைத் தொடங்கி வைத்தது. நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில் இது முழுமைபெற்று முழுவேகத்தில் நடைபெற்று வருகின்றது. தனியார்மயமாக்கல், தாராளமய்மாக்கல், உலகமயமாக்கல் என்ற போக்கு பன்னாட்டு, தேசங்கடந்த தொழில் கழகங்களும் வங்கிகளும் கேள்வி கேட்பாரற்று இந்தியாவை வேட்டையாடவும் கோலோச்சவுமான போக்கு — இந்தியப் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டது. உலக வங்கி — ஐ.எம்.எஃப்-களின் கட்டளைகள் மூலமும், தேசங்கடந்த தொழில் கழகங்கள், சர்வதேச வங்கிகள் மூலமும் நவீன தொழில் நுட்பங்களின் இறக்குமதி மூலமும் ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலின் தாக்கீதுகள் மூலமும், இவைகள் மீறப்பட்டால் நேரடி இராணுவ ஆக்கிரமிப்பு, மிரட்டல் மூலமும் இது அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. சாராம்சமாக சொன்னால், மறுகாலனியாகும் பாதையில் நாடு நுழைந்துவிட்டது.

இன்று, நேருவின் கலப்புப் பொருளாதார மாடலின் ஒரு பகுதியான ஜனரஞ்சகத் திட்டங்கள் ஒவ்வொன்றாக கைவிடப்படுகின்றன. அன்னிய ஏகாதிபத்திய முதலாளிகள், தரகு அதிகாரவர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்களின் நலன்களுக்கு மிகவும் சேவை செய்கிற பொதுத்துறைகள் தவிர மற்றவை அனைத்திலும் தனியுடமை - அதற்கு சலுகை, பாதுகாப்புடன் - புகுத்தப்படுகின்றது. இங்கெல்லாம் சந்தையின் சதிராட்டத்திற்கு விட்டு விடுவது; லாபவெறியின் அளவே முன்னேற்றத்திற்கான அளவுகோலாக நிச்சயிக்கப்படுகின்றது. ஏகாதிபத்திய மையத்தின் விரிவாக்கப்பட்ட மறு உற்பத்திக்கு உதவுகின்ற நவீன தொழில்கள், ஏற்றுமதி தவிர அனைத்தும் கழித்துக் கட்டப்படுகின்றன. பின்தங்கிய விவசாய உற்பத்தியிலும் உதிரித் தொழில்களிலும் ஈடுபட்டுள்ள பெரும்பாலான உழைக்கும் மக்கள் ஏற்கனவே இருந்ததையும் இழந்து, மிகவும் கொடுமையான வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் பட்டினிக்கும் தள்ளி விடப்படுகிறார்கள்.

மானியங்கள் ஒவ்வொன்றாகவும் படிப்படியாகவும் வெட்டப்படுகின்றன, கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர், மருத்துவம் உட்பட அனைத்து அத்தியாவசியத் தேவைகளும் சரக்காக்கப்பட்டு வருகின்றன. விலைகள் திட்டமிட்டு ஏற்றப்படுகின்றன. ஏகாதிபத்திய வேட்டைக்குத் தேவையான மனித எந்திரங்களுக்கு மட்டும் வேலை தரப்படுகின்றன. மேலும் குறிப்பாக விவசாயமும் டங்கல் திட்டப்படி தேசங்கடந்த

www.padippakam.com

தொழில் கழகங்களின் பகாசுரப் பசிக்கு தீனியாக்கப்பட உள்ளது. உணவுப் பொருட்களின் விலை சாதாரண மனிதனுக்குப் பாதகமாக ஏறிக்கொண்டே உள்ளது. விவசாயிகளுக்கோ கட்டுபடியான விலை இல்லை. உலக வங்கி கட்டளைப்படி மானியங்கள் முற்றாக வெட்டப்பட்டு உள்நாட்டு உணவுதானிய சந்தை இறக்கு மதியின் தயவில் கொண்டுவரப்பட உள்ளது; 'நேராக கப்பலிலிருந்து வாய்க்கு' என்ற நிலை அமுலாக்கப்பட உள்ளது. இதற்கேற்ப திட்டமிட்டு உணவுதானிய உற்பத்தி சீரழிக்கப்படுகின்றது; நிலங்கள் பாழ்படுத்தப்படுகின்றன.

ஒரு எத்தியோப்பியா போல, ஒரு சோமாலியா போல நமது நாடும் பாலைவனமாகவும் உழைக்கும் மக்களின் மரண பூமியாகவும் மளமளவென்று மாற்றப்பட்டு வருகின்றது.

தனது கட்டளைகள் கறாராக நிறைவேற்றப்படுகின்றனவா என்று சோ... ...ரிய உலக வங்கி டெல்லியில் அலுவலகம் திறக்கிறது. அதன் உத்தரவுப்படியே எல்லா பொருளாதார நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. எல்லோருக்கும் அறிந்தே இது நடக்கின்றது. இராணுவத் துறையும் வெளிவிவகாரக் கொள்கைகளும் கூட ஏகாதிபத்தியங்களின் ஏவல்படியே தீர்மானிக்கப்படுகின்றன. இப்படி எல்லாத் துறைகளிலும் மேல்நிலை வல்லரசுகள் பகிரங்கமாக கட்டளையிடுவதும் இந்திய ஆளும் வர்க்கங்கள் அவற்றை சிரமேற்கொண்டு அமுல்படுத்துவதுமான பாதையில் - மறுகாலனியாகும் பாதையில் - இந்தியா இழுத்துச் செல்லப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்க மறுகாலனியாக்கும் பாதையை தேர்ந்தெடுத்திருப்பது போல, ஆளும் வர்க்கங்கள் அரசு வடிவத்துறையிலும் பாசிசமயமாக்கும் போக்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளனர். மேலும் மேலும் அரசு நிர்வாகத்தை மையப்படுத்துவதும் அதிகாரத்தை உச்சியில் குவிப்பதும் நடந்து கொண்டிருக்கின்றன. நேருவின் ஜனநாயக சோசலிச காலகட்டத்தில் அதிகார பரவலாக்கல், கிராமப்புற மக்களுக்கும் அதிகாரத்தில் பங்கு என்று சொல்லப்பட்ட ஊராட்சி, பேரூராட்சி மன்றங்கள், கூட்டுறவு சங்கங்கள் எல்லாம் இன்று பழங்கதையாய், அதிகார வர்க்கப் பெருச்சாளிகளின் வளைகளாக ஆக்கப்பட்டு விட்டன. மக்களை அடக்க புதுப்புது போலீஸ் பிரிவுகள், படைப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அரைகுறை ஜனநாயக உரிமைகளும் அதிகரித்த அளவில் பறிக்கப்பட்டு வருகின்றன. தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் கடுமையாக ஒடுக்கப்படுகின்றன. ஆளும் வர்க்கத்தை எதிர்ப்பவர்கள் எல்லாம் 'தேச துரோகிகள், பிரிவினைவாதிகள், நாட்டைத் துண்டாட சதி செய்யும் வெளிநாட்டு சக்திகளின் ஏஜண்டுகள்' என்று முத்திரை குத்தப்பட்டு அவர்கள் மீது அரசு பயங்கரவாதம் ஏவி விடப்படுகின்றது.

பொறுக்கி - கிரிமினல் அரசியலும் பிழைப்புவாதமுமே ஆளும் வர்க்க அரசியலின் வாழ்க்கையாகி விட்டது. எங்கும் லஞ்சம், எதிலும் ஊழல்; நேர்மை, நாணயம், நீதி அனைத்தும் ஆளும் வர்க்க அரசியல்வாதிகளின் கால்களில் மிதிபடுகின்றன. ஆளும் வர்க்கங்களின் அரசியல் நிறுவனங்கள், கட்சிகள் மீதும், தலைவர்கள் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள். நாடும் மக்களும் மதிக்கின்ற, நம்புகின்ற கட்சியையோ, தலைவரையோ ஆளும் வர்க்கங்களால் முன்நிறுத்த முடியவில்லை.

மறுகாலனியாதிக்கம், பாசிச மயமாக்கம் இவைகளின் அங்கமாக பண்பாட்டுத் துறையில் சீரழிவுப் போக்கும் விட்டேத்திப் போக்கும் திட்டமிட்டு பரப்பப்படுகின்றன. ரவுடித்தனமே உன்னதமான போர்க்குணமாக சித்தரிக்கப்படுகிறது. மனிதநேயமற்றதாகவும் ஒழுக்க நெறியற்றதாகவும் மிகவும் இழிந்த தன்மை வாய்ந்ததாகவும் உள்ள பார்ப்பனிய கலாச்சாரமே இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப புதுமெருகு பூசப்பட்டு இந்தியப் பண்பாடாக, அரசின் பண்பாடாக முன்னெப்போதையும்விட வேகமாகவும் தீவிரமாகவும் பரப்பப்படுகின்றது. இவ்வாறு ஏகாதிபத்திய ஆபாச சீரழிவுக் கலாச்சாரமும் நிலப்பிரபுத்துவ பழைமைப் பிற்போக்குக் கலாச்சாரமும் கலக்கப்பட்டு பரப்பப்படுகின்றது.

அரைக்காலனியிலிருந்து மறுகாலனியாக, போலி ஜனநாயகத்திலிருந்து பாசிசமாக, போலி மதச்சார்பின்மையிலிருந்து பார்ப்பனியமாக இப்படி ஒவ்வொரு துறையிலும் ஏற்கனவே உள்ள பிற்போக்கிலிருந்து இன்னும் பிற்போக்கான திசையில் இந்தியா எடுத்துச் செல்லப்படுகின்றது. இதன் விளைவாக, பரந்துபட்ட மக்கள் முன்னிலும் கூடுதலாக எல்லாவிதமான ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் ஆளாக்கப்படுகின்றனர்.

நலத்திட்டங்களை மேற்கொள்வது, அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பது என்ற போலி சோசலிச நடவடிக்கைகளை கூட செய்யாமல் அரசு எந்திரம் பின்வாங்குகிறது. முழுக்க முழுக்க வரிவசூலிப்பது, உழைக்கும் மக்களின் போராட்டங்களை ஒடுக்கி அடக்க பல்வகை பயிற்சியும் வலிமையும் கொண்ட நவீன படைப்பிரிவுகளை கட்டி மேய்ப்பது ஆகியவற்றை மட்டுமே செய்வதாக அரசு எந்திரம் மாறுகிறது. இதுதவிர இலஞ்சத்திற்கும் ஊழலுக்கும் மட்டுமே அரசு எந்திரம் பணியாளாக இருக்கும்.

ஆளும் வர்க்கங்கள் தங்களது பொருளாதார மறுசீரமைப்பை வெற்றிகரமாக்க இந்திய துணைக்கண்டத்தை சிதறாமல் பெரிய சந்தையாக வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு மிகவும் மையப்படுத்தப்பட்ட அரசு எந்திரம் வேண்டும். எனவே, சுயநிர்ணய உரிமைகோரும் தேசிய இன இயக்கங்களை மிக கடுமையாக ஒடுக்கும். மாநில சுயாட்சி மற்றும் தனி மாநிலம் கோரும் இயக்கங்களையும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு இயக்கங்களையும் கூட மிகவும் கடு... ...ாக ஒடுக்கும்.

என்றுமில்லாத அளவிற்கு மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தள்ளப்படுவதோடு, உயிர் வாழ்வதற்கான அடிப்படை சூழ்நிலைகள், தொழில்கள்கூட நாசமாக்கப்படுகின்றன. எதற்கும் ஒரு விலை என்ற நிலையில், சுகாதாரம், மருத்துவம், கழிப்பிட வசதி அனைத்திற்கும் விலை கொடுத்துப் பெற மக்களால் முடியாது. எனவே, அவலமும் மரணமும் வாட்டிட மக்கள் போராட்டத்தில் குதிப்பார்கள். என்றுமில்லாத ஒரு மக்கள் கொந்தளிப்பை அடக்க ஆளும் வர்க்கங்கள் கடுமையான அடக்குமுறைகளை ஏவிவிட வேண்டுவது கட்டாயமாகிவிடும். நாடு நிச்சயம் அந்த நிலையை நோக்கித்தான் செல்ல முடியும்; மறுகாலனியாதிக்க பாதையின் ஓர் அங்கமாக பாசிசம் வருவது தவிர்க்க முடியாதது என்பது பிற பின்தங்கிய வளரும் நாடுகளின் அனுபவமாகும்.

இந்த ஆகப் படுபிற்போக்கிற்கும் ஒடுக்குமுறைக்கும் முதல் பிரதிநிதியாக வருபவர்கள்தான் இந்துமதவெறி சக்திகளாவர்; இரண்டாவதாக காங்கிரசு வருகிறது. புதிய பொருளாதாரக் கொள்கை, பாசிசம், பார்ப்பனீய ஆதிக்க வெறி இவைகளை தமது பதாகையில் பொறித்து வருகின்ற பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ்., வி.ஹெச்.பி., பஜ்ரங்தள், சிவசேனா ஆகிய இந்துமதவெறி அமைப்புகளும் காங்கிரசும் இவைகளின் தமிழகப் பிரதிநிதியாகவும் பங்காளியாகவும் உள்ள ஜெயா தலைமையிலான அ.தி.மு.க.வும்தான் இன்றைய அரசியல் தருணத்தில் மக்களின், நாட்டின் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக அரசியல் எதிரிகளாக உள்ளனர். இவர்களுள் இந்துமதவெறி அமைப்புகள்தான் மிகவும் அபாயகரமான, கொடிய எதிரிகளாவர்.

இந்தி - இந்து - இந்துஸ்தான் (அகண்டபாரதம்) என்பதே



படிப்பகம்

www.padippakam.com

பார்ப்பன (இந்து) மதவெறி சக்திகளின் இலட்சியமாகும். இதை ஏற்று பணியாதவர்களை, புரட்சியாளர்களை, தேசிய இனப் போராளிகளை பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்று அவதூறுப் பிரச்சாரம் செய்கிறார்கள். திட்டமிட்டு முஸ்லீம்களுக்கு எதிராக பொய்ப்பிரச்சாரம் செய்து மதக்கலவரங்களை நடத்துகின்றனர். தாங்களே சிறந்த தேசபக்தர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறார்கள். ஆனால், இதுவரை ஏகாதிபத்தியங்கள் நமது நாட்டை ஒடுக்குவது, சுரண்டுவதை எதிர்த்து வெறும் அறிக்கைகூட இவர்கள் விட்டதில்லை; ஏகாதிபத்திய சேவையே இவர்களின் தேச பக்தி. 'இந்து என்று சொல்வதுதான், அதற்கு அடிபணிவது தான் தேசபக்தி'; இதுவே இவர்களின் முழக்கமாகும். மதவெறிப் பிரச்சாரம், மதக்கலவரங்கள் ஆகியவற்றைத் திட்டமிட்டு செய்வதன் மூலம் இந்து மதத்தைச் சேர்ந்த உழைக்கும் மக்களுக்கு மதவெறி போதையூட்டி வென்றெடுப்பது; அதன் மூலம் இந்து (பார்ப்பன) சாம்ராஜ்யத்தை நிறுவுவதுதான் அவர்களின் இறுதி நோக்கமாகும்; மதவெறி போதையூட்டுவதன் மூலம் உடனடி பிரச்சினைகளிலிருந்து உழைக்கும் மக்களை திசைதிருப்புவது; துயரங்களை ஏற்கவைப்பது; மற்றும் அவர்களைப் பிளவுபடுத்துவது அவர்களின் உடனடி நோக்கமாகும்.

பார்ப்பன (இந்து) மதவெறி அமைப்புகள், குறிப்பாக இவைகளின் தாயான ஆர்.எஸ்.எஸ். சித்தாந்த ரீதியிலும் ஆயுதப் பயிற்சியிலும் பயிற்றுவிக்கப்பட்டு அமைப்பு ரீதியில் திரட்டப்பட்டுள்ள பாசிச குண்டர் படையாகும். இவைகள் அரை இரகசியமாகவும் இயங்கி வருகின்றன. பல்வேறு அரங்குகளில் மக்கள் திரள் அமைப்புகளாகவும் செயல்பட்டு வருகின்றனர். அரசு எந்திரத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளனர். போலீசிற்கு இவர்கள் உளவாளிகளாகவும் தொழிலாளர்கள் மத்தியில் கருங்காலிகளாகவும் செயல்பட்டு வருகின்றனர். போலீஸ், முதலாளிகள், அதிகாரிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு போராடும் மக்களைத் தாக்குகின்றனர். மேலும் இவர்கள் பெரும்பான்மை மதத்தைச் சேர்ந்த மதவெறியர்களாகவும் உள்ளனர். காங்கிரசு, அ.தி.மு.க. அணிகள் இவ்வாறு பயிற்றுவிக்கப்பட்டவர்கள் அல்லர். எனவே, பார்ப்பன (இந்து) மதவெறி அமைப்புகளே இவர்களைக் காட்டிலும் மிகவும் அபாயகரமான கொடிய எதிரிகள்.

நரசிம்மராவ், சரத்பவார், அர்ஜுன்சிங் போன்று எந்த ஒரு காங்கிரசு தலைவருக்கும் காங்கிரசு கட்சிக்கும் எந்தவொரு தார்மீக நெறியோ, அறநெறியோ கிடையாது. காங்கிரசிற்கு வெளியே உள்ள சுப்பிரமணியசாமி, சந்திராசாமி, சந்திரசேகர் போன்றவர்கள் மூலமாக இரகசிய உலக போர்வழிகள் மாஃபியா கும்பல்களுடன் கள்ளக்கூட்டு வைத்துள்ளனர். பிழைப்புவாதமே அவர்களின் நெறியாக உள்ளது. தேசிய நலன், இந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைக் காப்பதையே தமது இலட்சியம் என முழங்குவர். போலி மதச்சார்பின்மை பேசுவார்கள். ஆனால், தமக்கு ஆதாயம் என்றால் இந்துத்துவத்தையே தூக்கிப் பிடிக்கவும் தயங்க மாட்டார்கள். இந்துமத உணர்வை தேர்தல் ஆதாயங்களுக்குப் பயன்படுத்துவதை 1983-லேயே இந்திரா தொடங்கி வைத்தார் என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும்.

பாசிச ஆட்சி காங்கிரசு கட்சியின் மூலம் வருமா அல்லது பி.ஜே.பி. மூலம் வருமா என்பது எதிர்வரும் அரசியல் சூழ்நிலையைப் பொருத்ததாகும். மக்களை ஏய்ப்பதற்கு இக்கட்சிகள் வைக்கும் முழக்கம், கட்சிகளின் செல்வாக்கு, மக்களின் மனநிலை ஆகியவற்றை பொருத்து இது தீர்மானிக்கப்படும். காங்கிரசு முக்கியமாக அரசு சார்ந்த மற்றும் சாராத தன்னார்வ குழுக்களை இரகசிய உலகப் போர்வழிகளைத் தனது சமூக அடித்தளமாகக் கொண்டு பாசிச ஆட்சியை நடத்தும். ஒடுக்குவதற்கு அரசுப் படையை சார்ந்திருக்கும்.

பி.ஜே.பி. பாசிசமானது, 'ஒரே மக்கள், ஒரே சட்டம், ஒரே நாடு', 'இந்து ராஜ்யம்' என்ற முழக்கத்தின் அடிப்படையில் மதநிறுவனங்கள் மூலம் ஒரு சமூக அடித்தளத்தை ஏற்படுத்தி ஒடுக்குவதற்கு தனது குண்டர்படையையே பிரதானமாக சார்ந்திருக்கும்.

எந்தவகைப் பாசிசம் வந்தாலும் மறுகாலனியாகும் பாதையில் நாடு கொண்டு செல்லப்படும். பார்ப்பன (இந்து) மத ஆதிக்கமே கோலோச்சும். பி.ஜே.பி.-யின் பாசிச ஆட்சியில் இது நேரடியாக, அப்பட்டமாக, அரசியல் சட்டமாக கோலோச்சும்; காங்கிரசு பாசிச ஆட்சியில் போலி மதச்சார்பின்மை என்ற திரைக்குப் பின்னால் மறைமுகமாக இருக்கும்.

இந்துமதம் உழைக்கும் மக்களின் மீதான சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் நியாயப்படுத்தும், உழைக்கும் மக்களை மனமுவந்து ஏற்றுக்கொள்ளச் செய்யும் கருத்துகள், நிறுவனங்களாக மட்டும் இல்லை; அதாவது தார்மீக சக்தியாக மட்டும் இல்லை; அதோடு உற்பத்தி உறவுகளாக, அடித்தளமாக, சமூகப் பொருளாதார அடக்குமுறை நிறுவனமாகவும் சாதிய வடிவத்தில் உள்ளது. எனவே, ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவத்தின் ஒரு அங்கமாகிய பார்ப்பனீயத்தையும் சேர்த்துத் தகர்க்க வேண்டும் என்று புரட்சியாளர்கள் அறைகூவ வேண்டும்; பார்ப்பன (இந்து) மதத்திற்கு எதிராகவே (மதவெறிக்கு எதிராக மட்டுமல்ல) மக்களை அணிதிரட்ட வேண்டியது புரட்சியாளர்களின் கடமையாகும். அதுவே மார்க்சியத்தை இந்தியாவின் பருண்மையான நிலைமைகளுக்குப் பிரயோகிப்பதாகும்.

இந்துமதவெறி பாசிசம் இன்று மிகவும் அபாயகரமான எதிரியாக முன்நிற்கையில், அதை அதன் உயிர்நாடியில் அடித்து நொறுக்க வேண்டுமானால், சாதிய கட்டுமானத்திற்கு எதிரான போராட்டத்தை எல்லா தளங்களிலும் வர்க்கப் போராட்டத்திற்கு இணையாகவும் துணையாகவும் எடுத்துச் செல்ல வேண்டியது புரட்சியாளர்களின் கடமையாகும்.

மார்க்சியத்தை பருண்மையாகப் பிரயோகிக்க வேண்டுமென்ற மூளையோ, முனைப்போ இன்றி, அதேவேளையில், மதம் பற்றிய மார்க்சிய கண்ணோட்டத்தை மிகச் சரியாக பிரயோகிப்பதாக அப்பாவித்தனமாக கருதிக் கொள்ளும் சிலர் பார்ப்பனீயம், பார்ப்பன மதம் என்றவுடனேயே சிவப்புத்துணியைக் கண்ட மாட்டைப் போல மிரண்டு போகிறார்கள். நமது மரபின் முற்போக்கு அம்சத்தை வரித்துக் கொள்ள மறுக்கும் இவர்கள் ஆளும் வர்க்க பிரச்சாரத்திற்கு பலியாகி, பார்ப்பன மதவெறிக்கு மறைமுகமாக சேவை செய்கிறார்கள்.

ஆனால், புரட்சியாளர்களோ, மார்க்சியத்தை பருண்மையாக பிரயோகித்து, பார்ப்பன (இந்து) மதவெறியர்களை எதிர்த்தும் காங்கிரசின் பாசிச திட்டங்கள், சித்தாந்தங்களையும், பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலையும் எதிர்த்தும் முறியடித்து, புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

☆ **நாடு மறுகாலனியாக்கப்படுவதையும் பாசிச அபாயத்தையும் முறியடிப்போம்!**

☆ **பார்ப்பன (இந்து) மதவெறி பாசிஸ்டுகளை ஒழித்துக் கட்டுவோம்!**

☆ **பார்ப்பன, பாசிச காங்கிரசையும் ஜெயா கும்பலையும் தூக்கியெறிவோம்!**

☆ **ஏகாதிபத்திய, தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தை வேரறுப்போம்!**

☆ **மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசை அமைப்போம்!** ●



படிப்பகம்

www.padippakam.com

7ம் பக்கத் தொடர்ச்சி

னைத் தேடுவதில் சில தவறான போக்குகள் கட்சிக்குள் தோன்றக்கூடும்; இவை நகரங்களைச் சுற்றி வளைத்து தாக்குவதின் சரியான தன்மையை கேள்விக்கிடமாக்கலாம்; ஆனால், இப்போக்கு ஆய்வு செய்யப்பட்டு, விவாதிக்கப்பட்டு, 'நிராகரிக்கப்' பட வேண்டும்'' என்று உறுதியளிக்கப்பட்டது. (கட்சி வழி பற்றிய விவாதங்கள், பக்.83)

''ஆசிரியர் துறைக்குப் பொறுப்பேற்ற ஒரு தோழரின்'' தவறு என்று காரணம் காட்டப்பட்டது. பாவம் அவர்; காலத்தைக் கணிக்கும் விவேகம் அவருக்கு இல்லாமல் போய்விட்டது. 83-க்கும் 90-க்கும் இடையில் ஏழாண்டுகள் உள்ளனவே! 1986-ல் வினோத் மிஸ்ராவே, 'துப்பாக்கிகளை மேலும் இறுகப் பற்றுங்கள்' என லிபரேஷனில் அறைகூவல்விட்டார். ''சட்ட பூர்வ வெளிப்படையான வடிவங்களை நாம் பயன்படுத்துவதால், குறிப்பாக தேர்தலில் பங்கெடுப்பதால், பழைய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சில மா-லெ குழுக்கள் போல நாமும் துப்பாக்கியை கீழே போட்டுவிடுவோம் என்று எதிரி நம்புகிறான்'' என்று வி.எம். எழுதினார். அப்படி எதிரியின் நம்பிக்கை வீண்போகவில்லை என்பதை இனி பார்ப்போம்.

1988 ஜனவரி முதல் வாரத்தில் 4-வது காங்கிரஸ் நடந்தது. அதன் அரசியல் - ஸ்தாபன அறிக்கையில் மக்கள் படை பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டது. தளப்பிரதேசம் பற்றி மூச்சு இல்லை. அப்பொழுது வி.எம்.குழு தேர்தல் அரசியலில் முழுமூச்சாய் இறங்கி பீகாரின் சில தொகுதிகளில் 'குறிப்பிடத்தகுந்த ஓட்டுகள்' பெற்றிருந்தது. அதே சமயம் பிரதான அழுத்தம் கொடுப்பது ஆயுதந்தாங்கிய பிரச்சாரக் குழுக்களை நோக்கி நகர்ந்தது.

''1977 சீர்செய் இயக்கமும், 1979 சிறப்பு மாநாட்டில் அரசியல் வழியில் திசை மாற்றங்களும் இருந்திராவிடில் இன்று ஆயுதப் போராட்டமோ, விவசாயிகள் போராட்டமோ இருந்திருக்காது. 1977-ல் இருந்து ஆயுதமோதல்கள் புத்துயிர்ப்பு பெற்றன. நமது முந்தைய பிற கால கட்டங்களைவிட யூனிட்டுகளின் எண்ணிக்கையில், ஆயுதங்களின் எண்ணிக்கையில், செயல்பாட்டின் பரப்பில் பார்க்கும் போது இன்று பெரிதும் முன்னேறியுள்ளோம். இன்று கிராமப்புற கமிட்டிகள், பழைய புரட்சி கமிட்டிகளை விட அதிகமாக அதிகாரம் செலுத்துகின்றன. இன்றைய செம்பரப்புகள் பழைய செம்பிரதேசங்களைவிட அதிகமான செம்மையுடையனவாயுள்ளன. நிஜவாழ்க்கையின் இம்முன்னேற்றம் கருதுகோள்களில் பின்வாங்குதலால் நிறைவேறிற்று. பழைய கருதுகோள்களின் முன்னேற்றம் மெய்யான வாழ்க்கையின் பின்னடைவு என்று பொருளாகிறது.'' (1988 காங்கிரஸ் ஆவணம் - அழுத்தம் நமது.)

ஆகவே, புரட்சிக் கமிட்டிகளுக்குப் பதிலாக கிராமக் கமிட்டிகளும், செம்பிரதேசங்களுக்குப் பதிலாக செம்பரப்புகளும் பிறந்து உள்ளன. ஆனால், நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள்; இது கருதுகோள்களில் ஏற்பட்ட பின்னடைவு மட்டுமே. நிஜவாழ்வில் இவைகள் மிகப் பெருமளவு முன்னேறியுள்ளன. இதைத் தவிர வேறெதை நாம் குதர்க்கம் என்று சொல்லமுடியும்?

''இன்னும் நாம் பீகாரின் விவசாயப் போராட்டங்களை தொடக்க காலத்தினவை என்றே அழைக்க விரும்புகிறோம். இதன் பொருள் நாம் வர்க்க சக்திகளின் சமநிலையை மாற்ற வெகுதூரம் செல்ல வேண்டும் என்பதாகும். நாம் நமது சக்திகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்; வலிமையைத் திரட்டி படிப்படியாக போராட்டத்தை உயர்ந்த மட்டத்துக்கு வளர்த்தெடுக்க வேண்டும்.' இந்த எதார்த்தத்திலிருந்து நமது ஆயுதந்தாங்கிய படைகளின் நிலை தீர்மானிக்கப்பட்டது. பல்லாண்டுகளாக நாம் முறையான படைகளை முடிந்த அளவு பெரிதாகக் கட்ட முயன்று வந்தோம். நமது அனுபவம் பலர் போராளிகளாக இத்தகு யூனிட்டுகளில் இணைந்தாலும் சிலரால் மட்டுமே நீடிக்க முடிந்தது என்பதே. நமது எல்லா முயற்சிகளுக்கும் மீறி முறையான, உறுதியான படை வளர்ச்சி மிகக் குறைவானதாகவே இருந்தது

''இந்த நிலைமைகளின் அடிப்படையில் நாம் பகுதி குழுக்களைக் கட்ட முடிவெடுத்தோம். இப்பொழுது இத்திசையில் அதிக முன்னேற்றம் எட்டமுடியா வண்ணம், புதிய குழுக்களுக்கு, புதிய நிலைமைகளுக்கு ஏற்ப முறையாகப் பணிகளை வரையறுக்க முடியாத நமது இயலாமை இருந்தது. முதலில் நாம் பழைய பழக்கமான அழித்தொழிப்பின் உருவாக குழுக்களைக் கட்டும் பழக்கத்தை நிராகரித்தோம். பின் ஆயுதந்தாங்கிய பிரச்சார குழுக்கள் என்ற கோட்பாடு ஏற்கப்பட்டு, அந்த பகுதி ஆயுதந்தாங்கிய பிரச்சார குழுக்கள் முறையான ஆயுதந்தாங்கிய குழுக்களுக்கும், கிராமப்புற தற்காப்பு குழுக்களுக்கும் இடையிலான தொடர்புக் கண்ணிகள் என வரையறுக்கப்பட்டன. 15-20 கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகள் வரையறுக்கப்பட்டு, ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட காலத்தில் ஆயுதந்தாங்கிய பிரச்சார குழுக்கள் செல்ல முடிவெடுக்கப்பட்டது. நிரந்தர ஆயுதந்தாங்கிய யூனிட்டுகளில் இடம்பெற முடியாத போராளிகளில் பலர் இந்தக் குழுக்களில் அணிதிரட்டப்பட்டனர். முறையான யூனிட்டுகள் இந்தக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு தேவைப்படுகின்ற போது ஆயுதந்தாங்கிய மோதல்களுக்கு அணிதிரட்டப்பட்டனர்.''

''ஆயுதந்தாங்கிய போராட்டத்தின் இன்றைய கட்டத்தில், இந்த ஆயுதந்தாங்கிய பிரச்சார குழுக்களின் மீதுதான் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று எண்ணுகிறோம். இவை முறையான ஆயுதந்தாங்கிய படைக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைவையும் தருகின்றன. வருங்காலத்தில் முறையான படை



படிப்பகம்

www.padippakam.com

களுக்குத் தேவையான சக்திகளை இக்குழுக்களிடமிருந்து பரந்த அளவில் தேர்ந்தெடுத்து வளர்க்க முடியும்.''

''போராட்டத்தின் இந்தக் கட்டத்தில் முறையான ஆயுதந்தாங்கிய யூனிட்டுகள் முடிவெடுத்தாக்க ஆயுத மோதல்களை வலிமையான நிலப்பிரபுக்களின் ஆயுதந்தாங்கிய கும்பல்களுக்கு எதிராக நடத்துவதில் கவனஞ் செலுத்த வேண்டும். அவை போலீஸ் அராஜகத்துக்கு எதிராக மக்களைப் பாதுகாப்பது மட்டுமின்றி, தவறிழைக்கின்ற போலீசு அதிகாரிகளுக்குத் தகுந்த தண்டனையும் வழங்க வேண்டும்.'' (1988 காங்கிரஸ் ஆவணம் - அழுத்தம் எமது.)

முந்தைய கட்டத்தில் நிலப்பிரபுக்களின் குண்டர்படைகளுக்கும், போலீசுக்கும் எதிராக ஆயுதந்தாங்கிய மோதல்களை கையிலெடுக்க வேண்டியிருந்தது. 'இந்தக் கட்டத்தில்' முடிவெடுத்தாக்க ஆயுத மோதல்கள் வலிமைமிக்க நிலப்பிரபுக்களின் ஆயுதந்தாங்கிய குழுக்களுக்கெதிராக மட்டுமே!

இப்பொழுது 1990-ல் ஆயுதந்தாங்கிய யூனிட்டுகளைக் கைகழுவி விட்டாகிவிட்டது. இதற்கிடையில் தேர்தல் முடிவுகளில் ''சட்டசபை தொகுதிகளும், ஒரு பாராளுமன்றத் தொகுதியும் என்ற குறிப்பிடத்தக்க தொடக்கமும்'' பெற்றிருக்கிறார்கள். அவர்கள், ''பாராட்டத்தகுந்தபடி தங்கள் இயக்கம் இருப்பதை நாடாளுமன்றத்திலும், பீகார் சட்டசபையிலும் காட்டியுள்ளனர்.'' ''இடது ஒற்றுமையை வளர்ப்பதை நோக்கி ஆரம்ப முன்னேற்றம்'' காட்டியுள்ளவர். ''இடைக்கால தேர்தல் பற்றிய பேச்சு பலமாக அடிபடுவதால் ஓட்டு மொத்தக் கட்சியுமே எது வந்தாலும் எதிர்கொள்ள போல்ஷெவிக் துணிவுடன் தயாராக இருக்க வேண்டும்.'' இயற்கையாகவே இப்போது துப்பாக்கியை இன்னும் இறுகப் பற்றுவதில் உள்ள துணிச்சலை முறையான சோதனைக்குள் வைத்திருக்க வேண்டும்.

''ஆயுதந்தாங்கிய யூனிட்டுகளைப் பொறுத்த வரையில் இன்றைய கட்டத்தில் இதைவிட உயர்ந்த மட்டத்தக்கு ஆயுதப் போராட்டத்தை எடுத்துச் செல்லும் வாய்ப்புகளில்லை என்பதை நாம் தெளிவுபடுத்த வேண்டும். இப்பொழுது இருக்கிற ஆயுதந்தாங்கிய யூனிட்டுகளைப் பொறுத்தவரை அவை மேலும் இன்றைய எதிர்ப்புப் போராட்டங்களுடன் ஒன்றிணைய வேண்டுமானால், உள்ளூர் ஆயுதக் குழுக்கள் மற்றும் தற்காப்புப் படைகளின் கருவாக அவை இயங்க வேண்டியது அவசியம். எப்பொழுது அவசியமாக இருக்கின்றதோ அப்பொழுது ஒரு குறிப்பிட்ட நடவடிக்கைக்காக தற்காலிக அடிப்படையில் அவை ஒன்று சேர்ந்து இயங்கலாம்.''

''இந்த நிகழ்ச்சிப் போக்கின் வாயிலாகவே, இன்னும் பரந்த அளவில் மக்கள்திரள் எதிர்ப்புக்கான நிலைமைகளை உருவாக்கவும், இறுதியில் ஆயுதந்தாங்கிய எழுச்சியை உருவாக்கவும் முடியும்.'' (1990 காங்கிரஸ் ஆவணம்)

நிலையான படையிலிருந்து தொடங்கி கிராமப்புறத் தற்காப்புக் குழுவில் முடிந்து, தளப்பிரதேசத்தில் தொடங்கி பன்றித் தொழுவத்தில் முடிந்து - இந்திய மென்ஷெவிக்குகளின் பாதை இப்படித்தானிருக்கிறது. சந்தேகத்துக்கு இடமின்றி, ஒவ்வொரு குறிப்பிட்ட கட்டத்திலும் பருண்மையான நிலைமைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு ஆய்வு செய்து இக்கொள்கைகளை வடித்திருக்கிறார்கள்.

## தலைமறைவுக் கட்சியும், கலைப்புவாதமும்

1982-ல் 3-வது காங்கிரசின் தொடக்க உரையில் வினோத் மிஸ்ரா, கலைப்புவாதத்துக்கு எதிராக 'உக்கிரமான சித்தாந்தப் போராட்டம்' நடத்தியதற்கும், பிற அந்நியப் போக்குகளுக்கு எதிராக 'முன்னுதாரணமான வீரியத்துடனும், திறனுடனும்' போராடியதற்கும் தன் முதுகில் தானே தட்டிக் கொடுத்துக் கொள்கிறார்.

கலைப்புவாதிகளுக்கு எதிராக என்னென்ன பிரச்னைகளில் போராடினார் வி.எம்.?

''முதலாவதும் முக்கியமானதும் 1977-க்குப் பின் மாறிய நிலைமைகளில் கட்சி வெளிப்படையாகவும், சட்டபூர்வமாகவும் இயங்குவதா அல்லது இரகசியமாகவும், சட்டவிரோதமாகவும் இயங்குவதா என்ற கேள்வியாகும். கலைப்புவாதிகள் தங்களது சொந்தக் கணிப்புகளிலிருந்து தலைமறைவுத் தன்மையை கலைக்கக் கோரினர். சிலர் அதை ஒரேயடியாகவும், சிலர் பகுதி பகுதியாகவும் செய்யக் கோரினர். சிலர் இன்னும் மேலே சென்று கட்சி நிறுவப்பட்டதிலிருந்தே அராஜகத்தன்மை உடையதென்றனர். அவர்களது அறிக்கைகளை, குறிப்பாக நமது அமைப்பு பற்றியவற்றைப் பாருங்கள்; தலைமறைவை அவர்கள் எவ்வளவு வெறுக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடியும்; கலைப்புவாதிகளின் நிகழ்ச்சிநிரலில் இனி மேலும் புரட்சி என்பது இல்லை.''

''கலைப்புவாதிகள் வெளிப்படையான கட்சி என்ற தங்கள் சரக்கை விற்க வேண்டி சட்டபூர்வ, வெளிப்படையான வாய்ப்புகளைப் பயன்படுத்துவது பற்றி பெரும் ஆரவாரம் செய்கின்றனர். நமது கட்சி எவ்வாறு அதிகபட்சம் வாய்ப்புகளைப் பயன்படுத்த தயாரித்து வருகின்றது என்பதையும், அதே சமயம் அனைத்து சிறந்த சக்திகளையும் சட்டவிரோத அமைப்பின் கீழ் ஒன்றிணைப்பது என்ற 'தலையாய கொள்கைகளையும்' விடாது செயல்படுகிறது என்பதையும் அறிவீர்கள். நிலவுகிற சூழலில், தலைமறைவை நிராகரிப்பது கொள்கையற்ற சட்டவாதம் என்பது மட்டுமின்றி புரட்சியை வெற்றிகரமாக முடிக்க உறுதிபூண்ட ஒரு கட்சிக்கு தற்கொலைப் பாதையும் ஆகும்.''

''1979-80-ல் எஸ்.என்.சிங். விசுவாசிகள் சட்ட விரோதம் மற்றும் தலைமறைவை மறுத்து அதற்குப்



படிப்பகம்

www.padippakam.com

பதிலாக பொது சனநாயக இயக்கத்தில் இணையக் கூறினார்.''

''இறுதி ஆய்வில் எஸ்.என்.எஸ்.களை பிரிப்பதெல்லாம் கலைப்புவாதமே தவிர வேறல்ல. இக்கலைப்புவாதம் தலைமறைவை மற்றும் சட்ட விரோத அமைப்பைக் கலைத்துவிடுவது, விவசாயிகள் நிலப்பிரபுத்துவ மிச்சங்களை தூக்கியெறிய கிளர்ந்தெழச் செய்வதை மறுப்பது, பாட்டாளி வர்க்க நலன்களைப் பலியிடுவது, முதலாளித்துவ எதிர்த்தரப்போடு சமரசம் செய்து கொள்வது என்பதே.''

கம்யூனிஸ்ட் புரட்சிகர குழுக்கள் இணைய ஒரு நிபந்தனையாக விமோசன் குழு முன்வைத்தது ''கட்சி நிறுவனம் தலை மறைவாக மட்டுமே இருக்க வேண்டும்'' என்பதே. (ஆவணம் 1982 - அழுத்தம் எமது)

மறுபடியும் 1984-ல் கட்சி ஐக்கியத்திற்கான முன்மொழிதல்களை அவர்கள் முன்வைத்தபோது தலைமறைவுக் கட்சியைப் பெரிதும் வலியுறுத்தினர். ''கட்சியின் அடித்தள தலைமறைவு கட்டுமானம் எப்பாடு பட்டாவது காக்கப்பட வேண்டும்.'' ''அதேசமயம் எல்லா சட்டபூர்வ, வெளிப்படையான வாய்ப்புகளும் பயன்படுத்தப்பட வேண்டும்.'' (கட்சி வழி மீதான விவாதங்கள்)

1983 ஆகஸ்ட் மாத 'ஒரு புதிய ஜனநாயகத்துக்காக' என்ற இதழில், ''வி.எம்.காங்கிரஸ்'' எனும் தலைப்பில் பார்வையாளர் என்ற ஒருவரால் இக்குழுவின் வழி பற்றி எழுதப்பட்ட ஒரு கட்டுரை வந்தது. அதில், ''இன்றைக்கு நிலவுகின்ற வர்க்கப்போராட்ட மட்டம் ஒரு தலைமறைவு அமைப்பைக் கோருவதாய் இல்லை. இருந்தாலும், அதன் எதிர்கால வளர்ச்சி, அரசியல் வாழ்வின் ஒரு பகுதியான திருப்பங்கள், மாற்றங்கள் குறிப்பாக பாசிசத்தை நோக்கி படிப்படியாக நகரும் இந்திரா காங்கிரஸ் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு தலைமறைவு அமைப்பைக் கட்ட வேண்டியுள்ளது'' என்று எழுதியிருந்தது. இதற்கு வி.மி.குழு கூறும் எதிர்ப்புகளைக் கவனியுங்கள்: ''திருவாளர் பார்வையாளர் தலைமறைவுப் பிரச்சினையை வெறும் அரசியல் நிலைமை என்ற அளவுக்குத் தாழ்த்துகிறார். குறிப்பாக அரசியல் திருப்பங்கள், மாற்றங்கள் இந்திரா காங்கிரசின் பாசிசத்தை நோக்கி படிப்படியான வளர்ச்சி என்ற அளவுக்குத் தாழ்த்துகிறார் அரசியல் திருப்பங்கள், மாற்றங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு முதலாளித்துவ அரசியல் கட்சிகளில் சிலவும் கூட ஒரு வகையான தலைமறைவு வேண்டுமென்கின்றனர். இல்லை, திருவாளர் பார்வையாளரே; எங்களைப் பொருத்தவரை தலைமறைவு கட்சி அமைப்பையும், ரகசிய முறைகளையும் கட்டும் பிரச்சினையை அடிப்படையான பிரச்சினையாகக் கருதுகிறோம். கொள்கைப் பிரச்சினையாகப் பார்க்கிறோம். இதைக் கைவிடுவதென்பது லெனின் கூறுவது போல், 'புரட்சிக்கு எதிரான குற்றம்' ஆகும். (கட்சி வழி மீதான விவாதங்கள்)

பிறகு 1988-ல் வி.மி.குழுவே கட்சியை மறுசீரமைப்பதாகக் கூறிப் படிப்படியாக, பகுதி பகுதியாக தலைமறைவு அமைப்பைக் கலைத்தது.

''வெகுகாலமாகவே பழைய கட்சி அமைப்பும், புதிய வேலை நிலைமைகளும் ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமாக இருந்து வந்தன.''

''ஒட்டு மொத்தக் கட்சி முழுமைக்கும் தலைமறைவு அமைப்பை கரு மையமாக நீடிக்கச் செய்யும் அதே வேளையில், படிப்படியாக ஒரு புதிய சட்டபூர்வ கட்சி அமைப்பு வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.''

''தற்போதைய சட்ட அமைப்பு சில கட்சிப் பிரதிநிதிகள், சில கட்சி வெளியீடுகள், சட்டசபை, பாராளுமன்றத்தில் கட்சி பிரதிநிதிகள், தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களில் உள்ள நமது கட்சிக் குழுக்கள், கூட்டு உறுப்பினர் குழுவாக பல்வேறு கம்யூனிசப் புரட்சி சக்திகளைக் கொண்ட மா-லெ குழுக்கள், மார்க்சிய படிப்பு வட்டங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக உள்ளது.''

''சில மாநிலங்கள் மற்றும் பகுதிகளில் நெடுங் காலத்துக்கு பிரச்சாரம், கிளர்ச்சி என்ற ஆரம்ப அளவுக்கு மாத்திரம் போராட்டம் சுருங்கிப் போய் இருக்கிற இடங்களில் கட்சி அமைப்பு சட்டபூர்வமானதாக இயங்கலாம்.''

(4-வது காங்கிரஸ் ஆவணங்கள்)

''நாம் தலைமறைவு கட்டுமானம் கரு மையமாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாய் இருக்கிறோம். நமக்கும், தற்காலிக மத்தியக் கமிட்டிக்கும் இங்கேதான் அடிப்படையான வேறுபாடு உள்ளது. மேலும், இந்த மறுசீரமைப்பு படிப்படியாக இருக்க வேண்டும். ..''

''1969-ல் நமது கட்சி வெளிப்படையாக இயங்கி வந்தது. 1970-ல் எதிரியின் தாக்குதலால் நாம் அனைவரும் தலைமறைவானோம். இன்று நாம் சட்டபூர்வ அமைப்புகளை வளர்க்க முயல்வோம். நிலைமைகள் கோரினால் நாம் மீண்டும் தலைமறைவாகிவிடுவோம். கட்சி இந்த உருமாற்ற வித்தையைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதனால்தான் எங்கே கடுமையான போராட்டங்கள் இன்றி வெறும் பிரச்சாரம் மட்டும் நடந்து கொண்டு இருக்கிறதோ, அங்கே நமது தோழர்கள் இ.பொ.க. (மா-லெ) என்ற பெயரிலேயே செயல்படலாம். தேர்தல்களின் போதும் நமது சில வேட்பாளர்கள் இ.பொ.க. (மா-லெ) என்ற பெயரை அறிவித்துக் கொள்ளலாம். இதில் எந்த தீங்கையும் நான் காணவில்லை.'' (4-வது காங்கிரஸ்: வினோத் மிஸ்ராவின் விளக்கப் பதில்கள்)



படிப்பகம்

www.padippakam.com

வி.எம்.குழுவின் இந்த 'அடிப்படை மாற்றங்களின்' காரணம் என்னவென்று யாராவது யூகிக்க முடியுமா? வினோத் மிஸ்ராவே விளக்குகிறார்: ''பழைய அமைப்பு கலைப்புவாத சிந்தனைகளின் பிறப்பிடம்''; மெத்த சரி! தலைமறைவைக் கலையுங்கள்; கலைப்புவாதச் சிந்தனைகள் வெளியேற முடியாது - பாருங்கள்!

• லெனின் 1913 ல் எழுதினார்: ''கலைப்புவாதம் என்பது கட்சியின் ஒரு பிரிவு அறிவுஜீவிகள் நிலவுகிற கட்சி அமைப்பை என்ன விலை கொடுத்தாவது, ஏன் கட்சித் திட்டம், போர்த் தந்திரம், கட்சி மரபுகள் யாவற்றையும் ஒட்டு மொத்தமாக உதறிபெறிந்து விட்டு, கலைப்பதற்கு (அதாவது கலைப்பது, அழிப்பது, நீக்குவது, மூடிவிடுவது) முயலுவது; கலைத்து விட்ட பின், அதற்கு மாற்றாய் சட்டபூர்வமாய் இயங்கும் தளர்ந்த அமைப்பைக் கட்டுவது. (அதாவது, சட்டத்திற்குக் கட்டுப்பட்டு வெளிப்படையாக இயங்கும் அமைப்பு.)

''கலைப்புவாதத்தைப் பற்றி நான்காண்டுகளுக்கு முன் ஏற்கப்பட்ட கட்சி முடிவு இதுதான். இந்த முடிவிலிருந்து கலைப்புவாதத்தின் சாராம்சம் என்ன? அது ஏன் வெறுக்கப்படுகிறது என்பது வெளிப்படை. அதன் சாரம் தலைமறைவை உதறிவிடுவது; கலைத்துவிடுவது. என்ன விலை கொடுத்தும் உதிரும் தன்மை கொண்ட சட்டபூர்வமாக இயங்கும் அமைப்பைக் கட்டுவது மட்டுமே. ஆகவே, கட்சி கண்டனம் செய்வது சட்டபூர்வமான வேலையை அல்ல; அல்லது தன் தேவையை வலியுறுத்துவதை அல்ல; பழைய கட்சி அமைப்பை நீக்கிவிட்டு, அதனிடத்தில் உதிரும் தன்மையுள்ள வெளிப்படையான, கட்சி என்றழைக்க முடியாத ஒன்றைத்தான் கட்சி கண்டிக்கிறது.'' 1990 மாநாட்டில் வி.எம்.குழு தலைமறைவை ஒழித்துக்கட்டும் தனது முழு வளர்ச்சி பெற்ற கலைப்புவாத தர்க்கத்தைத் தந்தது.

[illegible]து தோழர்களில் சிலர் கலைப்புவாதம் என்பதை வெளிப்படையான கட்சிக்குக் கோருவது என்பதாக வரையறுத்தி, மிக எளிமைப்படுத்தப்பட்ட புரிதல் கொண்டுள்ளனர். இத் தோழர்கள் கலைப்புவாதம் என்பது சாராம்சத்தில் கட்சியையே, அது வெளிப்படையானதோ, ரகசியமானதோ கலைத்து விட்டு அதற்குப் பதிலாக பாராளுமன்றப் பாணி, முதலாளித்துவ, தாராளவாத கட்சியை நிறுவுவதே என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர்.''

''1980-களின் தொடக்கத்திலிருந்தே கட்சி வேலைகளின் பிரதான வடிவம் மாறத் தொடங்கி விட்டது. அதன் பின்பு வந்த ஆண்டுகளில் மக்கள் திரள் அரசியல் போராட்டங்களே கட்சி நடவடிக்கையின் பிரதான வடிவமாக இருக்க வேண்டும் என்பதையும், ஆயுதப் போராட்டம் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட வேண்டும் என்பதையும் உணர்ந்தோம். போராட்ட வடிவமானது தீவிரமான மாற்றம் பெற்று விட்ட போதும், கட்சி அமைப்பு வடிவம் பழைய பாணியிலேயே இருந்தது; இது பழைய போராட்ட வடிவங்களை வழிநடத்த உகந்ததாக மட்டுமே இருந்தது. இந்த இடைவெளியை வெகுஜன அரசியல் அமைப்பை நிறுவுவதன் மூலம் இட்டுநிரப்ப முயன்றோம். என்றாலும் பழைய கட்சி வடிவம் இனிமேலும் வெகுஜன அரசியல் அமைப்புக்கு - பாராளுமன்றப் போராட்ட வடிவம் உட்பட பலவாறாக விரிவடைந்து கொண்டே சென்ற அரசியல் நடவடிக்கைகளுக்குத் தேவையான வழிகாட்டவோ, தலைமை தாங்கவோ சக்தி அற்றது என்பதை விரைவிலேயே உணர்ந்தோம்.''

''கட்சியின் இந்தப் பிரச்சினை தலைமறைவு கட்சி அணிகளிடமும், உறுப்பினர்களின் வளர்ச்சியில் இருந்த கிட்டத்தட்ட முற்றுமுழுத் தேக்கமான நிலைமையாலும் வெளிப்பட்டது. எந்தப் பண்பும் குறிப்பிட்ட அளவில்தான் வெளிப்பட முடியும். ஆகவே, ஒரு புறம் விரிவடைந்து கொண்டே வந்த வெகுஜன இயக்கம், மற்றொரு புறம் மிகக் குறைந்த அளவு உறுப்பினர் பாரதூரமான ஒரு நெருக்கடியை பிரதிபலித்தது; இதன் வேர்கள் பழமைப்பட்டுப் போன கட்சி கட்டுமானம் என்பதிலேயே இருக்கிறது. கட்சியின் அரசியல் வழி, போர்த்தந்திர வழி ஆகியவற்றின் சரியான தன்மை மக்கள்திரள் போராட்டங்களின் விரைந்த வளர்ச்சியிலும், மக்கள் திரள் அரசியல் ஸ்தாபனங்களின் பெருகிவந்த செல்வாக்கிலும் வெளிப்பட்டுள்ளது. எனவே, கட்சியில் தேக்கம் எனும் நெருக்கடியைத் தீர்க்க கட்சியின் ஸ்தாபன வழிமுறையை ஆய்வதைத் தவிர வேறு வழியில்லை. கட்சியின் முழுப்பங்கை வெளிக் கொணர, கட்சி அமைப்பை மறு சீரமைக்கும் திட்டம் ஒன்று கட்சியின் நான்காவது காங்கிரசில் முன் வைக்கப்பட்டது. அதன்படி கட்சியின் பிரதிநிதிகளை நியமிப்பது, கட்சிப் பதாகையை மக்கள்திரள் அரசியல் அமைப்புகளில் அறிமுகப்படுத்துவது, தலைமறைவு கட்சி அமைப்பாளர்களின் வேலைப் பாணியில் பாரதூரமான மாற்றத்தைக் கொண்டு வந்து அதை சட்டபூர்வமாக இயங்க ஊக்குவிப்பது என்ற மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இதனால் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டன. கட்சி இழந்திருந்த முன்முயற்சியின் ஒரு பகுதி திரும்ப அடையப் பெற்றது. கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்தது; பிற சக்திகளுடன் நேரடி கலந்துறவாடல் என்ற வகையில் வளர்ச்சியும் தென்பட்டது. இருந்தாலும், போராட்டத்தில் நாம் பண்புரீதியாக புதிய விசயங்கள் படைக்கவில்லை என்பதையும் அனுபவம் உணர்த்தியது. மேலும் மறுசீரமைப்பு நிகழ்ச்சிப் போக்கே, நமக்கு கம்யூனிஸ்டுகளுக்கேயுரிய துணிவுடன் அடுத்த தர்க்கபூர்வமான நடவடிக்கையை எடுக்கக் கோரியது. கட்சியின் மறுசீரமைப்பு தனது செயல் வட்டத்தில் கட்சியின் முக்கியக் கருக் குழுவையும் உள்ளடக்கியிருக்க வேண்டும் என்று நாம் முன்வைத்தோம். கட்சி அதிக அல்லது குறைந்த அளவு வெளிப்படையாக இயங்கத் தயாராக இருக்க வேண்டும். இது இன்று மார்க்சியத்தையும், கட்சியையும் அதிகரித்துவரும் முதலாளித்துவ தாக்குதல்களிலிருந்து பாது



படிப்பகம்

காக்க, குறிப்பாக, உலக கம்யூனிச இயக்கத்தில் இன்று ஏற்பட்டுள்ள நடப்பு மாற்றங்களுக்குப் பின், ஊக்கமடைந்துள்ள முதலாளித்துவ உலகிலிருந்து பாதுகாக்க அவசியமாகிறது.''

''இருந்தாலும் இதன் பொருள் நாம் தலைமறைவையே கைவிடச் சொல்கிறோம் என்பதல்ல; குறிப்பான பகுதிகளில் நிலைமைகளுக்கு ஏற்ப நாம் தலைமறைவாகவும் இயங்கலாம். மேலும், நாம் எதிரியின் முகாமுக்குள் ரகசிய கட்சி நிறுவனத்தைக் கட்ட சிறப்பு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். சட்டபூர்வ, இயல்பான மூடுதிரையின் கீழ் நமது தொடர்பு முனைகள் கொண்ட கட்சியின் ரகசிய பிரிவு ஒன்றைக் கட்ட வேண்டும். அது மொத்தக் கட்சி அமைப்போடும் நன்றாக இணைக்கப்பட்டு இருக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், தேவைப்படும்போது, சூழ்நிலைகள் அவ்வாறு கோரும்போது, கட்சியானது தலைமறைவாக மாறிக் கொள்ள வகை செய்யும் ரகசிய வலைப்பின்னல் ஒன்றை வைத்திருக்க வேண்டும்.''

இந்த நெடிய பாராவின் பாடம் தெளிவானது. கலைப்புவாதத்தை வெளிப்படையான கட்சிக்கான கோரிக்கையோடு சேர்த்து குழப்பிக் கொள்ளக் கூடாது. விவசாயிகளின் ஆயுதந்தாங்கிய எழுச்சி, தலைமறைவு, சட்ட விரோத அமைப்பு இரண்டையும் மறுத்து விட்டு, பொதுவான ஜனநாயக இயக்கத்தில் இணைந்துவிட வேண்டும். அரசியல் தேவைகளுக்காக தலைமறைவு அமைப்பைக் கலைப்பது அவசியமாகிறது. கட்சியின் மையக்குழுவே வெளிப்படையானதாகவும், சட்டபூர்வமாகவும் இயங்க வேண்டும். ஒரு தலைமறைவுக் கட்சியால் மார்க்சியத்தை முதலாளித்துவ உலகின் தாக்குதலில் இருந்து பாதுகாக்க முடியுமா? கட்சி உறுப்பினர் எண்ணிக்கையும் கூட மட்டமேதான் என்கிறது. கட்சியானது வெகுசனங்களின் பெருந்த எண்ணிக்கையை அல்லது கட்சிக்கு வெளியில் இருந்துகொண்டு ஊர்வலங்களில் கலந்து கொள்ளும் பெரும் ஜனத்திரளை எண்ணிப்பாருங்கள். வர்க்க உணர்வு கொண்ட முன்னணிப் படையை ஜனத்திரளோடு, கட்சியை வர்க்கத்தோடு சமப்படுத்துங்கள். எனவே இ.பொ.க. (மா-லெ)-க்கு விடை கூறுங்கள். நாம் கோர்பச்சேவின் கூட்டாளிகளாக மகிழ்ச்சியுடன் இருப்போம். ருஷ்ய கலைப்புவாத மென்ஷெவிக்குகளின் வாரிசுகளாக இருப்போம். செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் 1912-13-ல் 'லச்' (Luch) என்ற சட்டபூர்வ தினசரி பத்திரிகையை மென்ஷெவிக் கலைப்புவாதிகள் தொடங்கினர். தாராளவாத முதலாளிகளின் நிதியில் இது நடந்தது. அதன் 181-ஆவது இதழில் அதன் ஆசிரியர்கள் எழுதினர்: ''சமூக ஜனநாயகவாதக் கட்சியானது, வாழ்வின் எதார்த்த நிலைமைகளால் தலைமறைவு வாழ்க்கைக்குத் தள்ளப்பட்ட சில தோழர்களுடன் மட்டும் வரம்பிட்டுக் கொள்வதல்ல. ஒட்டுமொத்தக் கட்சியுமே தலைமறைவாயிருந்தால் அதில் எத்தனை உறுப்பினர்கள் இருப்பர்? இருநூறு அல்லது முந்நூறு இருக்குமா? உண்மையில் சமூக - ஜனநாயகவாதக் கட்சியின் வேலையைச் செய்துவருகிற பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்குத் தலைமறைவுக் கட்சியில் ஏது இடம்?''

ஒரு காது அறுந்தவன் வெட்கப்பட்டுக் கொண்டு கிராமத்தைச் சுற்றிக் கொண்டு செல்கிறான்; இரு காதும் இழந்தவன் நேரே கூச்சமின்றி போகிறான்.

## சமூக ஏகாதிபத்தியம், சோசலிசம், இன்றைய நெருக்கடிகள்

சோவியத் யூனியன் ஒரு சமூக ஏகாதிபத்தியமாகச் சீரழிந்துவிட்டது என்ற இ.பொ.க. (மா-லெ)-யின் வரையறையை லிபரேஷன் குழு ஏற்றுக் கொண்டிருந்தது.

''நமது நாட்டின் எதிர்ப்புரட்சி இந்திய அரசு சமூக ஏகாதிபத்தியத்தின் பாதந்தாங்கியாக இருக்கிறது. அது தேசிய அடக்குமுறைக் கொள்கையைப் பின்பற்றிவருகிறது. ஆயிரக்கணக்கான சோவியத் வல்லுனர்கள் ஒட்டுமொத்த ராணுவ அமைப்பையே கட்டுப்படுத்துகின்றனர்.'' *(1976 காங்கிரஸ் அறிக்கை, மூலம்: வங்காளி, அழுத்தம்: நமது)*
அதன் பின் அவர்கள் டெங்கின் வர்க்கசமரச மூன்றுலகக் கோட்பாட்டில் பிந்தேறிக் கிடந்தனர்.

''சோசலிச முகமூடி அணிந்துகொண்டு 'அமைதி', 'ஜனநாயகம்' எனும் பெயரில் உலக மேலாதிக்கத்துக்கு முயலும் ருஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தின் முயற்சிகள் உலக மக்களால் கடும் எதிர்ப்புக்குள்ளாகியுள்ளன.'' *(லிபரேஷன், சனவரி 1978, மூலம்: இந்தி.)*

''நாம் புதிய ஆண்டில் காலை வைக்கிறோம். உலக முழுவதுமுள்ள நிலைமைகள் நமக்கு சாதகமாகி வருகின்றன. தலைவர் மாவோவின் மூன்றுலகக் கோட்பாட்டை உயர்த்திப்பிடிப்பதில்தான் இரண்டு மேல்நிலை வல்லரசுகளையும் எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் பெறும் வெற்றிகள் அமைந்துள்ளது.''

''சோவியத் சமூக ஏகாதிபத்தியம் மேலும் மேலும் தீவிரமாக நெருக்கடிக்குள்ளாகி வருகின்றது. பல நாடுகளில் ராணுவ ஆட்சி கவிழ்ப்புகளை அரங்கேற்றவும், அரசியல் எதிரிகளை படுகொலை செய்யவும், அதன் தரகர்கள் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றவும், தேசிய இனங்களை ஒடுக்கவும், வெகுஜன எழுச்சிகளை தனது சொந்த நலன்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளவும், தன்னாலியன்ற அனைத்தையும் செய்து வருகின்றது.''
*(லிபரேஷன், 1979 ஜனவரி. மூலம்: வங்காளி)*

''உலக நிலைமைகள் இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு பெரிதும் மாறியுள்ளன. பல அம்சங்களில் இரண்டாம் உலகப் போரின் போது நிலவிய நிலைமைகள் போல இன்று இருப்பினும் வரலாற்று நிகழ்ச்சிகளை ஒப்புமையிடுவது தவறானதாகும்.''

''அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் உலக மேலாதிக்கத்துக்கான போட்டியில் மூர்க்கமாக இறங்கி

www.padippakam.com

புள்ள சோவியத் யூனியன் ஒரு போர் அபாயத்தை வளர்ப்பதாக, அதிலும் குறிப்பாக அதன் பாசிச இராணுவ எந்திரத்தினால் உலக நாடுகளுக்கு எதிரானதாக நிற்கிறது. அமெரிக்கா அதன் கீழ்நோக்கிய சரிவு காரணமாக சில நாடுகளுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. எனவே, சூழ்நிலை பொதுவாக ஒரு பாசிச எதிர்ப்பு முன்னணியை உருவாக்கும் நிகழ்ச்சிப் போக்கை ஒட்டி முன்னேறுகிறது.'' (லால்ஜெண்டா, ஆகஸ்டு 80. மூலம்: இந்தி.)

1982-ல் நடந்த அவர்களது மூன்றாவது காங்கிரசு இந்த கருத்துக்களில் சில அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வந்தது. உண்மையில் இந்தக் காலத்தில் டெங் கும்பலின் திருத்தல்வாதம் உச்சத்தில் இருந்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரான்ஸ், இத்தாலி போன்ற பழைய திருத்தல்வாத கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் சகோதரத்துவ உறவை மீட்டமைத்தது. இந்திய திருத்தல்வாத இ.க.க. (மா) - வுடன் உறவு மேற்கொண்டது. யூகோஸ்லேவியாவை சோசலிச நாடாக அங்கீகரித்தது. மாபெரும் விவாதம் போன்ற ஆவணங்களை சத்தமில்லாமல் ஒரு தலைபட்சமாக பின்வாங்கிக் கொண்டது.

''பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்ற பெயரில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி, பிற நாடுகள் மற்றும் சகோதரக் கட்சிகளுக்கு இடையிலான உறவில் மேலாதிக்க போக்கையே பின்பற்றுகிறது என்ற யூரோ - கம்யூனிசத்தைப் (Euro - Communism) பின்பற்றும் பழைய திருத்தல்வாதக் கட்சிகளில் சில வெளிப்படையாகக் குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளன. அவர்களது செயல்பாடு பற்றி புதிதாக சில மதிப்பீடுகள் செய்யவும் தொடங்கியுள்ளன. நிச்சயம், இது ஒரு சாதகமான வளர்ச்சியாகும்.''

''போலந்துத் தொழிலாளர்கள் திருத்தல்வாத அதிகாரவர்க்கத்துக்கெதிராகவும், சோசலிச ஜனநாயகத்துக்காகவும் போராடுவது சோவியத் யூனியனின் சீரழிந்த சோசலிசத்துக்கு எதிரான போராட்டத்துக்குப் புதிய பரிமாணத்தை அளித்துள்ளது.''

''நாம் அமெரிக்கத் தாக்குதலை வன்மையாக எதிர்க்கிறபோது, சோவியத் யூனியனுக்கு எதிராகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். சோவியத் யூனியனை எதிர்க்கிற அதே வேளையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் விழிப்புடனிருக்க வேண்டும்.'' (1982 காங்கிரஸ் ஆவணங்கள்)

''உலக மார்க்சிய - லெனினிஸ்டுகள் இன்று நிகழ்கால ஏகாதிபத்தியத்தைப் பற்றிய ஒட்டுமொத்த ஆய்வு போன்ற சில தத்துவார்த்த மற்றும் நடைமுறை பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். சோசலிஸ்ட் நாடுகளின் சீரழிவுக்கு காரணமான பல அம்சங்கள்; அந்த நாடுகளின் உண்மையான உற்பத்தி நிலைமைகள், வர்க்கக் குணாம்சம், சோசலிச நிர்மாணம் பற்றிய சில கூர்மையான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சிகளிடையில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் இன்றைய கட்டத்துக்கு ஏற்ப கோட்பாட்டுரீதியில் அமைந்த பருண்மையான ஒற்றுமை, கோட்பாட்டுரீதியில் ஒழுங்கமைந்த விவாதங்கள் நடக்கும் வழிமுறைகள் உருவாக்க வேண்டும்; கடந்த 50 ஆண்டுகளின் அறிவியல் முன்னேற்றங்களை பொருள்முதல்வாத அடிப்படையில் தொகுப்பது போன்ற பல முக்கியமான பிரச்சினைகள் மா-லெ இயக்கத்தின் முன் உள்ளன. முக்கியத்துவமுடைய அடிப்படை பணிகள் இதை நோக்கி செய்யப்பட்டுள்ளன. ஆனால், இவை மெய்யான தத்துவார்த்த வெற்றிகளைத் தருவதற்கு இவை முழுமைப்படுத்தப்பட்டு தொகுக்க வேண்டும். அதைக் காலந்தாழ்த்துவது இந்தப் பிரச்சினைகளின் கூட்டு விளைவால் நிலைமையை மேலும் சிக்கலாக்கும். ஆனாலும், இதை 'நெருக்கடி' என்று அழைக்கமுடியாது.'' (லிபரேஷன் 1983. அழுத்தம் எமது)

உண்மையான தத்துவார்த்த வெற்றிகள் டெங், கோர்பி, வி.எம். வகையறாக்களால் கூட்டாக சந்தேகத்துக்கு இடமின்றிச் சாதிக்கப்பட்டுள்ளன. இம்முடிவுகள் 4-வது காங்கிரஸ் ஆவணத்தில் அப்பட்டமாக வெளிப்பட்டது.

''செக்கோஸ்லோவாக்கியச் சம்பவத்தின் பின் சீனத் தலைமையின் தூண்டுதலால் நாமும் ருஷ்யாவை சமூக ஏகாதிபத்தியம் என்றோம். இவ்வரையறை உலகக் கம்யூனிச இயக்கத்தில் சந்தர்ப்பவாத நோக்காக இப்பொழுது குறிக்கப்படுவதில்லை. 70-களின் மத்தியில் சமூக ஏகாதிபத்தியத்தை நியாயப்படுத்தும் வகையில் சோவியத் யூனியனில் நிதி மூலதனம், ஏகபோகங்களின் வளர்ச்சி கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின், அது உலகை மறுபங்கீடு செய்ய முயல்வதும், புதிய ஏகாதிபத்தியமாக இருப்பதால், அதை தாக்குதல் சக்தி என்று வரையறுத்ததும் நிகழ்ந்தது. இரண்டாம் உலகப் போருக்கு முந்தைய நிலைமையுடன் ஒப்பிட்டு, சோவியத் யூனியன் ஹிட்லரின் ஜெர்மனிக்குச் சமப்படுத்தப்பட்டு, மூன்றாம் உலகப் போரின் பிரதான ஊற்றுக்கண் என்று சித்தரிக்கப்பட்டது. இந்தத் தத்துவார்த்தப் பிறழ்ச்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட விவரங்களை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தத்துவ உருவமைப்புக்குள் பொருத்துவதே தவிர வேறு இல்லை என்பது வெளிப்படை.''

''நிதி மூலதனம், பன்னாட்டு தொழில் கழகங்களின், ஏகபோகங்களின் வளர்ச்சி சோவியத் யூனியனில் உள்ளது என்றோ, உபரிமூலதனம் ஏற்றுமதி செய்யப்பட்டு [illegible] என்றோ கூற ஆதாரங்கள் இல்லை. உண்மையில் சோவியத் யூனியன் இரண்டாவது பொருளாதார சக்தியாக இருந்தாலும் கூட, இன்று அது மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிலையிலுள்ளது. அதன் இந்தியா உடனான பொருளாதார, வர்த்தக உறவுகளைப் பொருத்தவரை இந்தியாவே லாபமடைந்த தரப்பு என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. சில அதிகாரவர்க்கத் திரிபுகளைத் தவிர, சோவியத் யூனியனின் உற்பத்தி நிலைமைகள் பெரும்பாலும் சோசலிச உற்பத்தி உறவுகளாகவே உள்ளன. சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பா, [illegible],



படிப்பகம்

www.padippakam.com

வடகொரியா, கியூபா போன்ற நாடுகளுடன் கொண்டுள்ள உறவுகள் சுரண்டல் உறவுகள் என்று கூற முடியாது.

''70 ஆண்டுகால சோசலிச நிர்மாண வரலாறு அது ஒரு நீண்ட சிக்கலான நிகழ்ச்சிப் போக்கு என்று காட்டுகிறது. நிலவுகிற உற்பத்தி சக்திகளின் பொருளியல் நிலைமைகளை கணக்கிலெடுத்துக் கொள்ளாது சோசலிசத்தைக் கட்ட முயன்றது பின்னடைவையே சந்தித்தது. மாபெரும் பாய்ச்சல்களை சாதித்தனவாகக் கருதப்பட்ட சோசலிச நாடுகள் திரும்பவும் ஆரம்பத்திலிருந்து தொடங்க நேரிட்டது. பின்தங்கிய முதலாளித்துவ பொருளாதார நிலைமைகளும், பெரும் விவசாயமக்கட் தொகையும் கொண்ட நாடுகளில் சோசலிசம் கட்டுவதென்பது பண்டப் பொருளாதாரச் சந்தைச் சக்திகள் (Commodity Economy Market forces) பல்வேறு முதலாளித்துவ சக்திகள், முதலாளித்துவ அறிவுத்துறையினர் ஆகியவற்றின் நெடிய காலப் பயன்பாடு, படிப்படியான மாற்றம் ஆகியவற்றின் மூலமே சாதிக்க முடியுமென்பது 70 ஆண்டுகால சோசலிச வரலாற்றிலிருந்து தெரிகிறது. இப்பாதை மிகவும் சிக்கலானதும், அபாயங்கள் நிரம்பியதுமாகும். ஆனால், இதுதான் ஒரேவழி. அதிதீவிர இடது கோட்பாடுகள் இக்கட்டங்களைத் தவிர்த்துவிட்டு தாண்டிச் செல்லக் கூறுகின்றன. இவை புதிய கற்பனாவாத சோசலிச கோட்பாடுகள். இவர்களுக்கு சோசலிசம் உலக வரைபடத்திலிருந்து மறைந்துவிட்டது. முதலாளித்துவத்திடம் தோல்வியுற்றுவிட்டது. இங்கே விநோதமான முறையில் கடைகோடி இடது கருத்துகள், கடைகோடி வலது கருத்துக்களுடன் இணைகின்றன. மா-லெ வாதிகளாகிய நாம் இவற்றை நிராகரிக்க வேண்டும்.'' (4-வது காங்கிரஸ் ஆவணங்கள் - அழுத்தம் எமது.)

ஆனால், பெரும் சோசலிச முகாமுடன் இருக்கிறோம் என்ற வி.எம். குழுவின் கணிப்பு சில காலமே நீடித்தது. இரண்டே ஆண்டுகளில் 'சோசலிசத்தின் முதல் பெரும் சிக்கல்' தோன்றிவிட்டது. இந்த 'அதிர்ச்சி' நமது மென்ஷெவிக்குகளை ''அடிக்கடி மறக்கப்படும் மார்க்சிய அடிப்படைகளை மறுகண்டுபிடிப்பு செய்து, அதன் அடிப்படையில் இவ்வறிவியலை, எதார்த்தத்தை மாற்றும் புரட்சிகர போராட்டங்களில் பெற்ற புரட்சிகர அனுபவத்தின், உறவுகளின் ஒளியில் செழுமைப்படுத்தத்'' தூண்டியது. இப்போது அவர்கள் ''மார்க்சியத்தின் அடிப்படைகளை மறுபடியும் வலியுறுத்தும், மறுபடியும் பிரபலப்படுத்தும் பணியைக்'' கையிலெடுத்துக் கொண்டுள்ளனர். அவர்களை கிழக்கு ஐரோப்பியத் தலைவர்கள் படுமோசமாக கைவிட்டுவிட்டனர். இப்பொழுது அந்தத் தலைவர்களே சோசலிசம், மார்க்சியம், கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றைக் கைவிட்டுவிட்ட போது, அவர்களது மென்ஷெவிக் நண்பர்கள் என்ன சொல்லி அவர்களைக் காப்பாற்ற முன்வருகிறார்கள்? வி.எம். குழுவின் 1990 ஆவணம் அவர்களது வண்ண வண்ணமான அரிய முடிவுகள், கண்டுபிடிப்புகளால் மின்னுகிறது. அவற்றில் சில நமது வாசகர்களுக்கு தொகுத்து தரப்படுகின்றன.

''கிழக்கு ஐரோப்பா சோசலிசத்தின் மாபெரும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது'', ''சோவியத் யூனியன் எப்பக்கம் போவதென தெரியாமல் கடும் நெருக்கடியில் உள்ளது'', ''சோசலிசம் சீனாவில் தப்பித்துவிட்டது'', ''அடிப்படையில் அது திட்டமிட்ட பொருளாதாரத்தின் பிரச்சினை.'' சோசலிச அமைப்பின், ''பன்முகமாக விரிவடையும் வளர்ச்சித் தன்மையின் நிரூபிக்கப்பட்ட திறமைக்கு ஏற்ப ஆழமான வளர்ச்சி உருவாக்கப்படவில்லை; அதாவது, தரமேம்பாடு, புதுமாக்கங்கள் முதலியவற்றில் அழுத்தமான வளர்ச்சி உருவாக்கப்படவில்லை; இதற்கு மிகமுக்கியக் காரணம் போட்டியின்மையே.'' ''கிழக்கு ஐரோப்பாவின் மேல் சோசலிசம் திணிக்கப்பட்டது'', ''தேசிய இன உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகள் கிழக்கு ஐரோப்பா கம்யூனிஸ்ட் கட்சிகளால் பிரதிநிதித்துவப் படுத்தவோ, வெளிப்படுத்தவோ முடியவில்லை.'' ''இந்த மாற்றங்கள் முற்போக்கானவை; ஏனென்றால், இவை சோசலிசத்தின் ''பரிதாபகரமான கேலிசித்திரங்களை அகற்றியுள்ளன. லிகச்சேவ் போன்றவர்கள் 'பழைய கம்யூனிஸ்ட்டுகள்'; 'யெல்ட்சின் ''கலைப்புவாதி''; ''பஞ்சப ஓடுகாலி'': ''மூன்றாம் உலகத்தில் கம்யூனிச இயக்கத்துக்கு ஒட்டு மொத்த பின்னடைவு எதுவுமில்லை என்பதற்கு நாம் மகிழ்ச்சி கொள்கிறோம்.'' ''ஏகாதிபத்திய எதிர்ப்பை தங்களது திட்டத்தில் ஒரு முக்கிய பொருளாக வைத்திருக்கும் அடிப்படையில் இ.க.க.(மா) உட்பட மூன்றாம் உலகக் கட்சிகளிடையில் சில பொதுவான நோக்கங்கள், உடன்பாடு காண முடிவது குறித்து மகிழ்கிறோம்'', ''சீனாவில் இப்பொழுது அமுலாக்கப்படும் / முன்வைக்கப்படும் சில திட்டங்கள் மார்க்ஸ் - எங்கெல்ஸால் முன்வைக்கப்பட்டவைக்கு எதிரானதாகத் தோன்றக்கூடும். ஆனால், சமூக முன்னேற்றம் என்ற நோக்கு நிலையிலிருந்து பார்க்கும்போது இவை தீமையைவிட நன்மையையே பயக்கும்'', ''நாம் பல கட்சி அரசியல் வேண்டும் என்கிறோம். ஏனெனில் அது இன்றி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமென்பது நமக்கு வரலாறு காட்டிய அனுபவத்தின்படி 5 சதவீதம் பேர் 95 சதவீதம் பேரின் அதிகாரம் செலுத்துவதாகவே இருக்கும்''; ''நாம் பல கட்சி அரசியலை பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை அமுல்படுத்தும் உபகரணமாகக் கருதி வரவேற்கிறோம்.'' (1990 ஆவணங்கள்)

1990 மாநாட்டில் வி.எம். தனது விளக்க உரையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றி பின்வருமாறு கூறினார்: ''இந்தச் சொற்களை கைவிடுவது சோசலிச சமூக அரசின் உள்ளடக்கத்தை மாற்றிவிடுமா? அரசு என்பது ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தின் மீது செலுத்தும் அதிகாரம் தான். இது ஒரு சமூக எதார்த்தம். ஆகவே, இந்த சொற்களை நமது இலக்கியங்களிலிருந்து நீக்குவது இந்த எதார்த்தத்தைக் கொஞ்சமும் பாதிக்காது.'' (லிபரேஷன், செப். 1990) நேற்றுதான் அவர்களே போற்றிக் கொண்ட



படிப்பகம்

ளர்; ''நடைமுறை அரசியல் பிரச்சினைகளில் நாம் நமது வளைந்து கொடுக்கும் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதே சமயம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் போன்ற நமது கொள்கைப் பிரச்சினையில் 'உறுதியோடு' நிற்க வேண்டும்.'' (லிபரேஷன், 1983)

ஆகவே அரசியல் கொள்கைகள் அரசியல் வசதிக்கேற்ப பலியிடப்படலாம். இல்லையா, திருவாளர் வினோத் மிஸ்ரா அவர்களே? அது தலைமறைவு கட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் போன்றவற்றில் பலியிடப்படலாம் என்றால் ஏன் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரையும் பலியிடக்கூடாது? அதில் என்ன தவறிருக்கிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற சொற்களை உங்கள் இலக்கியத்திலிருந்து கைவிடுவதால், உங்கள் கட்சி 'தாராளவாத முதலாளித்துவ கட்சி' ஆகிவிட்டது என்ற எதார்த்தத்தையும் பாதிக்காது. அரசியல் - நடைமுறை ரீதியான மேலும் குடும்ப ரீதியான ஆண்டுக் கணக்கில் ஊட்டி வளர்க்கப்பட்ட உறவுகளில் ஜாய் என்ற நீண்ட நாளைய தோழர் கட்சியைவிட்டு விலகியதால், உணர்ச்சிமயமான அதிர்ச்சி ஏற்பட்டு நீங்கள் பாதிக்கப்படாமல் இருந்திருக்கலாம் அல்லவா? மற்றொரு விஷயம். தமது மத்திய பிரச்சார ஏட்டில் இக்குழு வாசகர்களுக்கு மீண்டும் மீண்டும் உறுதியளித்தது: ''நாம் வரலாறு திரும்ப நிகழ அனுமதியோம். நமது சில தாராளவாத நண்பர்கள், பிற இடதுசாரி கட்சிகளிலுள்ள நண்பர்கள், சில சந்தர்ப்பங்களில் நமது மிக மோசமான எதிரிகளும் கூட 1950-களில் இ.க.க. செய்ததை நாம் திரும்பச் செய்ய வேண்டுமென ஆசை காட்டுகிறார்கள். ஆயுதங்களை கீழே போடுங்கள்; கடந்த காலத்தின் இறுதிச் சுவடுகளை அழித்துவிட்டு பாராளுமன்றவாதம் என்ற பிரதான நீரோட்டத்தில் கலந்து கொள்ளுங்கள் என்றழைக்கின்றனர். நாம் அவர்களுக்கு இணங்கப் போவதில்லை.'' (லிபரேஷன், நவம்பர் 1988)

இவ்வாறு பேசிய வி.எம். குழுவினர் ''இ.க.க. விழுந்த அதே படுகுழிகளில் வீழ்ந்து பாராளுமன்ற கிரெட்டினிசம் (Cretinism - உடல் வளர்ச்சி தடைபட்டு அறிவு மந்தமும் ஏற்பட்ட நிலை) என்ற நோய்க்கு இரையாகாது தப்பித்தனரா?'' இல்லை என்பதற்கு அவர்களது அறிக்கைகள் மற்றும் நடைமுறைகள் ஏராளமாய் சான்று பகருகின்றன. ஒரு உதாரணம் போதுமானது. ''வருகின்ற தேர்தல்களில் நமக்கு எங்கே வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளனவோ, அந்தக் குறிப்பான பகுதிகளில் நமது வெகுஜன இயக்கங்களை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.'' (லிபரேஷன் மே 1988) பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட போராட்டம் பாராளுமன்ற போராட்டத்துக்குப் பணி செய்ய வேண்டுமாம்! இதை பாராளுமன்ற கிரெட்டினிசம் என்றழைக்காமல் வேறு என்னவென்று சொல்வது? ஆனால், இ.க.க.விற்கும், வி.எம்.க்கும் ஒரு வித்தியாசம் உண்டு. 1950-களில் இ.க.க.நடத்தியது ஓர் அவல நாடகம் (Tragedy) இன்று அதைப் பின்பற்றும் வி.எம். குழுவினருடையதோ ஓர் அபத்த நாடகம் (a farce)

## கொசுறு

வி.எம்.குழுவின் 'லிபரேஷன்' ஏடு 1990 அனைத்திந்திய கட்சி சிறப்பு மாநாட்டு பிரதிநிதிகளின் கருத்தை அறியப் பயன்படுத்தியது. அதாவது, பல்வேறு பிரச்சினைகளில் கட்சியின் பல்வேறு மட்டத் தலைவர்கள் என்ன கருதுகிறார்கள் என்றறியப் பயன்படுத்தியது. அவர்களிடம் ஒரு கேள்வி குறிப்புத் தரப்பட்டது. விடைகள் சதவீதத்தில் தரப்பட்டன. கோர்பியின் கிளாஸ் நாஸ்த்தினால் 'ஒரு சரியான சோசலிச ஜனநாயகத்திற்கு' ஊக்குவிக்கப்பட்ட தலைவர்கள் (69-ல் 57 சதவீதத்தினர்) இந்தக் கருத்துக் கணிப்பில் பங்கேற்றனர். கீழே அதிலிருந்து இரு கேள்விகளும், அதற்கு தரப்பட்ட விடைகளையும், அதில் சதவீதத்தையும் குறிப்பிட்டிருக்கிறோம்.

(1). அண்மை மாற்றங்கள் குறித்து நான் கருதுவது:

(a) மார்க்சியம் - லெனினியம் இன்னும் சரியானது 73.5%

(b) மார்க்சியம் - லெனினியம் ஒட்டு மொத்த மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டால்தான் பொருத்தமானதாகும் - 3.5%

(c) மார்க்சியம் பிற முற்போக்குப் போக்குகளுடன் இணைந்தால்தான் விஞ்ஞான சோசலிசத்தைக் காக்க முடியும் 16%

(d) கருத்து இல்லை - 7%

(2) கீழ்க்கண்ட நாடுகள் சரியான சோசலிசப் போக்கில் உள்ளன என்று நான் கருதுகின்றேன்.

(i) சோவியத் யூனியன் - 30%
(ii) கியூபா - 26%
(iii) சீனா - 75.5%
(iv) அல்பேனியா - 8.5%
(v) பல்கேரியா - 10.5%
(vi) வியட்நாம் - 23%
(vii) யூகோஸ்லேவியா - 10.5%
(viii) கொரியா - 19.0%
(ix) கருத்து இல்லை - 10.5%
(x) எதுவுமே இல்லை - 5%

(லிபரேஷன், செப்.1990)

நமது வாசகர்கள் இவர்களை நையாண்டி செய்து ஒழித்துவிட வேண்டாம் என்று வேண்டுகிறோம்.

(இ.பொ.க. (மா-லெ), (கட்சி ஐக்கியம்) - குழுவின் மைய அமைப்புக் கமிட்டியின் இதழான 'கட்சி ஐக்கியம்' - தொகுதி VIII, எண்:3, டிசம்பர் 1990-ல் வெளிவந்த கட்டுரை, பக்கங்கள் 25-32)

www.padippakam.com

# லெனினது 'உயிலும்', ஸ்டாலின் மீதான அவதூறுகளும்.

உலகக் கம்யூனிசத் தலைவர்களிலேயே மிகவும் ஏச்சுக்கும், அவதூறுக்கும், சாடலுக்கும், வெறுப்பிற்கும் ஆளாக்கப்பட்டவர் ஸ்டாலின்தான். அவரது வாழ்நாளிலும் சரி, அவரது இறப்பிலிருந்து இன்று வரையிலும் சரி, கம்யூனிச எதிர்ப்பாளர்களின் கடுமையான தாக்குதலுக்கு ஆளாகி வந்தவர் வருபவர் ஸ்டாலின் மட்டுமே. சோவியத் யூனியன் என்ற அசுரப் பிறவியை அழிக்கவிடாமல் ஸ்டாலின் காப்பாற்றிவிட்டாரே என்பதினால் ஏகாதிபத்தியவாதிகள் கொண்ட ஆத்திரமும், ஏமாமையும்தான் இதற்கு மூலகாரணமாகும். கட்சிக்குள் இருந்த முதலாளித்துவப் பாதையாளர்கள், இரட்டை வேடதாரிகள், மற்றும் துரோகிகளான டிராட்ஸ்கியவாதிகள், புகாரினிஸ்டுகள், ஜினவேவ் - காமனேவ் கள் முதலியானோரின் துரோகங்களை ஸ்டாலின் சிறிது இரக்கமின்றி தோலுரித்தார்; களை எடுத்தார். எனவேதான், அந்த எட்டப்பர்களின் இன்றைய வாரிசுகளான புதிய இடதுகளும், நவீன திரிபுவாதிகளும் ஸ்டாலினை மிகவும் காட்டமாக தாக்கிவருகின்றனர்.

சொந்த வாழ்க்கையில் சில சீர்திருத்தங்களை மட்டும் செய்து கொண்டு, அதேசமயத்தில், குட்டி முதலாளித்துவ வாழ்க்கைச் சுகங்களை சுவைத்துக் கொண்டிருப்பது; குட்டி முதலாளித்துவ வாழ்க்கையையும், கௌரவத்தையும் பங்கப்படுத்தாத கட்சிப் பணிகளை மட்டும் செய்வது. அதே சமயத்தில் கட்சித்தலைமை மற்றும் அந்தஸ்திற்கு வர குறிவைத்து செயல்படுவது. இதற்காக திரைமறைவு நடவடிக்கைகளில் இறங்குவது, இப்படிப்பட்ட நபர்கள் மற்றும் வாய்வீச்சுக்காரர்களை இனம் காணவும், களை எடுக்கவுமான கட்சி விதிகளையும், கட்டுப்பாடுகளையும், ஸ்தாபன முறைகளையும் ஸ்டாலின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி வகுத்து, கறாராக அமுல்படுத்தியது. இரட்டை வாழ்க்கை வாழமுடியாத புரட்சி வேடதாரிகள் ஸ்டாலினுக்கு எதிராக அணி வகுத்தனர்.

கட்சிக்கு வெளியே எப்படி வேண்டுமானாலும் பேச 'சுதந்திரம்', யாருடன் வேண்டுமானாலும் கூடிக்குலாவ 'சுதந்திரம்' வேண்டும் என்பவர்களையும், கோஷ்டிவாதிகளையும் கட்சிக்குள் இருந்து தூக்கி எறிந்துவிட்டது ஸ்டாலின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சி. இதனால் புரட்சி அந்தஸ்து இழந்து அல்லது பெற முயன்று தோல்வியுற்றவர்கள் ஸ்டாலினைத் தூற்றினர். இவர்களும், மேலே கூறிய புரட்சி வேடதாரிகளும், அவர்களின் இன்றைய அவதாரங்களும் ஸ்டாலினை தொடர்ந்து சாடி வந்தனர்; வருகின்றனர்.

சர்வாதிகாரி, கொடுங்கோலர், தனிநபர் துதியைத் திட்டமிட்டு வளர்த்தவர், அதிகாரவெறி பிடித்தவர், சூழ்ச்சிகளும் - தந்திரங்களும் நிறைந்தவர், சித்தாந்த தலைவரல்ல, கோஷ்டிகளை மோதவிட்டு தந்திரம் செய்தே தலைமையைத் தக்கவைத்துக் கொண்டவர், லெனினையே ஏமாற்றியவர், லெனினது விருப்பத்தை நிறைவேற்றாமல் சதி செய்தவர் என்றெல்லாம் ஸ்டாலின் மீது எண்ணிலடங்கா அவதூறுகள்.

அவற்றில் ஒன்றுதான் லெனின் எழுதிய 'மரணசாசனத்தை' (பார்க்க இணைப்பு) கட்சிக்குக் காட்டாமலேயே ஸ்டாலின் மறைத்துவிட்டார் என்பதாகும். இந்த 'உயிலில்' ஸ்டாலின் மிக மோசமானவர்; அவரைப் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று லெனின் கட்சிக்குக் கட்டளையிட்டிருந்தார். லெனினின் இந்த இறுதி விருப்பத்தை நிறைவேற்றவிடாமல் ஸ்டாலின் சதி செய்து தனது பதவியை தக்கவைத்துக் கொண்டார். இதுதான் கம்யூனிச எதிரிகள் மற்றும் துரோகிகளின் அவதூறாகும். அப்பட்டமான இந்த பொய்யை ஸ்டாலின் தனது உரை ஒன்றில் மிகத் தெளிவாக அம்பலப்படுத்தினார். அந்த உரை (டிராட்ஸகிய எதிர்ப்பு அன்றும் இன்றும்) கீழே தரப்பட்டுள்ளது.

லெனினது இந்த 'உயில்' 1924 ம் வருடம் மே **மாதம்** நடந்த மத்தியக் கமிட்டி கூட்டத்தில் படிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட டிராட்ஸ்கி இந்த 'உயில்' பற்றி எவ்விதக் கருத்தும் தெரிவிக்காமல் மௌனமாகவே இருந்தார். (பார்க்க தமிழக டிராட்ஸ்கியவாதிகள் வெளியிட்டுள்ள டிராட்ஸ்கியின் வரலாறு. தொகுப்பும் மொழிபெயர்ப்பும் கதிர் ராமசாமி) அடுத்து நடந்த 13-வது கட்சிக் காங்கிரசில் இந்த 'மரண சாசனம்' விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

''பதிமூன்றாவது காங்கிரசு லெனினது உயிலை விவாதித்தது. லெனினுடைய விமர்சனத்திற்கு செவி சாய்ப்பார்; தனது குறையை நீக்கிக்கொள்வார் என்ற நம்பிக்கையில் ஸ்டாலினைத் தொடர்ந்து அப்பதவியிலிருத்த காங்கிரசு முடிவு செய்தது.'' (20 வது கட்சிக் காங்கிரசிற்கு குருஷ்சேவ் அளித்த 'இரகசிய' அறிக்கையிலிருந்து)

எனவே, லெனினது 'உயில்' கட்சிக் காங்கிரசிலேயே விவாதிக்கப்பட்டது. ஸ்டாலின் அதை மறைக்கவில்லை. லெனினது 'உயிலை'ப் படித்த பின்பும் காங்கிரசு ஸ்டாலினையே பொதுச் செயலாளராக ஏகமனதாக தேர்ந்தெடுத்தது; கடைந்தெடுத்த ஸ்டாலினிய விரோதிகளான டிராட்ஸ்கியவாதிகளும், குருஷ்சேவும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் இதை ஒப்புக்கொள்கிறார்கள். அதே சமயம் லெனினது 'உயிலை' பகிரங்கமாக வெளியிடுவதில்லை என்றும் காங்கிரஸ் தீர்மானித்தது; ஏனென்றால், இந்தக் கடிதத்தை (உயில் அல்ல) மத்தியக் கமிட்டிக்கே, அதன் பரிசீலனைக்கே லெனின் எழுதினார். லெனின் நோய்வாய்ப்பட்டு படுத்தபடுக்கையாக இருந்த போது இதுபோன்று பல கடிதங்களை அவர் எழுதி உள்ளார். இவை பரிசீலனைக்குத் தானே ஒழிய கட்டளைகள் அல்ல. லெனினது கருத்தை மத்தியக் கமிட்டியோ, காங்கிரசோ ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம்; இதுதான் கம்யூனிஸ்டு கட்சியின் நடைமுறையாகும். தலைவருக்குத் தனி அதிகாரம் எதுவும் அங்கில்லை; ஆனால் கம்யூனிசத் தலைவர்களைக் கொச்சைப்படுத்தி, இழிவுபடுத்தி கம்யூனிசத்தை ஒழித்துவிடமுயலும் முதலாளித்துவாதிகள்தான் 'கட்டளை' என்றும், 'உயில், மரண சாசனம்' என்றும் தங்களது பார்வை நிலையில் வைத்து எழுதுகிறார்கள்.

1925 இறுதியில் நடந்த 14 வது கட்சிக் காங்கிரசில் கலந்து கொண்ட டிராட்ஸ்கி, காங்கிரசு நடந்த 15 நாட்களும் மௌனமாகவே இருந்தார் என்றும், அது ஏன் என்று விளங்கவில்லை என்றும் டிராட்ஸ்கியவாதிகள் எழுதியுள்ளனர் (பார்க்க ஷெ புத்தகம்) எனவே, ஸ்டாலின் தனது எதிர்ப்பாளர்களை ஒடுக்கவில்லை; டிராட்ஸ்கியின் மௌனத்திற்குக் காரணம் அவரது சொந்தத் திட்டமும், கண்ணோட்டமும் காரணம் என்பதை டிராட்ஸ்கியவாதிகள் ஒத்துக்கொள்கின்றனர். லெனினது 'உயில்' தொடர்பாக ஸ்டாலின் மீது வீசப்பட்ட அவதூறுக்கு டிராட்ஸ்கியை வைத்தே ஸ்டாலின் பதில் சொல்ல வைத்துள்



படிப்பகம்

www.padippakam.com

வதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது. உண்மைகள் இவ்வாறிருக்க, டிராட்ஸ்கியின் நேரடி வாரிசுகளும், அவரை ஞானத் தந்தையாக ஏற்றுக்கொண்டுள்ள புதிய இடதுகளும், மானசீக குருவாக போற்றும் பல கோஷ்டிகளும் லெனின் 'உயில்' பற்றிய பழைய பொய்யை அவ்வப்போது அவிழ்த்துவிட்டு வருகிறார்கள். அதற்கெல்லாம் ஆணித்தரமான நோக்கத்துடன் தான் ஸ்டாலினது உரை வெளியிடப்படுகிறது.

இரண்டாவதாக, இன்னொரு முக்கியமான விஷயத்தையும் ஸ்டாலின் இக்கட்டுரையில் சுட்டிக்காட்டுகிறார் கட்சியை விவாதமன்றமாக ஆக்கக்கூடாது என லெனின் கூறியதையும், கட்சிக்குள் கோஷ்டிகளை அனுமதிக்க முடியாது என்று லெனின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி எடுத்த முடிவையும் ஸ்டாலின் எடுத்துக்காட்டுகிறார். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தாவது காங்கிரசிற்கு முன்புவரை கட்சியில் கோஷ்டிகள் இருந்தன. அவ்வாறு அனுமதிக்கப்பட்டிருந்தது தவறு என்று லெனினும், போல்ஷ்விக் கட்சியும் பத்தாவது காங்கிரசில் சுயவிமர்சனத்தோடு முடிவெடுத்ததை நாம் நினைவில் கொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில், இங்கே தமிழ்நாட்டில், போல்ஷ்விக் என்ற பெயரில் இயங்கும் ம.யு.(போ) குழுவினர், பத்தாவது காங்கிரசிற்கு முன் சோவியத் கட்சி இருந்த நிலைமையை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு இங்கேயும் கட்சியை விவாதமன்றமாகவும், கோஷ்டிகளின் கூட்டணியாகவும் மாற்ற முயற்சிப்பது எவ்வளவு கேலிக்கூத்து என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

ஸ்டாலின் பொதுச்செயலாளராக ஏகமனதாகவே தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரை எதிர்த்து டிராட்ஸ்கியவாதிகளும், புகாரினிஸ்டுகளும், பிற எதிர்ப்பாளர்களும் நேர்மையாக ஜனநாயக முறைகளில் போராடியதில்லை. கட்சிக்கும், சோவிய அரசிற்கும் எதிராக சதிவேலைகளில்தான் ஈடுபட்டனர் என்பதை ஆதாரங்களுடன் தெளிவுப்படுத்துகிறார் ஸ்டாலின்.

குருஷ்சேவ் போன்றவர்கள் ஸ்டாலினை வானளாவப் புகழ்ந்து தள்ளினார்கள். ஆனால் ஸ்டாலினது இறப்பிற்குப் பின் குருஷ்சேவ் தான் 'ஸ்டாலினை சாத்துவது' (Stalin bashing) என்பதை சோவியத் யூனியனிலிருந்து தொடங்கி வைத்தார். ஆனால், அதே சமயத்தில் ஸ்டாலின் தலைமை இல்லாவிட்டால், உலகப்புரட்சியின் தளமாக விளங்கிய முதல் சோசலிச நாடு அன்றே அழிக்கப்பட்டிருக்கும் என்ற உண்மையை மட்டும் அவர்களால் மறைக்க முடியவில்லை என்பது மட்டுமல்ல, அதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு பாராட்டும் அளவிற்கு ஸ்டாலினது தலைமையின் பயன்பாடு இருந்ததையும் பார்க்க முடிகிறது. இதோ, 20 வது கட்சிக் காங்கிரசில் குருஷ்சேவ் முன்வைத்த கருத்து:

"டிராட்ஸ்கியவாதிகள், வலதுசாரிகள், முதலாளித்துவ தேசியவாதிகள் ஆகியோர்களுக்கு எதிரான சித்தாந்தவகைப் போரில் ஸ்டாலினது சிறந்த பங்கை நாம் ஏற்கிறோம். டிராட்ஸ்கிய ஜினோவிய கும்பலும், புகாரினியவாதிகளும் முதலாளிய மீட்புக்காகவும், உலகளவிலான முதலாளிகளிடம் சரணடைவதற்குமான அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தனர். அவர்களின் கோட்பாடு 1928 29 ல் நிலைபெற்றிருந்தால், இன்று நாம் பெற்றிருக்கும் கனரக தொழிற்சாலைகள், கூட்டுப் பண்ணைகளைப் பெற்றிருக்க முடியாது. இவர்களோடு சித்தாந்தப் பிரச்சினையில் கடுமையாக மோதிக் கொண்ட காலத்தில் கூட மிகக்கடுமையான அடக்குமுறைகள் அவர்கள் மீது ஏவி விடப்படவில்லை. ஆனால் சில ஆண்டுகளுக்குப் பிறகு, நமது நாட்டில் சோசலிசத்தின் அடிப்படை கட்டப்பட்டபொழுது கட்சிக்கு எதிரான அரசியல் இயக்கங்கள் அரசியல் ரீதியாக சுரண்டும் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்ட பொழுது - அவர்கள் மீது கடுமையான அடக்குமுறை தொடங்கியது."

ஸ்டாலினது இந்த சாதனைக்கு அடிப்படை, 'ஒரு நாட்டில் சோசலிசத்தைக் கட்டியமைக்க முடியும்' என்ற லெனினியக் கோட்பாட்டை ஸ்டாலின் உறுதியாக பற்றி நின்றதோடு, அதைச் சாதிக்க விடாப்பிடியாகவும் போராடினார். எதிர்ப்புகள், துரோகங்களைக் கண்டு துளியும் துவளவில்லை; சஞ்சலப்படவில்லை ஸ்டாலின். 'ஒரு நாட்டில் சோசலிசம்' என்ற கோட்பாட்டின் பிரிக்க முடியாத அங்கமாக உள்ள 'ஏகாதிபத்திய யுகத்தில் யுத்தங்கள் தவிர்க்க முடியாது' என்ற லெனினிய ஆய்வுரையை மறுதலிப்பதையே நவீன புரட்டல்வாதம் தனது உயிராகக் கொண்டுள்ளது. நவீன புரட்டல்வாதத்தை ஒழிப்பதும், அதற்காக ஸ்டாலினது தலைமையை உயர்த்திப் பிடிப்பதும் மிகவும் அவசியமாகிறது.

-ஆசிரியர் குழு
புரட்சிப்புயல்

# லெனின் 'உயில்'.

(கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த லெனின் 1922 டிசம்பர் 24-லிலும், 1923 சனவரி 4-ம் தேதியும் வாய்மூலம் சொல்லி கட்சிக் காங்கிரசிற்கு எழுதப்பட்ட கடிதங்கள்)

டிசம்பர் 24, 1922.

நான் மேலேகூறிய மத்தியக் கமிட்டியின் ஸ்திரத்தன்மை என்பதன் கீழ் பிளவிற்கு எதிரான நடவடிக்கைகளைத்தான், பொதுவாக இத்தகைய நடவடிக்கைகள் ஏற்கப்படலாம் எனில் நான் குறிப்பிட்டேன். ருஸ்கயா மீஸில் பத்திரிகையில் வெண்படையின் ஒருவன் (அது எஸ்.எஸ். ஓல்டென்பர்க் என நினைக்கிறேன்) முதலாவதாக, சோவியத் ருஷ்யாவிற்கு எதிரான அவர்களது ஆட்டத்தைப் பொறுத்தமட்டில் நமது கட்சியின் பிளவை எதிர்நோக்கியபோதும், இரண்டாவதாக, இந்தப் பிளவிற்காக கட்சியினுள்ளே இருக்கும் ஆழ்ந்த கருத்து மாறுபாடுகளை எதிர்நோக்கியபோதும் அவன் கூறியது சரியே.

நமது கட்சி இரு வர்க்கங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளது. எனவே, இதன் ஸ்திரத்தன்மைக்கு வாய்ப்புள்ளது. இந்த இரு வர்க்கங்களிடையே இணக்கம் இல்லாவிடில் இது கீழே விழுவது தவிர்க்க இயலாததாகும். அந்த சந்தர்ப்பத்தில், ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்வதோ, நமது மத்தியக் கமிட்டியின் ஸ்திரத்தன்மையைப் பற்றி வாதிப்பதோ பயனற்றது.



படிப்பகம்

www.padippakam.com

அந்த சந்தர்ப்பத்தில், எந்த நடவடிக்கையாலும் பிளவைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால், இது மிக தொலைவில் இருக்கக்கூடிய ஒரு சம்பவம். மிகவும் நம்பத்தகாத சம்பவமாதலால் இதைப்பற்றி பேசவே வேண்டாம் என நான் நம்புகிறேன்.

அண்மை வருங்காலத்தில் பிளவிலிருந்து உத்திரவாதம் அளிக்கக்கூடிய ஸ்திரத்தன்மையைத்தான் நான் குறிப்பிடுகிறேன். இங்கே முற்றிலும் தனிநபர் குணநலன்களைப்பற்றிய சில கருத்துக்களை எடுத்துக்கொள்ள நான் உத்தேசித்துள்ளேன்.

ஸ்திரத்தன்மைப் பற்றிய பிரச்சினையில் இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் முக்கியமானது, மத்தியக் கமிட்டி உறுப்பினர்களான ஸ்டாலின், டிராட்ஸ்கி ஆகியோர்தான் என நான் எண்ணுகிறேன். எனது கருத்துப்படி இவர்களுக்கிடையேயான உறவுகள் பிளவு அபாயத்தின் அதிகப்பாதியாகும். இப்பிளவைத் தவிர்க்கலாம்; இதற்கு எனது கருத்துப்படி மற்றவற்றோடு கூட மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 50 வரை, 100 வரை உயர்த்துவது துணைபுரிய வேண்டும்.

பொதுச்செயலாளராக ஆக்கப்பட்ட தோழர் ஸ்டாலின் தனது கைகளில் எல்லையற்ற அதிகாரத்தை ஒருமுனைப்படுத்தியுள்ளார். இந்த அதிகாரத்தை அவரால் எப்போதுமே போதுமான எச்சரிக்கையுடன் பயன்படுத்த முடியுமா என எனக்கு உறுதியில்லை. மறுபுறம், ரயில்வே மக்கள் கமிசாரகத்தைப் பற்றிய பிரச்சினையில் மத்தியக் கமிட்டிக்கு எதிரான தனது போராட்டம் நிரூபித்தபடி தோழர் டிராட்ஸ்கி மிகச் சிறந்த திறமைகளை மட்டும் பெற்றிருக்கவில்லை; தற்போதைய மத்தியக் கமிட்டியில் தனிப்பட்ட முறையில் இவர்தான் மிகத் திறமையுள்ள நபர் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அளவிற்கதிகமான தன்னம்பிக்கையுள்ள, காரியத்தின் நிர்வாக சம்பந்தமான பக்கத்தின் மேல் அளவிற்கதிகமான ஆர்வத்தைக் காட்டுகின்ற நபர்.

இன்றைய மத்தியக் கமிட்டியின் இரு மாபெரும் தலைவர்களின் இந்த இரு குணங்களும் வேண்டுமென்றே இல்லாவிடினும் பிளவிற்குக் கொண்டுவிடத்தக்கவை; இதைத் தடுக்க கட்சி நடவடிக்கைகளை எடுக்காவிடில் பிளவு திடீரென நேரும்.

மத்தியக் கமிட்டியின் மற்ற உறுப்பினர்களை அவர்களது தனிப்பட்ட பண்புகளுக்கேற்ப தொடர்ந்து நான் சித்தரிக்கப்போவதில்லை. ஜினோவியெவ், காமனெவ் ஆகியோர் அக்டோபரில் இழைத்த தவறுகள் நிச்சயமாக தற்செயலானவை அல்ல என்றாலும், டிராட்ஸ்கி மீது போல்ஷ்விசம் இல்லாத தன்மைக்காக எந்த அளவு குறைவாக தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டப்பட இயலுமோ, அந்த அளவிற்கே அவர்கள் மீதும் அதற்காக குற்றம் சாட்ட இயலும் என்பதை மட்டும் நினைவு கூற விரும்புகிறேன்.

மத்தியக் கமிட்டியின் இளம் உறுப்பினர்களில் புஹாரின் மற்றும் பியாத்தக்கோவைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எனது கருத்துப்படி இவர்கள் (மிக இளைய சக்திகள் மத்தியிலே) மிக மகத்தான சக்திகளாவர்; இவர்களைப் பொறுத்தமட்டில் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். புஹாரின் கட்சியின் மதிப்புமிக்க, பெரிய சித்தாந்தவாதி மட்டுமல்ல; இவர் நியாயமாக கட்சி முழுவதன் செல்லப்பிள்ளையாகக் கருதப்படுகின்றார். ஆனால், இவரது சித்தாந்தக் கருத்தோட்டங்களை மிகுந்த சந்தேகத்துடன்தான் மார்க்சியக் கருத்துக்களுடன் சேர்க்க முடியும். ஏனெனில், இவற்றில் விதண்டாவாத அம்சமுள்ளது. (அவர் இயக்கவியலை எப்போதும் கற்றதில்லை; எனது கருத்துப்படி அவர் அதை எப்போதுமே முற்றிலும் புரிந்து கொண்டதில்லை.)

அடுத்து பியாத்தக்கோவ் - சந்தேகத்திற்கிடமின்றி இவர் மகத்தான வேட்கையையும், மகத்தான திறமைகளையும் உடைய மனிதர். ஆனால் நிர்வாகத்துறையிலும், காரியத்தின் நிர்வாகம் பற்றிய பகுதியிலும் மிக அதிகமாக ஆர்வமுடையவராதலால், ஆழ்ந்த பிரச்சினையில் இவரை நம்புவது கடினம்.

இந்த மகத்தான விசுவாசமுள்ள இரு ஊழியர்களும் தங்களது ஞானத்தைப் பூர்த்தி செய்யவும், தங்களது ஒருதலைப்பட்சமான அம்சத்தை மாற்றிக் கொள்ளவும் சந்தர்ப்பத்தைக் கண்டுபிடிக்கமாட்டார்கள் என்ற அனுமானத்தில்தான் மேற்கூறிய இரு கண்டனங்களும் நிகழ்காலத்திற்காக என்னால் கூறப்பட்டன.

*-லெனின்*

## 1922-ம் ஆண்டு டிசம்பர் 24-ம் தேதி எழுதப்பட்ட கடிதத்திற்கான பிற்சேர்க்கை.

*ஸ்டாலின் மிகவும் முரட்டுத்தனமானவர்; இந்தக் குறை கம்யூனிஸ்டுகளாகிய நம்மிடையே நிலவும் உறவுகளில் பொறுத்துக் கொள்ளக்கூடியதே. ஆனால், பொதுச்செயலாளர் பதவியில் இது பொறுக்க இயலாததாகிறது. எனவே, ஸ்டாலினை இந்த இடத்திலிருந்து மாற்றி வேறொரு நபரை இந்த இடத்திற்கு அமர்த்தும் முறையைப் பற்றிச் சிந்திக்கும்படி நான் தோழர்களுக்கு முன்மொழிகிறேன்; அந்த நபர் ஸ்டாலினிடமிருந்து ஒரே ஒரு முறையில் மட்டும் மாறுபட்டு விஞ்சி நிற்பார் - அதாவது அவர் அதிக பொறுமையுடையவராயும், அதிக பொறுப்புமிக்கவராயும், தோழர்கள்பால் அதிக கவனமும், மரியாதையும் உடையவராயும், குறைந்த அளவு முரண்டு பிடிக்கும் தன்மையுடையவராயும், இது போன்ற குணங்களையுடையவராயும் இருப்பார். இந்த அம்சம் அற்பமான சில்லறை விஷயமாகத் தென்படக்கூடும். ஆனால், பிளவிலிருந்து பாதுகாக்க வேண்டிய கண்ணோட்டத்திலிருந்தும், ஸ்டாலினுக்கும், டிராட்ஸ்கிக்கும் இடையிலுள்ள பரஸ்பர உறவுகளைப் பற்றி என்னால் மேலே குறிப்பிடப்பட்ட கண்ணோட்டத்திலிருந்தும் இது அற்பமான விஷயமல்ல, அல்லது தீர்மானகரமான முக்கியத்துவத்தைப் பெறக்கூடிய அற்பமான விஷயமாகும் என நான் நினைக்கிறேன்.*

*-லெனின்*

*1923-ம் ஆண்டு சனவரி 4-ம் தேதி.*



படிப்பகம்

www.padippakam.com

# ஸ்டாலின் பதில்கள்

## ட்ராட்ஸ்கிய எதிர்த்தரப்பு: அன்றும் இன்றும்

**-ஸ்டாலின்**

*(சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி மற்றும் மத்தியக் கட்டுப்பாட்டுக் குழுவின் கூட்டுப் பிளீனத்தில், அக்டோபர் 23, 1927-ல் ஆற்றிய உரை)*

I

### சில சிறிய பிரச்சினைகள்

தோழர்களே! எனக்கு அதிக நேரமில்லை; எனவே தனித்தனி பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிறேன்.

முதலில் எனது பங்களிப்பைப் பற்றி: இங்கே நீங்கள் ஸ்டாலின் மீது எப்படி அவதூறுகளை முழுபலத்துடனும் எதிர்த்தரப்பாளர்கள் அள்ளி வீசுகிறார்கள் என்பதைக் கேட்டிருப்பீர்கள்; அது என்னை வியப்பிலாழ்த்தவில்லை. தோழர்களே, ஏன் ஸ்டாலின் மீது குறிவைத்தே பெரும்பாலான தாக்குதல்களும் இருக்கின்றனவெனில், ஸ்டாலினுக்கு நம்மையும் சில தோழர்களைவிட நன்றாகவே எதிர்த்தரப்பினரின் சூழ்ச்சிகளைப் பற்றி தெரியும்; துணிவோடு கூறுகிறேன்; ஸ்டாலினை ஏமாற்றுவது அத்தனை எளிதன்று. எனவேதான் ஸ்டாலினைக் குறிவைத்தே பிரதானமாக அவர்கள் தாக்குகிறார்கள். நன்று; திருப்தியடையும் வரை அவதூறுகளை அள்ளி வீசட்டும்!

யார் இந்த ஸ்டாலின்? ஸ்டாலின் ஒரு சாதாரண மனிதன்தான். லெனினை எடுத்துக்கொள்ளுங்கள். ட்ராட்ஸ்கியால் தலைமை தாங்கப்பட்ட ஆகஸ்ட் முகாம் எதிர்த்தரப்பினர் இன்று ஸ்டாலினைச் செய்வதைவிட அன்று மேலும் கடுமையாக லெனினை அவதூறு செய்தது யாருக்குத்தான் தெரியாது? உதாரணமாக, ட்ராட்ஸ்கி கூறுவதையே கேளுங்கள்.

''லெனினால், திட்டமிட்டுத் தூண்டிவிடப்படும் கலவரக் கூச்சல் பொருளற்ற வெறித்தனமாய்த் தோன்றுகிறது. ருஷ்யத் தொழிலாளர் இயக்கத்தின் எல்லாப் பிற்போக்கு அம்சங்களையும் தொழில்முறையாகப் பயன்படுத்திக் கொள்வதில் கைதேர்ந்த பழம்புள்ளிதான் லெனின்.'' (பார்க்க செக்திஸேக்கு ட்ராட்ஸ்கியின் கடிதம், ஏப்ரல் 1913)

மொழிநடையைக் கவனியுங்கள் தோழர்களே! மொழிநடையைக் கவனியுங்கள்! ட்ராட்ஸ்கி எழுதுகிறார்; எழுதுவது லெனினைப்பற்றி.

மாபெரும் லெனினைப் பற்றி இத்தனைக் கீழ்த்தரமான முறையில் எழுதிய ட்ராட்ஸ்கி, லெனினுடைய காலணி கயிறுகளை (Shoe lace) முடிச்சுப்போடக்கூட தகுதியற்ற ட்ராட்ஸ்கி, இன்று லெனினின் எண்ணற்ற மாணவர்களில் ஒருவராகிய தோழர் ஸ்டாலின் மீது அவதூறு அள்ளி எறிவதில் என்ன ஆச்சரியமிருக்கிறது, தோழர்களே?

அதுமட்டுமல்ல, எதிர்த்தரப்பினர் தங்கள் முழு வெறுப்பையும் என்மீது கொட்டுவதன் மூலம் என்னைக் கௌரவிக்கிறார்கள் என்று கருதுகிறேன். அது அப்படித்தான் இருக்க முடியும். கட்சியை உடைக்க நினைக்கும் எதிர்த்தரப்பினர் லெனினியக் கட்சிக் கோட்பாடுகளின் அடிப்படைகளைப் பாதுகாக்கும் ஸ்டாலினைப் புகழ்கிறார்கள் என்றால்தான், அது வினோதமாய், தாக்குதல் தொடுப்பதாய் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

லெனினது 'உயிலை'ப் பற்றி எடுத்துக்கொள்வோம். எதிர்த்தரப்பினர் இங்கே கூச்சலிட்டனர் - நீங்களும் கேட்டீர்கள். லெனினது 'உயிலை' மத்தியக் கமிட்டி 'மறைத்து' விட்டது என்று கூறினர். இவ்விஷயத்தை நாம் பலமுறைகள் மத்தியக் கமிட்டி மற்றும் மத்தியக் கட்டுப்பாட்டுக் குழுவின் பிளீனங்களில் விவாதித்து இருக்கிறோம் என்பதை அறிவீர்கள். (பலமுறைகள் - ஒரு குரல்). யாரும் எதையும் மறைக்கவில்லை என்பதும், லெனினது 'உயில்' கட்சியின் 13-வது காங்கிரசுக்கு எழுதப்பட்டது என்பதும், அக்காங்கிரசில் அது வாசிக்கப்பட்டது என்பதும், (ஆமாம்-குரல்கள்) அக்காங்கிரசு ஏகமனதாக அவ்வுயிலை வெளியிட வேண்டாம் என்று முடிவு செய்ததும், மற்றெல்லாவற்றையும்விட லெனினே இது வெளியிடப்பட விரும்பவில்லை என்பதும், வெளியிடும்படி கோரவில்லை என்பதும் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. எதிர்த்தரப்பினருக்கும் இவ்விஷயங்கள் நம்மைப் போலவே நன்கு தெரியும். ஆயினும் மத்தியக் கமிட்டி அவ்வுயிலை மறைத்துவிட்டதாகக் கூறும் மூர்க்கம் அவர்களிடம் உள்ளது.

லெனினது 'உயில்' பற்றிய விவகாரம் நான் நினைப்பது சரியானால் 1924-லேயே வந்துவிட்டது. ஈஸ்ட்மேன் என்றொரு முன்னாள் அமெரிக்கக் கம்யூனிஸ்ட் இருந்தார். இவர் பின்பு கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர். இக்கனவானுக்கு மாஸ்கோவில் சில ட்ராட்ஸ்கியவாதிகளுடன் தொடர்பு ஏற்பட்டு லெனினது 'உயில்' குறித்து சில வதந்திகளையும், கிசுகிசுக்களையும் மனதில் வாங்கிக் கொண்டு வெளிநாடு சென்று, அங்கே 'லெனினது மறைவுக்குப் பிறகு' என்றொரு நூலை வெளியிட்டார்.

அந்நூலில் மத்தியக் கமிட்டி, கட்சி, சோவியத் ஆட்சி பற்றி தூற்றி எழுதியிருந்தார். சாராம்சமாக, அதில் நமது கட்சியில் மத்தியக் கமிட்டி லெனினது உயிலை மறைத்துவிட்டதாக எழுதியிருந்தார். இந்த ஈஸ்ட்மேனுக்கு ட்ராட்ஸ்கியுடன் ஒரு சமயத்தில் தொடர்பு இருந்தது என்ற உண்மையை வைத்துக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு, ட்ராட்ஸ்கியைப் பற்றிநின்றும், எதிர்த்த ரப்பைக் குறிப்பிட்டும், 'உயில்' பற்றி நமது கட்சிக்கு எதிராக அவதூறான அறிக்கைகளுக்கு ட்ராட்ஸ்கியை ஈஸ்ட்மேன் பொறுப்பாக்கி இருந்தார். இதனால் அரசியல் தலைமைக்குழுவின் உறுப்பினர்களான நாங்கள், இந்த ஈஸ்ட்மேனிடமிருந்து ட்ராட்ஸ்கி தன்னை வேறுபடுத்திக் கொண்டு மறுப்பு தெரிவிக்க வேண்டுமென ட்ராட்ஸ்கியைக் கேட்டுக் கொண்டோம். பிரச்சினை வெளிப்படையாக இருந்ததால் ட்ராட்ஸ்கி, ஈஸ்ட்மேனுடன் வேறுபடுத்திக் கொண்டு மறுப்பு தெரிவித்து பத்திரிகையில் அறிக்கை வெளியிட்டார். இந்த அறிவிப்பு செப்டம்பர் 1925-ல் ''போல்ஷெவிக்'' எனும் பத்திரிகையில், எண்: 16-ல் வெளியிடப்பட்டது.

கட்சியின் மத்தியக் கமிட்டி லெனினது உயிலை மறைக்கிறதா, இல்லையா என்ற விஷயம் பற்றி ட்ராட்ஸ்கி எழுதியதை வாசிக்க அனுமதியுங்கள். ட்ராட்ஸ்கியின் கட்டுரையில் இருந்து இம்மேற்கோளைப் படிக்கிறேன்.

''தனது நூலின் பல்வேறு இடங்களில் ஈஸ்ட்மேன் கட்சியின் மத்தியக் கமிட்டி லெனினால், அவரது இறுதிக் காலத்தில் எழுதிய பல மிகமுக்கிய ஆவணங்களை மறைத்துவிட்டதாக எழுதியிருக்கிறார்கள். (தேசியப் பிரச்சினை குறித்த சில கடிதங்கள்; 'உயில்' என்றழைக்கப்படுவது மற்றும் பிற பற்றியவை) கட்சி, மத்தியக் கமிட்டி மீதான அவதூறு இது என்பதைத் தவிர வேறு பெயரெதுவும் இதற்குக் கிடையாது (அழுத்தம் ஸ்டாலினுடையது). ஈஸ்ட்மேன் சொல்வதிலிருந்து விளாதிமீர் இலியிச் கட்சி அமைப்புக்கு அறிவுரையாக வழங்கியிருந்த அக்கடிதங்களை [illegible]னவை என்பதாக லெனின் கருதியிருந்ததாக [illegible] தோன்றுகிறது. உண்மையில் இது அப்பட்டமான பொய். நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் விளாதிமீர் இலியிச் கட்சியின் முன்னணி அமைப்புக்களுக்கும், காங்கிரசுக்கும் அடிக்கடி ஆலோசனைகள், கடிதங்கள் எழுதிவந்தார். அவை எல்லாம் யாருக்கு முகவரி இடப்பட்டிருந்ததோ அவர்கள் வசம் போய்ச் சேர்ந்தது என்பது சொல்லாமலேயே விளங்கும். அவை 12 மற்றும் 13-வது காங்கிரசில் பிரதிநிதிகளின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டவை. காங்கிரசின் தீர்மானங்கள் மீது அக்கடிதங்கள் தாக்கமேற்படுத்தின. அக்கடிதங்கள் அனைத்தும் வெளியிடப்படவில்லை எனில், அதன் பொருள் அவை வெளியிடும் நோக்கத்துடன் அவரால் எழுதப்படவில்லை என்பதால்தான். விளாதிமீர் இலியிச் உயிலில் எதையும் விட்டுச் செல்லவில்லை. கட்சி மீதான அவரது அணுகுமுறையின் தன்மை, நமது கட்சியின் தன்மை அத்தகைய உயில் ஒன்று இருக்கும் வாய்ப்பையே நிராகரிக்கின்றன. வெளிநாட்டு பூர்ஷ்வாக்கள் மற்றும் மென்ஷிவிக்குகளின் பத்திரிகைகள் வழக்கமாக உயில் என்று குறிப்பிடுவது (உருத்தெரியாது சிதைந்த நிலையில்) அமைப்பு விஷயங்கள் பற்றி லெனினது அறிவுரைகள் அடங்கிய கடிதங்களில் ஒன்று. கட்சியின் 13-வது காங்கிரஸ் மற்றெல்லா கடிதங்களுக்கும் அளித்தது போலவே லெனினது இக்கடிதத்துக்கும் ஆழ்ந்த கவனம் செலுத்தி அப்போதைய சூழ்நிலைமைக்குப் பொருத்தமான முடிவுகளை அதிலிருந்தும் பெற்றது. உயில் மறைக்கப்பட்டது, உயிலில் கூறியது மீறப்பட்டது என்று கூறுவதெல்லாம் விஷமத்தனமான கற்பனையும், விளாதிமீர் இலியிச்சின் மெய்யான விருப்பத்திற்கு எதிரானதும் ஆகும். (அழுத்தம் - ஸ்டாலினுடையது). அவர் படைத்த கட்சியின் நலன்களுக்கு முழுக்க முழுக்க எதிரானதும் ஆகும்.'' (ஈஸ்ட்மேன் 'லெனினது மறைவுக்குப் பிறகு' எனும் நூல் குறித்த ட்ராட்ஸ்கியின் கட்டுரை, போல்ஷெவிக்- எண்:16, செப்டம்பர் 5, 1925, பக்-68)

தெளிவாக இருப்பதாக எண்ணலாம். அது வேறு யாராலும் அல்ல; இதே ட்ராட்ஸ்கியால்தான் எழுதப்பட்டது. எதனடிப்படையில் இன்று ட்ராட்ஸ்கி, காமெனவ், ஜினோவியெவ் ஆகியோர் கட்சி மத்தியக் கமிட்டி லெனினது 'உயிலை மறைத்து' விட்டதாக சாடு விடுகின்றனர்? சாடு விடுவது 'அனுமதிக்கக் கூடியதே'! ஆனால் எங்கே நிறுத்த வேண்டும் என்பது சாடுவிடுபவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

தோழர் லெனினது கூறப்படுகிற அந்த 'உயிலில்' தோழர் ஸ்டாலினின் ''முரட்டுத்தனத்தை''க் கணக்கிலெடுத்து, ஸ்டாலினுக்குப் பதிலாக வேறொருவரை பொதுச்செயலாளராக நியமிக்க ஆலோசனை தந்ததாகக் கூறப்படுகிறது. இது முற்றிலும் உண்மையே. ஆம் தோழர்களே, அப்பட்டமாகவும், வஞ்சகமாகவும் கட்சியை உடைக்க எண்ணுவோரிடம் நான் முரட்டுத்தனமாகவே நடந்து கொள்கிறேன். இதை நான் எப்போதுமே மறைத்ததில்லை. இப்பொழுதும் மறைக்க விரும்பவில்லை. பிளவுபடுத்துவோரிடம் சற்று மென்மையாகவே நடந்து கொள்ள வேண்டியிருக்கலாம். ஆனால் அவ்விஷயத்தில் நான் தேர்ந்தவனில்லை. 13-வது காங்கிரசின் பின் கூடிய முதலாவது பிளீனத்திலேயே மத்தியக் கமிட்டியிடம் கட்சிப் பொதுச் செயலாளரின் பொறுப்புக்களில் இருந்து என்னை விடுவிக்கக் கோரினேன். காங்கிரசே இவ்விஷயத்தைப் பரிசீலித்தது. ஒவ்வொரு பிரதிநிதிக் குழுவும் தனித்தனியே விவாதித்து எல்லாரும் ஏகமனதாக, ட்ராட்ஸ்கி, காமெனவ், ஜினோவியெவ் உட்பட ஸ்டாலினைப் பொதுச் செயலாளராக இருக்கும்படி பணித்தனர்.

நான் என்ன செய்ய முடியும்? என் பதவியைத் துறந்துவிடுவதா? இது என் இயல்பிலேயே இல்லை. நான் எப்பதவியையும் ஒருபோதும் துறக்கவில்லை. எனக்கு அதற்கு உரிமையும் இல்லை. ஏனெனில் அது தான் என்னைவிட்டு ஓடிப்போவதாகும். ஏற்கனவே கூறியதுபோல நான் சுதந்திரமானவனுமன்று. கட்சி ஒரு பணியைச் செய்யும்படி என்னைப் பணித்தால் நான் அதற்குப் பணிந்தே ஆக வேண்டும்.

ஓராண்டு கழித்தும் மறுபடியும் பிளீனத்திடம்



படிப்பகம்

www.padippakam.com

என்னை விடுவிக்கக் கோரினேன். மறுபடியும் என்னை அது பதவியில் இருக்குமாறு பணித்தது.

நான் வேறென்ன செய்ய முடியும்?

அந்த 'உயிலை' வெளியிடுவதைப் பொறுத்த வரை, காங்கிரஸ் அதை வெளியிட வேண்டாமென முடிவு செய்தது. அது காங்கிரசுக்கு அனுப்பப்பட்டிருந்தாலும், அது பிரசுரத்துக்காக எழுதப்படாதது தான் காரணம்.

கட்சி மத்தியக் கமிட்டி, கட்சி மத்திய கட்டுப்பாட்டுக்குழு ஆகியவற்றின் பிளீன முடிவாக 1926-ல், 15-வது காங்கிரசிடம் அந்த ஆவணத்தை வெளியிட அனுமதி கோரினோம். அதே பிளீனத்தில் காமனெவ், ஜினோவியெவ் ஆகியோரது அக்டோபர் புரட்சிக்கு சற்று முந்தைய அவர்களது தவறுகளை வெளிப்படுத்தி கட்சியிலிருந்து வெளியேற்றக்கோரிய லெனினது மற்ற கடிதங்களையும் வெளியிட முடிவெடுத்தோம்.

எனவே, ஆவணங்களைக் கட்சி மறைத்தது என்பது அப்பட்டமான அவதூறேயன்றி வேறில்லை. இந்த ஆவணங்களில்தான் காமனெவ்வையும், ஜினோவியெவ்வையும் கட்சியிலிருந்து வெளியேற்றக்கோரும் கடிதங்களும் உள்ளன. போல்ஷெவிக் கட்சியும், அதன் மத்தியக் கமிட்டியும் உண்மைக்கு ஒருபோதும் அஞ்சியதில்லை. போல்ஷெவிக் கட்சியின் பலம் அது உண்மையைக் கண்டு அஞ்சாதிருப்பதிலும், குறிப்பாக உண்மையை நேருக்குநேர் சந்திப்பதிலும்தான் அடங்கியுள்ளது.

லெனினது ''உயிலை'' துருப்புச்சீட்டாய் பயன்படுத்த எதிர்தரப்பு எண்ணுகிறது. இந்த உயிலைப் படித்தாலே போதும். அவர்கள் அனைவருக்கும் அது துருப்புச்சீட்டல்ல என்பது புரிந்து விடும். மாறாக, லெனினது ''உயில்'' எதிரணித் தலைவர்களுக்கு மரண அடி தருகிறது.

லெனின் தனது உயிலில் ட்ராட்ஸ்கியை 'போல்ஷெவிக் தன்மையற்ற' நபர் எனவும், அக்டோபரில் காமனெவ்வும், ஜினோவியெவ்வும் இழைத்தது 'தற்செயலான' தவறல்ல எனவும் கூறுவது உண்மை. தற்செயலானதன்று என்பதன் பொருள் என்ன? போல்ஷெவிக் தன்மையற்ற ட்ராட்ஸ்கியும், 'தற்செயலாக' தவறிழைக்காத காமனெவ்வும், ஜினோவியெவ்வும் செய்த தவறுகள் திரும்பவும் இழைக்கப்படக் கூடியவை. நிச்சயம் இழைக்கப்படும் என்றும் அரசியல் ரீதியில் (அழுத்தம் - ஸ்டாலினுடையது) நம்பத்தகுதியற்றவர்கள் என்றும் பொருள்.

ஸ்டாலின் தவறிழைத்ததாக, தவறுகளை அவ்வுயில் சுட்டிக்காட்டவோ, குறிப்பாக உரைத்ததோ கூட இல்லை. ஸ்டாலின் முரட்டுத்தனமாக நடந்து கொள்வதாக மட்டுமே உள்ளது. ஆனால் ஸ்டாலினின் முரட்டுத்தனம் அவரது அரசியல் (அழுத்தம் - ஸ்டாலினுடையது) வழியிலோ, இடத்திலோ குறைபாடாகக் கருதப்பட முடியாது.

சம்பந்தப்பட்ட பத்தியை அவ்வுயிலிலிருந்து மேற்கோளாகத் தருகிறேன். ''மத்தியக் கமிட்டியின் மற்ற உறுப்பினர்களை அவர்களது தனிப்பட்ட பண்புகளுக்கேற்ப தொடர்ந்து நான் சித்தரிக்கப் போவதில்லை. ஜினோவியெவ், காமனெவ் ஆகியோரின் அக்டோபரில் இழைத்த தவறுகள் (1917 ம் ஆண்டு அக்டோபர் புரட்சிகான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் காமெனவ், ஜினோவியெவ் ஆகியவர்களின் துரோகச் செயலைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. அக்டோபர் எழுச்சிக்கு ஒரு சில நாட்கள் முன் அவர்கள் அரைகுறை மென்ஷ்விக் பத்திரிகையான நோவயா ஷீஸ்னி ல் அறிக்கையை வெளியிட்டு எழுச்சிக்கான தயாரிப்பைப் பற்றிய போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் கமிட்டி தீர்மானத்தை இடைக்கால முதலாளிய அரசாங்கத்திற்குக் காட்டிக் கொடுத்தனர்) நிச்சயமாக தற்செயலானவை அல்ல என்றாலும், ட்ராட்ஸ்கி மீது போல்ஷ்விசம் இல்லாத தன்மைக்காக எந்த அளவு குறைவாக தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டப்பட இயலுமோ, அந்த அளவிற்கு, அவர்கள் மீதும் அதற்காக குற்றம் சாட்ட இயலும் என்பதை மட்டும் நினைவு கூற விரும்புகிறேன்.''

II

## எதிர்த்தரப்பினரின் ''விவாதப்பொருள்''

அடுத்த கேள்வி. மத்தியக் கமிட்டி எதிர்த்தரப்பினரின் 'விவாதப்பொருளை' ஏன் வெளியிடவில்லை. கட்சியும், மத்தியக் கமிட்டியும் 'உண்மை'க்கு அஞ்சுவதாக ஜினோவியெவ்வும், ட்ராட்ஸ்கியும் கூறுகின்றனர். இது உண்மையா? நிச்சயமாக இல்லை. அதற்கும் மேலாக, கட்சியும், மத்தியக் கமிட்டியும் உண்மைக்கு அஞ்சுவதாகக் கூறுவது அபத்தமானதாகும். நம்மிடம் மத்தியக் கமிட்டி, மத்தியக் கட்டுப்பாட்டுக்குழு பிளீனங்களின் எழுத்துப்பூர்வ அறிக்கைகள் உள்ளன. இவ்வறிக்கைகள் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டு கட்சி உறுப்பினர்கள் மத்தியில் சுற்றுக்கு விடப்பட்டுள்ளன. அவற்றில் எதிர்த்தரப்பினரின் உரைகளும், கட்சியின் - பிரதிநிதிகளின் உரைகளும் சேர்ந்தே உள்ளன. அவை பல பத்தாயிரக்கணக்கான, லட்சக்கணக்கான உறுப்பினர்களால் படிக்கப்படுகின்றன. (குரல்கள் - ஆமாம்! உண்மை!) நாம் உண்மைக்கு அஞ்சினால் அந்த ஆவணங்களை சுற்றுக்கு விட்டிருக்க வேண்டாமே. இந்த ஆவணங்களின் உண்மைத் தன்மையே உறுப்பினர்கள் மத்தியக் கமிட்டியின் நிலைப்பாடுகளையும், எதிர்த்தரப்பினரின் நிலைப்பாடுகளையும் சேர்த்து ஒப்பிட்டு தாமே முடிவெடுக்க உதவுகின்றன என்பதாகும். இதுவா உண்மைக்கு அஞ்சுதல்?

அக்டோபர் 1926-லும் எதிர்த்தரப்பினர் இப்பொழுது போலவே கிளம்பி மத்தியக் கமிட்டியும், கட்சியும் உண்மைக்கு அஞ்சுவதாகவும், தங்களது 'விவாதப்பொருளை' மறைப்பதாகவும், இன்னும் இதைப் போலவும் அடித்துப் பேசினர். அதனால்தான் மாஸ்கோவிலும் (அவியாப்ரிபோர் தொழிற்சாலையை



படிப்பகம்

www.padippakam.com

நினைவு கூறுங்கள்) லெனின் கிராடிலும் (புட்டிலோவ் தொழிற்சாலையை நினைவு கூறுங்கள்) கட்சி அணிகள் மத்தியில் ஊடுருவினர். சரி என்ன நடந்தது? தொழிற்சாலையின் கம்யூனிஸ்ட் தொழிலாளர்கள் எதிர்த்தரப்பினருக்கு செம்மையாகக் கொடுத்தார்கள். கொடுத்த வேகம் தாங்காது எதிர்த்தரப்பின் தலைவர்கள் களத்தைவிட்டே ஓட வேண்டியதாகிவிட்டது. ஏன் அப்பொழுதே எல்லா கட்சி யூனிட்டுகளுக்கும் சென்று - மத்தியக் கமிட்டியா, எதிர்த்தரப்பா - யார் உண்மைக்கு அஞ்சாதவர்கள் என்று பார்க்கவில்லை? ஏனெனில் அவர்களுக்கு மெய்யான (கற்பனையான 'உண்மை' அல்ல) உண்மையைக் கண்டு நடுக்கம் வந்துவிட்டது.

இப்பொழுது? நேர்மையாகக் கூறினால் இப்பொழுது கட்சி யூனிட்டுகளினையில் ஒரு விவாதம் நடந்து கொண்டிருக்கவில்லையா? எதிர்த்தரப்பினரின் குறைந்தது ஒருவரையாவது கொண்ட ஒரு யூனிட்டை போய், கடந்த மூன்று, நான்கு மாதங்களில் எதிர்த்தரப்பினர் பேசாமல், விவாதங்கள் இல்லாமல் போன, குறைந்தது ஒரு கூட்டமாவது நடத்தப்பட்டதைப்போ காட்டுக்காட்டுங்கள் பார்க்கலாம். கடந்த 3, 4 மாதங்களில் கட்சி யூனிட்டுகளில் சாத்தியமானபோதெல்லாம் எதிர்த்தரப்பினர் மாற்றுத் தீர்மானங்கள் கொண்டுவர முயன்றது ஓர் உண்மையில்லையா? (குரல் - முற்றிலும் உண்மை). பிறகு ஏன் ட்ராட்ஸ்கியும், ஜினோவிவெவ்வும் கட்சி யூனிட்டுகளிடம் சென்று தங்களது கருத்துக்களை விளக்கிக் கூற முற்படவில்லை?

ஒரு தனிச்சிறப்புத்தன்மை வாய்ந்த உண்மைச் சம்பவம். இவ்வாண்டு ஆகஸ்டில் மத்தியக் கமிட்டி, மத்தியக் கட்டுப்பாட்டுக்குழு - இவற்றின் ப்ளீனங்களும் முடிந்தபின், ட்ராட்ஸ்கியும், ஜினோவிவெவ்வும் மத்தியக்கமிட்டிக்கு ஆட்சேபணை இல்லையெனில் மாஸ்கோவில் செயல் வீரர்களின் ஒரு கூட்டத்தில் பேச அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். மத்தியக் கமிட்டி இதற்கு ஆட்சேபணை இல்லை என்றும், ஆனால் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் என்ற முறையில் மத்தியக் கமிட்டியின் முடிவுகளை எதிர்த்துப் பேசக்கூடாது என்ற நிபந்தனையையும் பதிலாய் அளித்தது. (இந்தப் பதில் கடிதம், உள்ளூர் அமைப்புகள் மத்தியில் சுற்றுக்கும் விடப்பட்டது). ஆனால் என்ன நடந்தது? அவர்கள் தங்கள் கோரிக்கையைக் கைவிட்டனர். (சிரிப்பலை)

ஆமாம் தோழர்களே, நம்மிடம் உண்மைக்கு அஞ்சாதவர்கள் உள்ளனர். ஆனால் அவர்கள் மத்தியக் கமிட்டியோ அல்லது கட்சியோ அல்ல; மாறாக, எதிர்த்தரப்பின் தலைவர்கள்தான்!

நிலைமை இப்படி இருக்க, மத்தியக் கமிட்டி எதிர்த்தரப்பினரின் 'விவாதப்பொருளை' ஏன் வெளியிடவில்லை?

முதலாவதாக, ட்ராட்ஸ்கியின் குழுவையோ அல்லது எந்தக் குழுவையோ மத்தியக் கமிட்டி அதிகாரபூர்வமாக அங்கீகரிக்க விரும்பவில்லை. அதற்கு அந்த உரிமையுமில்லை. 10-வது காங்கிரஸ் தீர்மானத்தில் லெனின், 'ஒற்றுமை பற்றி' என்னும் தலைப்பில் ''விவாதமேடை'' இருப்பது குழுவாதம் இருப்பதன் மிக முக்கிய அறிகுறிகளில் ஒன்று என்றார். ஆயினும் 10-வது காங்கிரசின் தீர்மானத்தை மீறி எதிர்த்தரப்பினர் அத்தகைய ''விவாதமேடை'' ஒன்றின் அடிப்படையை உருவாக்கி அதை வெளியிடவும் கோரினர். ஒருவேளை அதை மத்தியக் கமிட்டி வெளியிட்டிருந்தால் அதற்கு என்ன பொருள்? எதிர்த்தரப்பினரின் குழுவாத முயற்சிகளில் மத்தியக் கமிட்டியும் பங்கு கொள்வதற்கு விரும்புகிறது; 10-வது காங்கிரசின் தீர்மானத்தை மீறுகிறது என்றும் பொருளாகும். ம.க.-வும், ம.க.குழுவும் இதற்கு இணங்க முடியுமா? நிச்சயமாக, கண்கூடாகத் தெரிவதுபோல், சுயமரியாதையுள்ள எந்த ம.க.வும் அப்படிப்பட்ட குழுவாத நடவடிக்கையை மேற்கொள்ள இயலாது. (குரல்கள்: முற்றிலும் உண்மை!)

மேலும், இதே 10-வது காங்கிரஸ் தீர்மானத்திலேயே, ''ஒற்றுமை பற்றி'' பகுதியில் லெனின், ''விதிவிலக்கின்றி ஒன்று அல்லது மற்றொரு விவாதப் பொருள் அடிப்படையின் கீழ் திரண்டுள்ள எல்லாக் குழுக்களையும் உடனடியாகக் கலைத்துவிட காங்கிரஸ் கட்டளையிடுகிறது'' எழுதியுள்ளார். ''இந்த முடிவைக் கடைப்பிடிக்காதவரும் கட்சியிலிருந்து நிச்சயமாக உடனடியாய் நீக்கப்படுவர்'' என்றும் எழுதியுள்ளார். இவ்வழிகாட்டுதல் தெளிவானதும், தீர்க்கமானதும் ஆகும். மத்தியக் கமிட்டியும், மத்திய கட்டுப்பாட்டுக் குழுவும் எதிர்த்தரப்பினரின் 'விவாதப்பொருளை' பிரசுரித்திருக்குமேயானால், அது விதிவிலக்கின்றி ஒன்று அல்லது மற்றொரு 'விவாதப்பொருளின்' அடிப்படையில் அமைந்த அனைத்துக் குழுக்களையும் கலைப்பது என்று பொருளாகுமா? நிச்சயமாக இல்லை. மாறாக, ம.க.வும், ம.க.குழுவுமே குழுக்களைக் கலைப்பதற்கு மாறாக அவற்றுக்கு எதிர்த்தரப்பினரின் 'விவாதப்பொருள்' அடிப்படையிலான ஒன்றிணைவுக்கு வழிவகுத்ததாகிவிடும். கட்சியைப் பிளவுபடுத்தும் திசையில் ம.க.வும், ம.க.குழுவுமே அத்தகைய அடியை எடுத்து வைக்க முடியுமா? நிச்சயமாக அவர்களால் முடியாது.

இறுதியாக, எதிர்த்தரப்பினரின் 'விவாதப்பொருளோ' கட்சிக்கு எதிராக அவதூறுகளை மட்டுமே கொண்டுள்ளது. இவற்றை வெளியிடுவது கட்சிக்கும், அரசுக்கும் ஈடுகட்ட முடியாத தீங்கையே விளைவிக்கும்.

எதிர்த்தரப்பின் 'விவாதப்பொருளில்' நமது கட்சி அந்நிய வர்த்தக ஏகபோகத்தையும், எல்லாக் கடன்களுக்கும் (எனவே போர்க்கடன்களுக்கும்) பணத்தைத் திருப்பித் தந்து ஒழித்துவிட விரும்புவதாகக் கூறப்பட்டுள்ளது. இது எல்லோருக்கும் - நமது கட்சிக்கும், அரசுக்கும், நமது உழைக்கும் வர்க்கத்திற்கும் - எதிரான இழிவான அவதூறு எனத் தெரியும். இத்தகைய 'விவாதப்பொருளை' வெளியிட்டிருந்



படிப்பகம்

www.padippakam.com

நாம் என்ன ஆகி இருக்கும்? சர்வதேச முதலாளித்துவம் நம்மீது அதிகரித்த நெருக்கடிகளைத் திணிக்கும். நம்மால் ஏற்கனவே முடிவாகாத சலுகைகளைக் கோரியிருக்கும். (உதாரணம்: அந்நிய மூலதன ஏக போகஒழிப்பு, போனஸ்கள் நீட்டிப்பு (முதலியவை) நம்மீது போர்த்தொடுப்பதாய் அச்சுறுத்தியிருக்கும்.

மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்களான டிராட்ஸ்கி, ஜினோவியெவ் போன்றோர் நமது கட்சியைப் பற்றி பொய்யான அறிக்கைகளை உலகமெங்கும் ஏகாதிபத்தியங்களுக்கு அனுப்பும்போது, அந்நிய மூலதன ஏகபோகம் உட்பட நமது கட்சி அதிகமாய் சலுகைகளை வழங்கத் தயாராயிருப்பதாய் உறுதியளிக்கும்போது, அதற்கு ஒரே ஒரு பொருள்தான் இருக்க முடியும். முதலாளித்துவக் கனவான்கள் போல்ஷெவிக் கட்சியை நெருக்கடிக்கு உள்ளாக்குவர்; அவர்கள் போர்த்தொடுக்கப்போவதாய் மிரட்டுவர்; போல்ஷெவிக்குகளுக்குப் போதுமான நிர்ப்பந்தம் தரும்போது எல்லாச் சலுகைகளுக்கும் இணங்குவர் எனப் புரிந்து கொள்வர்.

ஏகாதிபத்தியவாதிகளிடம் நமது கட்சியைப் பற்றி ஜினோவியெவ்வும், டிராட்ஸ்கியும் வழங்கிய பொய்யான அறிக்கைகள், வெளிநாட்டுக் கொள்கையில் நமது பிரச்சினைகளை அதிகரிப்பதற்கானவை - இதுதான் எதிர்த்தரப்பின் 'விவாதப் பொருளின்' சாராம்சமாகும்.

இது யாருக்குத் தீங்கு விளைவிக்கும்? நேரடியாகவே இது சோவியத் சோசலிசக் குடியரசுக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும், நமது அரசுக்கும் தீங்கு விளைவிப்பதாக இருக்கும்.

இது யாருக்கு நன்மையளிக்கும்? எல்லா நாட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்கும் நன்மையளிக்கும்.

இப்பொழுது உங்களைக் கேட்கிறேன்; மத்தியக் கமிட்டி இப்படி ஒரு சூழ்ச்சியைப் பிரசுரிக்க ஒப்புக்கொள்ள முடியுமா? முடியாது.

எதிர்த்தரப்பினரின் 'விவாதப் பொருளை' வெளியிட மத்தியக் கமிட்டி மறுத்ததற்கு இத்தகைய கருத்துக்களே காரணமாக இருந்தன.

III

## விவாதங்கள், எதிர்த்தரப்புகள் பற்றிப் பொதுவாக லெனின்

அடுத்த கேள்வி. லெனின் எல்லாப்பொழுதிலும், எப்போதும் விவாதங்களுக்கு ஆதரவாக இருந்தார் என்று ஜினோவியெவ் ஆவேசமாக நிரூபிக்க முயன்றார். அவர் பத்தாவது காங்கிரசின் முன் வெவ்வேறு ஆதாரங்களின் மீது நிகழ்ந்த விவாதங்களைப் பற்றியும், காங்கிரசில் நிகழ்ந்தவற்றைப் பற்றியும் குறிப்பிட்டார். ஆனால் 10-வது காங்கிரசுக்கு முன் நிகழ்ந்த விவாதத்தை லெனின் தவறென்று கருதியதைக் குறிப்பிட "மறந்து"விட்டார். லெனினால் 10-வது காங்கிரசுக்கென எழுதப்பட்ட "கட்சி ஒற்றுமை பற்றி" என்ற தீர்மானம் கட்சி வளர்ச்சிக்கு வழிகாட்டுதலாய் அமைந்ததாகும். அதில் அவர் 'விவாதமேடைகளைப்'பற்றி விவாதிப்பதைத் தடுக்கவில்லை. ஒன்று அல்லது மற்றொரு 'விவாதமேடை' அடிப்படையிலான குழுக்களைத்தான் கலைக்க உத்தரவிட்டார். இதை ஜினோவியெவ் குறிப்பிட 'மறந்து'விட்டார். 10-வது காங்கிரசில், எதிர்காலத்தில் கட்சிக்குள் எதிர்த்தரப்புகளைத் "தடை" செய்வதற்கு ஆதரவாக லெனின் பேசியதையும் "மறந்து"விட்டார். கட்சியை "விவாத மன்ற"மாக மாற்றுவது ஒருபோதும் அனுமதிக்கப்பட முடியாது என்று லெனின் கருதியதைக் குறிப்பிட "மறந்து"விட்டார்.

உதாரணமாக, 10-வது காங்கிரசின் முன் நடந்த விவாதம் குறித்து லெனினின் மதிப்பீடு என்ன என்று பார்க்கலாம்.

"இன்று இவ்விஷயத்தைப் பற்றி பேசும் வாய்ப்பு ஏற்கனவே எனக்குக் கிட்டியது. ஆகவே இங்கே கூடியிருக்கும் உங்களில் பலர் இவ்விவாதத்தை மீண்டும் தொடங்குவது அதிகப்படியான விஷயம் என்று கருதக்கூடும் என்கிற எச்சரிக்கை உணர்வுடன் பார்க்கிறேன். ஆயினும் இந்த மாதிரி திரும்பத் தொடங்கும் வாய்ப்பு முற்றிலும் அனுமதிக்கப்படக் கூடாத விஷயம் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. நாம் இந்த விவாதத்தை மீண்டும் அனுமதித்ததில் சந்தேகத்துக்கு இடமின்றி தவறிழைத்து விட்டோம் என்றே கருதுகிறேன்" (பார்க்க: பத்தாவது காங்கிரசின் கூட்டக் குறிப்புகள், பக்-16)

லெனின் பத்தாவது காங்கிரசில், காங்கிரசுக்குப் பின் வரக்கூடிய எதிர்ப்புகள் பற்றி குறிப்பிட்டது பின்வருமாறு: "கட்சியை உறுதிப்படுத்துவது, கட்சிக்குள் எதிர்த்தரப்புகளைத் தடை செய்வது என்பதே இன்றைய சூழ்நிலையில் எடுக்கக்கூடிய அரசியல் முடிவாகும். இப்பொழுது நமக்கு எதிர்த்தரப்புகள் வேண்டாம் தோழர்களே! கட்சிக் காங்கிரஸ் இந்த முடிவை அதாவது, எதிர்த்தரப்புகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்ற முடிவை எடுக்க வேண்டும் என்று கருதுகிறேன். நாம் வேண்டிய அளவு எதிர்த்தரப்புகளை சந்தித்தாகிவிட்டது". (அதே நூல்; பக்-61 மற்றும் 63)

பொதுவாக விவாதங்கள் மற்றும் எதிர்த்தரப்புகள் குறித்த பிரச்சினை பற்றி லெனினது கருத்து இதுவே ஆகும்.

IV

## எதிர்த்தரப்பும் "மூன்றாவது சக்தியும்"

அடுத்த பிரச்சினை டிராட்ஸ்கியவாதிகளின் சட்டவிரோத, கட்சிவிரோத அச்சகத்து "ஊழியர்கள்" சிலருடன் தொடர்புடைய சில வெண்காவலர்கள் பற்றி தோழர் மென்ஷின்ஸ்கி அறிக்கை வெளியிடத் தேவை என்ன?



படிப்பகம்

www.padippakam.com

முதலாவதாக, தமது கட்சி விரோத அறிக்கைகளில் எதிர்த்தரப்பினர் இப்பிரச்சினை பற்றி பரப்பிக் கொண்டிருக்கும் பொய்கள், அவதூறுகளை முறியடிப்பதற்காக, ஷ்செர்பாக்கோவ், ட்வெர்ஸ்கோய் மற்றும் பிறர் போன்ற எதிர்த்தரப்பின் கூட்டாளிகளுடன் ஏதோ ஒருவகையில் வெண்படையினர் தொடர்புடையவர்கள் என்ற அறிக்கையானது, எல்லாவித்திலும் எதிர்த் தரப்பினரை அவதூறு செய்யும் நோக்கத்துடன் சுற்றுக்கு விடப்பட்டதாகவும், அது கற்பனையானதும் புனையப்பட்டதுமாகும் என்று எதிர்த்தரப்பு எல்லோருக்கும் உறுதி அளித்து வருகிறது. தோழர் மென்ஷின்ஸ்கியின் அறிக்கை, கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் எவ்வளவு சந்தேகமின்றி, ட்ராட்ஸ்கியவாத, சட்டவிரோத கட்சி எதிர்ப்பு அச்சக ஊழியர்கள், எதிர்ப்புரட்சி வெண்காவலர்களுடன் தொடர்பு கொண்டவர்கள் என்பதை உணர்த்துகின்றன. எதிர்த்தரப்பினர் இந்த உண்மைகளையும், ஆவணங்களையும் மறுக்க முயலட்டும்.

இரண்டாவதாக, பெர்லினிலிருந்து வெளிவரும் மாஸ்லோவின் ஏடான ''கம்யூனிசத்தின் பதாகை'' பரப்பிவரும் பொய்களை அம்பலப்படுத்துவதற்காக, ஓடுகாலி மாஸ்லோவால் சோவியத் யூனியன் மீது அவதூறு செய்யவும், அதன் தேச ரகசியங்களை முதலாளிகளுக்கு காட்டிக் கொடுக்கவும் வெளியிடப்படும் இந்த அழுக்குப் பிடித்த கந்தலின் கடைசி ஏடு இப்பொழுதுதான் கிடைத்தது. இப்பத்திரிகை, சிதைந்த வடிவத்திலாயினும்கூட, கைது செய்யப்பட்ட வெண்படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களைப் பற்றியும், அவர்களது கூட்டாளிகள் பற்றியும், சட்டவிரோத கட்சி எதிர்ப்பு அச்சகம் பற்றியும் பொதுமக்களுக்குத் தெரிவித்து வருகிறது. (குரல்கள்: அவதூறு!) மாஸ்லோவுக்கு எங்கிருந்து இந்தத் தகவல்கள் கிட்டின? இவை இரகசியமானவை; ஏனெனில் பில்சுட்ஸ்கி பாணியில் சதித்திட்டம் தீட்டிய வெண்படையினரின் குழு மொத்தமும் இன்னும் கைது செய்யப்படவில்லை. இத்தகவல் ட்ராட்ஸ்கி, ஜினோவியெவ், ஸ்மில்கா ஆகிய எதிர்த்தரப்பினருக்கு மத்திய கட்டுப்பாட்டுக் குழுவில் தெரிவிக்கப்பட்டது. சில காலத்துக்கு இந்த பறிமுதல் விவரங்களைப் பிரதி எடுப்பது தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் பிரதி எடுத்துள்ளனர். அதை அவசர அவசரமாக மாஸ்லோவுக்கு அனுப்பியும் உள்ளனர்.

ஆனால், மாஸ்லோவுக்கு இத்தகவல்களை அனுப்புவது என்பதன் பொருள் யாது? அதாவது கைது செய்யப்படாது இன்னும் வெளியில் உள்ள வெண்படையினரை போல்ஷெவிக்குகள் கைது செய்ய உள்ள தகவலைத் தெரிவித்து எச்சரிப்பது என்று பொருளாகிறது.

இப்படி ஒரு செயலைச் செய்வது சரியா? கம்யூனிஸ்டுகளால் அனுமதிக்கப்படக் கூடியதா? நிச்சயமாக இல்லை.

மாஸ்லோவின் ஏட்டில் உள்ள கட்டுரையின் விஷமத்தனமான தலைப்பு, ''ஸ்டாலின் சோவியத் யூனியன் போல்ஷெவிக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பிளக்கிறார்! வெண்படைச் சதி! சோவியத் யூனியனிலிருந்து ஒரு கடிதம்'' என்றுள்ளது. (குரல்கள்: அயோக்கியர்கள்) மாஸ்லோவ், ட்ராட்ஸ்கி, ஜினோவியெவ்வின் பறிமுதல் பொருட்கள் விஷயத்தை வெளியிட்ட பிறகும்கூட, மத்தியக் கமிட்டி மற்றும் மத்தியக் கட்டுப்பாட்டுக் குழு பிளீனத்துக்கு தகவல் அளிக்காமல், பொய்யான கட்டுக் கதைகளையும் மெய்யான விவரங்களையும் ஒப்பிட்டுக் காட்டாது இருக்கமுடியுமா?

அதனால்தான் மத்தியக் கமிட்டியும் மத்தியக் கட்டுப்பாட்டுக் குழுவும் தோழர் மென்ஷின்ஸ்கியை அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்வதை அவசியம் என்று கருதிற்று.

மென்ஷின்ஸ்கியின் அறிக்கையும், இந்த கைப்பற்றப்பட்ட பொருட்களும் எதைக் காட்டுகின்றன? நாம் எப்பொழுதாவதோ, இப்போதோ எதிர்த்தரப்பினர் ராணுவச் சதித்திட்டம் தீட்டுவதாக குற்றம் சாட்டியுள்ளோமா? இச்சதியில் எதிர்த்தரப்பினர் பங்கு பெற்றதாக எப்பொழுதோ, இப்பொழுதோ குற்றம் சாட்டியிருக்கிறோமா? (முரலோவ்! சென்ற பிளீனத்தின்போது நீங்கள் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளீர்கள்). இது உண்மையல்ல, முரலோவ். மத்தியக் கமிட்டியும், மத்தியக் கட்டுப்பாட்டுக் குழுவும் இரண்டு அறிவிப்புகளை - சட்டவிரோத கட்சி எதிர்ப்பு அச்சகத்தைப் பற்றியும், அதனுடன் தொடர்பு கொண்ட கட்சிசாரா அறிவுஜீவிகள் பற்றியும் - வெளியிட்டது. இந்த ஆவணங்களில் எதிர்த்தரப்பினர் ராணுவச் சதியில் ஈடுபட்டதாகக் கூறும் ஒரு சொல்லையோ, ஒரு வரியையோ கூட நீங்கள் காட்ட முடியாது. இந்த ஆவணங்களில் சட்ட விரோத அச்சகத்தை நிறுவியபோது, எதிர்த்தரப்பினர் சில முதலாளித்துவ அறிவுஜீவிகளுடன் தொடர்பு கொண்டதையும், அதில் சில அறிவுஜீவிகள் ஆட்சிக் கவிழ்ப்பு சதித்திட்டம் தீட்டிய வெண்காவலர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்று மட்டுமே மத்தியக் கமிட்டியும், மத்திய கட்டுப்பாட்டுக் குழுவும் குறிப்பிட்டிருந்தன. இப்பிரச்சினையுடன் தொடர்பான பத்தியை மத்தியக் கமிட்டி அரசியல் தலைமைக் குழுவும், மத்தியக் கட்டுப்பாட்டுக்குழுத் தலைமையும் வெளியிட்ட ஆவணங்களிலிருந்து தோழர் முரலோவ் காட்ட முடியுமா என்று கேட்கிறேன். முரலோவால் அப்படியொரு பத்தியைக் காட்டவே முடியாது. ஏனெனில் அப்படியொன்று இல்லவேயில்லை.

நிலைமை இப்படி இருக்க எதிர்த்தரப்பினர் மீது என்ன குற்றங்களைச் சாட்டியுள்ளோம். இப்பொழுதும் சாட்டுகிறோம்?

முதலாவதாக, கட்சியைப் பிளவுபடுத்தும் பாதையில் கட்சி விரோத, சட்ட விரோத அச்சகத்தை நிறுவியது.

இரண்டாவதாக, எதிர்த்தரப்பினர் இந்த அச்ச



படிப்பகம்

www.padippakam.com

கத்தை நிறுவும் நோக்கத்துக்காக முதலாளித்துவ அறிவுஜீவிகளுடன் ஓரணியில் சேர்ந்தனர். இந்த முதலாளித்துவ அறிவுஜீவிகளில் ஒரு பகுதியினர் எதிர்ப்புரட்சி சதிகாரர்களுடன் நேரடியான தொடர்பு கொண்டவர்கள்.

மூன்றாவதாக, முதலாளித்துவ அறிவுஜீவிகளின் உதவியை நாடியதன் மூலமும், அவர்களுடன் சேர்ந்து கொண்டு கட்சிக்கு எதிராக சதித்திட்டம் தீட்டியதன் மூலமும் தன் விருப்பத்துடனோ, விருப்பமின்றியோ, கூறப்படும் ''மூன்றாவது சக்தியால்'' எதிர்த்தரப்பு சூழப்பட்டிருக்கிறது.

எதிர்த்தரப்பு தங்களது சொந்தக் கட்சியைவிட இந்த முதலாளித்துவ அறிவுஜீவிகள் மீதே அதிக நம்பிக்கை வைத்துள்ளது. அவ்வாறு இல்லாவிடில் அது சட்ட விரோத அச்சகத்துடன் தொடர்பு கொண்ட, எதிர்ப்புரட்சி சக்திகளுடன் தொடர்புடையதாகக் கண்டறியப்பட்ட ஷ்செர்பாக்கோவ், ட்வெர்ஸ்கோய், பொல்ஷாக்கோவ் மற்றும் பிறர் உட்பட கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவிக்கக் கோரியிருக்காது.

எதிர்த்தரப்பினர் கட்சி விரோத, சட்ட விரோத அச்சகம் ஒன்றை அமைக்க விரும்பினர். இதற்காக அவர்கள் முதலாளித்துவ அறிவுஜீவிகளின் உதவியை நாடினர். ஆனால் இந்த அறிவுஜீவிகளில் சிலர் அப்பட்டமான எதிர்ப்புரட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட வலையாக அது அமைந்தது. தோழர்களே! எதிர்த்தரப்பினரின் விருப்பம் சார்ந்தோ, சாராமலோ சோவியத் எதிர்ப்பு சக்திகள் அவர்களைச் சுற்றிக் கொண்டு அவர்களின் கட்சிப் பிளவுப் நடவடிக்கைகளைத் தங்களது சொந்த நலன்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள முனைந்தனர்.

ஆகவே கட்சியின் பத்தாவது காங்கிரசின் போதே தோழர் லெனின் கூறியது நிரூபணமாகிவிட்டது. (பார்க்க: பத்தாவது காங்கிரசின் ''கட்சி ஒற்றுமை பற்றி'' எனும் தீர்மானம்). ''மூன்றாவது சக்தி, அதாவது முதலாளிகள் நமது கட்சிக்குள் உள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு எதிர்த்தரப்பினரின் செயல்களை தங்களது வர்க்க நலன்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள முனைவர்'' என்ற அவர் கூறியது சரியானதாகிவிட்டது.

எதிர்த்தரப்பினருடன் தொடர்பின்றியே கூட எதிர்ப்புரட்சி சக்திகள் சில வேளைகளில் சோவியத் அமைப்புகளில் உதாரணமாக, நமது முன்னணிகளில் ஊடுருவியதாக் கூறப்படுகிறது. அது உண்மைதான். இதுபோன்ற விஷயங்களில் சோவியத் அதிகாரிகள் அத்தகைய நபர்களைக் கைது செய்து பின் கட்டுத் தள்ளி விடுகின்றனர். ஆனால் எதிர்த்தரப்பினர் என்ன செய்கிறார்கள்? சட்ட விரோத அச்சகம் தொடர்பாக கைதான முதலாளித்துவ அறிவுஜீவிகள், அவர்கள் எதிர்ப்புரட்சி சக்திகளுடன் தொடர்புடையவர்கள் என்று அறிந்தும்கூட, அவர்களை விடுவிக்கக்கோருகின்றனர். இதுதான் கோளாறு தோழர்களே! இதற்குத்தான் எதிர்த்தரப்பினரின் பிளவுபடுத்தும் வேலைகள் இட்டுச்செல்கின்றன. இத்தகைய எல்லா ஆபத்துகளையும் சிந்திக்காமல், தங்கள் முன் வாய்பிளந்து நிற்கும் படுகுழிகளைச் சிந்திக்காமல் எதிர்த்தரப்பினர் கட்சி மீது அவதூறுகளைக் குவித்து தங்களது முழுபலத்தையும் பிரயோகித்து கட்சியைக் கலைக்கவும், பிளக்கவும் முயலுகின்றனர்.

அரசு உளவு அமைப்புடன் எதிர்ப்புரட்சி சதிவேலைகளைக் கண்டறிந்து உதவ ஒரு பழைய வ்ராங்கெல் (Wrangel) அதிகாரி இருப்பது குறித்து பலத்த சர்ச்சை ஏற்பட்டுள்ளது. எதிர்த்தரப்பின் கூட்டாளிகளான இந்த எல்லா ஷ்செர்பாக்கோவ்களும், டிரேவோர்ஸ்கிகளும் உதவிகோரிய அதே வ்ராங்கெல் அதிகாரி ஓர் அரசு உளவு அமைப்பின் ஏஜெண்ட் என்பது நிரூபணமான பின்னர் எதிர்த்தரப்பினர் தாவுகிறார்கள். ஆனால் இந்தப் பழைய வ்ராங்கெல் அதிகாரி சோவியத் அதிகாரிகளுடன் இணைந்து எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை வெளிக்கொணர உதவுவது ஏதாவது தவறு என்று கூற முடியுமா? பழைய அதிகாரிகளைத் தங்கள் பக்கம் வென்றெடுத்துக் கொண்டு, எதிர்ப்புரட்சி அமைப்புகளின் முகமூடியைக் கிழித்தெறிய சோவியத் அதிகாரிகள் பயன்படுத்திக் கொள்வதற்கு உள்ள உரிமையை யார் மறுக்க முடியும்?

ஷ்செர்பாக்கோவும், ட்வெர்ஸ்கியும் இந்த அதிகாரியுடன் தொடர்பு கொண்டது அவர் ஒரு அரசு உளவு அமைப்பின் ஏஜெண்ட் என்பதால் அல்ல. அவர் ஒரு பழைய வ்ராங்கெல் அதிகாரி என்பதால்தான். அவர்கள் அங்ஙனம் செய்தது அவரை சோவியத் அரசுக்கு எதிராகப் பயன்படுத்தவும், கட்சிக்கு எதிராகப் பயன்படுத்தவும்தான். அதுதான் விஷயம். எதிர்த்தரப்பினருக்கு துரதிருஷ்டவசமாய் முடிந்ததும் அதுவேதான். இந்தப் புலன்விசாரணைகளின் அடிப்படையில் அரசு உளவு அமைப்பு சென்றபோது எதிர்பாராதவிதமாக ட்ராட்ஸ்கியின் சட்டவிரோத, கட்சி விரோத அச்சகத்தைக் கண்டுபிடித்தனர். ஷ்செர்பாக்கொவ்களும், ட்வெர்ஸ்கோய்களும், பொல்ஷாக்கோவ்களும் எதிர்த்தரப்பினருடன் ஓரணி திரளும்போதே பழைய கோல்சாக் அதிகாரிகளான கோஸ்ட்ரோவ், நோவிக்கோவ் போன்ற எதிர்ப்புரட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டு ஓரணியாக இருந்ததையும் கண்டுபிடித்தனர். இதைத்தான் தோழர் மென்ஷின்ஸ்கி அறிக்கையில் இன்று கண்டீர்கள்.

இதுதான் விஷயம் தோழர்களே; எதிர்த்தரப்பினருடன் உள்ள பிரச்சினை இதுதான்.

எதிர்த்தரப்பினரது பிளவுபடுத்தும் நடவடிக்கைகள் முதலாளித்துவ அறிவுஜீவிகளுடன் தொடர்பு கொள்ள வைத்தது. இந்தத் தொடர்பு எல்லா வகையான எதிர்ப்புரட்சி சக்திகளும் சுலபமாகவே எதிர்த்தரப்பினரைச் சூழ்ந்து கொள்ள ஏதுவாயிற்று. இதுவே அந்தக் கசப்பான உண்மை.

(ஸ்டாலின் படைப்புகள் ஆங்கிலம்; தொகுதி 10, பக்-117 194)